219 மாணவிகளை விடுவிப்பதற்கு 40 மில்லியன் ஸ்ரேலிங் பவுண்ஸ் பக். 14-15

விலை ரூபா 20
பக்கங்கள் 28

# உதயன்

35°c - 28°c
ஓரளவு மேக மூட்டம்

சுடர் 31 | கதிர் 138 | வள்ளுவர் ஆண்டு 2047 | பங்குனி 30, செவ்வாய்க்கிழமை 12.04.2016

# காணாமற்போனோர் தொடர்பில் சர்வதேசப் பங்கேற்பு விசாரணை

## நீதி கிடைக்க அதுவே வழி என வலியுறுத்தி உறவினர்கள் நேற்று திரண்டு போராட்டம்



யாழ்ப்பாணம், ஏப்ரல் 12
வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பது தொடர்பான விசாரணைகள் சர்வதேச நிபுணர்கள் முன்னிலையிலும், அவர்களின் பூரண பங்கேற்புடனும் நடத்தப்படவேண்டும். பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதி கிடைக்க வேண்டும். தவறு செய்தவர்களுக்கு உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும்.
இவ்வாறு மூதூரில் நேற்று இடம்பெற்ற காணாமற் போனோரின் உறவுகளின் போராட்டத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
மேற்படி இரண்டும் சரியாகவும், முறையாகவும், உண்மைத் தன்மையாகவும் அமையும் பட்சத்தில் சர்வதேச தரத்திலான அல்லது சர்வதேசச் சட்ட திட்டங்களுக்கு அமையப் பாதிக்கப்பட்டவர்களுக்கான இழப்பீடு வழங்கப்பட வேண்டும் எனவும் இதன்போது வலியுறுத்தப்பட்டுள்ளது.
திருகோணமலை-மூதூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கடந்தகாலப் போரின்போது காணாமற்போனோர் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் அவர்களின் குடும்பங்களுக்கு உரிய பதில் வழங்குவதுடன், உடனடியாக நிவாரணமும் வழங்கவேண்டும் எனக்கோரி நேற்றுக் காலை ஒன்பது மணிக்கு மூதூர் பிரதேச செயலகத்துக்கு முன்பாக பக். 23

## காணி பறிப்புக்கு எதிராக யாழ்.செயலகம் முற்றுகை

யாழ்ப்பாணம், ஏப்.12
பாதுகாப்புத் தரப்பின் தேவைகளுக்காக யாழ்.மாவட்டத்தில் எந்தவொரு காணி சுவீகரிப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாது என்ற உத்தரவாதத்தை வழங்கவேண்டும் என்று கோரி, யாழ். மாவட்ட அரச அதிபரின் அலுவலகத்தைப் பூட்டி நேற்றுப் போராட்டம் நடத்தப்பட்டது.
ஆனைக்கோட்டை-கூழாவடியில் பொதுமக்களுக்குச் சொந்தமான 16 பரப்புக் காணியைச் சுவீகரிப்புச் செய்வதற்கு முன்னோடியாக நேற்று, காணி அளவீடு செய்வதற்கு நில அளவையாளர்கள் சென்றிருந்தனர். அங்கு மக்கள், போராட்டம் நடத்தியதை அடுத்து, அந்த முயற்சி தடுத்து நிறுத்தப்பட்டது.
போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் யாழ். மாவட்ட செயலகத்துக்குச் சென்று முற்றுகைப் போராட்டம் நடத்தினர். இராணுவத் தேவைக்காக காணிகள் சுவீகரிக்கப்படாது என்று யாழ்.அரச அதிபர் உறுதிமொழி தரும்வரை அங்கிருந்து அகல மாட்டோம் என அவர்கள் தெரிவித்தனர்.

(விரிவு 7 ஆம் பக்கத்தில்)

## பேரவையின் செயற்குழுவிலிருந்து விலகினார் முதலமைச்சர் விக்கி



யாழ்ப்பாணம், ஏப். 12
தமிழ் மக்கள் பேரவையின் செயற்குழுவிலிருந்து விலகிக்கொள்வதாக, வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் நேற்று முன்தினம் இடம் பெற்ற பேரவைக் கூட்டத்தின் நிறைவில் தெரிவித்தார்.
தமிழ் மக்கள் பேரவையின் 4 பேர் கொண்ட நடவடிக்கைக் குழுவை நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கூட்டத்தின் போது, மேலும் 7 பேரை உள்ளடக்கி, 11 பேர் கொண்ட செயற்குழுவாக மாற்றப்பட்டது.
இந்த நிலையிலேயே, குறித்த செயற்குழுவிலிருந்து விலகிக் கொள்வதாக, வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் கூட்டத்தின் நிறைவில் அறிவித்ததாக, அதில் கலந்து கொண்டோர் தெரிவித்தனர்.
(வ-101)

முச்சந்தி முரளி



சர்வதேச மெண்டாலே அலைக்கு அலர்ஜி பாருங்கோ...

## வித்தியா கொலை வழக்கில் மேலும் ஒருவர் கைதாவார்

### குற்றப் புலனாய்வுப் பிரிவு நேற்று நீதிமன்றில் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 12
புங்குடுதீவு மாணவி வித்தியா கூட்டு வன்புணர்வின் பின்னர் படுகொலை செய்யப்பட்ட வழக்கில், மேலும் ஒருவரைக் கைது செய்யவுள்ளதாகக் குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரி, ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.
குறித்த வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் எம்.எம்.றியால் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது வன்புணர்வுக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட முதல் 10 பேரும் நீதிமன்றில் முற்படுத் தப்பட்டனர். பக். 23

## வடக்கின் தீர்வு வரைவு மீதான விவாதம் இன்று

யாழ்ப்பாணம், ஏப். 12
வடக்கு மாகாண சபையின் அரசியல் தீர்வுத் திட்ட வரைவை இறுதி செய்வதற்கான விசேட மாகாண சபை அமர்வு இன்று இடம்பெறவுள்ளது.
வடக்கு மாகாண சபையினால் தயாரிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வுத் திட்டவரைவு, கடந்த 7 ஆம் திகதி இடம்பெற்ற வடக்கு மாகாண சபை அமர்வில் சமர்ப்பிக்கப்பட்டது. இதன்போது வரைவு மீதான விவாதங்கள் பக். 25

## சிவில் நிர்வாகத்துக்குள் ராணுவமே தலையிடாதே

### முல்லை. மாவட்டச் செயலகம் முன் கிராம சேவகர்கள் போராட்டம்

முல்லைத்தீவு, ஏப். 12
கிராம சேவகர்களை அவர்களது கடமையை மேற்கொள்ள விடாது, இடையூறு விளைவித்த இராணுவத்தினரைக் கண்டித்து முல்லைத்தீவு மாவட்ட கிராம சேவகர்களால் நேற்று கவன வீர்ப்புப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.
இதன்போது, 'இராணுவமே சிவில் நிர்வாக நடவடிக்கைகளில் தலையிடாதே', 'இராணுவமே இராணுவக் கடமைகளுடன் மட்டும் நின்றுகொள்', 'இராணுவமே அரச ஊழியர்களின் கடமைகளுக்கு இடையூறு விளைவிக்காதே', 'அரச அதிகாரிகளே உங்களின் கீழ்நிலை உத்தியோகத்தர்கள் தாக்கப்படும்போது மௌனமாக இருக்காதீர்கள்', 'அரசே சிவில் உத்தியோகத்தர்கள் சுயமாக பணியாற்ற உரிய வழிவகை செய்' போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளைத் தாங்கியிருந்தனர்.

(விரிவு 2 ஆம் பக்கத்தில்)

## வெள்ளியன்றும் பொது விடுமுறை

கொழும்பு, ஏப். 12
எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அரச விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டுள்ளது.
இது தொடர்பான அறிவிப்பை உள்நாட்டு விவகார அமைச்சர் வஜிர அபேவர்த்தன வெளியிட்டுள்ளார்.
சிங்கள, தமிழ் புத்தாண்டை பக். 23

## வடக்கு அமைச்சரவையை மாற்ற கோரும் கடிதம் முதலமைச்சரிடம்

### நேற்று மாலை நேரில் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 12
வடக்கு அமைச்சரவையை மாற்றம் செய்யுமாறு கோரிய கடிதம், வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனிடம் நேற்று மாலை கையளிக்கப்பட்டுள்ளது.
ஆளும் கட்சியின் 16 உறுப்பினர்களின் கையொப்பத்துடன் இந்தக் கோரிக்கைக் கடிதம் முதலமைச்சரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
இதன்போது முதலமைச்சர், இது தொடர்பில் பரிசீலிக்கமாட்டேன் என்று கூறவில்லை. கட்சித் தலைவர்களுடனும் பேசவேண்டும் என்று தெரிவித்ததாக, இந்தக் கோரிக்கைக் கடிதத்தைக் கையளித்த [illegible] பக். 24

## தாயை வன்புணர்வு செய்ய முயன்றவரின் முதுகில் கடித்து விரட்டிய ஆண் குழந்தை

கொழும்பு, ஏப்.12
தனது தாயை வல்லுறவு செய்ய முயன்ற நபரின் முதுகில் அழுத்தமாகக் கடித்து, அவனை விரட்டியடித்த மூன்று வயது ஆண் குழந்தையொன்றைப் பற்றிய சம்பவம் பதியத்தலாவ பொலிஸ் நிலையத்தில் பதிவாகியுள்ளது.
இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-
பதியத்தலாவ, மரங்கல, அம்பகஹாவத்தையைச் சேர்ந்த தாய் ஒருவர், தனது பத்து வயது பக். 24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிவில் நிர்வாக நடவடிக்கைகளுக்குள் இராணுவம் தலையிடுவதை நிறுத்துக

## முல்லைத்தீவில் நேற்று கிராம சேவையாளர்கள் போராட்டம்

முல்லைத்தீவு, ஏப்.12

கிராம சேவையாளர்களை அவர்களது கடமையை மேற்கொள்ள விடாது இடையூறு விளைவித்த இராணுவத்தினரைக் கண்டித்து முல்லைத்தீவு மாவட்ட கிராம சேவையாளர்களால் நேற்று கவனீர்ப்புப் போராட்டம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது. இனிமேல் இவ்வாறான சம்பவங்கள் இடம் பெறாமல் இருப்பதை உறுதிப்படுத்த வேண்டும் என்று கிராம சேவையாளர்களால் இதன் போதுகோரிக்கைவிடுக்கப்பட்டது.

கொக்குத்தொடுவாய் வடக்கில், தென்னிலங்கை மீனவர்கள் மாவட்ட நிர்வாகத்துக்குத் தெரியாமல் வாடிகள் அமைத்து தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். இது தொடர்பில் அந்தப் பகுதியிலுள்ள தனியார் காணி உரிமையாளர் கிராம சேவையாளருக்கு முறைப்பாடு செய்துள்ளார்.

அதையடுத்து நிலைமையை ஆராயச் சென்ற கிராம சேவையாளர்கள் மீது தென்னிலங்கை மீனவர்கள் தாக்குதல் நடத்தியதுடன், 593 ஆவது பிரிகேட் இராணுவ அதிகாரி சம்பவ இடத்துக்கு வந்து, கிராம சேவையாளர்களின் அடையாள அட்டையைப் பறித்து அச்சுறுத்தியுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பிலேயே கிராம சேவையாளர்கள் நேற்றுப் போராட்டம் நடத்தியுள்ளனர். முற்பகல் 11 மணியளவில் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்துக்குச் சென்ற கிராம சேவையாளர்கள், மாவட்டச் செயலகம் முன்பாக போராட்டம் நடத்தினர். இதன் போது, "இராணுவமே சிவில்நிர்வாக நடவடிக்கைகளில் தலையிடாதே", "இராணுவமே இராணுவக் கடமைகளுடன் மட்டும் நின்றுகொள்", "இராணுவமே அரச ஊழியர்களின் கடமைகளுக்கு இடையூறு விளைவிக்காதே", "அரச அதிகாரிகளே உங்களின் கீழ்நிலை உத்தியோகத்தர்கள் தாக்கப்படும் போது மௌனமாக இருக்காதீர்கள்", "அரசே சிவில் உத்தியோகத்தர்கள் சுயமாகப் பணியாற்ற உரிய வழிவகை செய்" போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளைக் கிராம சேவையாளர்கள் ஏந்தியிருந்தனர்.

மாவட்டச் செயலகத்தில் அரச அதிபர் இல்லாத காரணத்தால் மேலதிக அரச அதிபரிடம் கிராம சேவையாளர்கள் தமது மனுவைக் கையளித்தனர். அதன் பின்னர் கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்துக்குச் சென்று அங்கும் சில மணி நேரம் போராட்டத்தில் ஈடுபட்டனர். (ற-ஐ-5-102)

# பொட்டு அம்மான் தொப்பியே கொழும்பில் சிக்கியுள்ளதாம்!

## முன்னாள் புலிப் போராளிகள் இருவர் வவுனியாவில் கைது

கொழும்பு, ஏப். 12

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் புலனாய்வுத் துறைப் பொறுப்பாளர் பொட்டு அம்மானின் தொப்பியே லண்டனுக்கு பொதி செய்யப்பட்டு அனுப்பப்படவிருந்த நிலையில் கைப்பற்றப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது. அதனை லண்டனுக்கு பொதி செய்து அனுப்ப முயன்றனர் என்ற குற்றச்சாட்டில், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் போராளிகள் இருவர் வவுனியாவில் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வாரம் கொழும்பிலுள்ள விரைவுத் தபால் நிறுவனம் ஒன்றுக்கு லண்டனுக்கு அனுப்பப் பொதியொன்று கொடுக்கப்பட்டுள்ளது. காட் போர்ட் பெட்டியினாலான அந்தப் பொதியில் ஏற்பட்ட சந்தேகத்தால் அதனைப் பிரித்து அந்த நிறுவனம் சோதனை செய்துள்ளது.

அந்தப் பொதியில் 6 மீன் ரின்கள், 4 பால் ரின்கள், 4 பெட் சீட்டுக்கள் மற்றும் ஒரு காற்சட்டை ஆகியன இருந்துள்ளன. காற்சட்டையின் பொக்கற்றுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், தமிழீழ விடுதலைப் புலிகளின் தொப்பியொன்று இருந்தமை கண்டறியப்பட்டது.

அதைனையடுத்து பொலிஸாருக்குத் தகவல்கள் வழங்கப்பட்டன. குறித்த தொப்பி தமிழீழ விடுதலை புலிகளின் உயர் மட்டத் தலைவர்கள் பயன்படுத்துவது என்பதைக் கண்டறிந்த பொலிஸார், அந்தப் பொதியானது விரைவுத் தபால் நிறுவனத்தின் வவுனியா கிளையில் இருந்து கொண்டு வரப்பட்டது என்றும் இனங்கண்டுள்ளனர்.

அதையடுத்து வவுனியா சென்ற விசேட பொலிஸ் குழு, வவுனியாவில் உள்ள குறித்த நிறுவனத்தின்கிளைக்குசென்றுஅங்கிருந்த சி.சி.ரி.வி. கண்காணிப்பு கமராவை மையப்படுத்தி விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. இதன் போது ஓட்டோவில் வரும் இருவர் அந்தப் பொதியை அங்கு ஒப்படைப்பது உறுதியாகியுள்ளது. அதையடுத்து ஓட்டோவில் வந்தார் என்று சந்தேகிக்கப்பட்ட வவுனியா - மன்னார் பஸ் ஒன்றின் சாரதியான ஒருவரைப் பொலிஸார் முதலில் கைது செய்துள்ளனர். அதனையடுத்து அவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளுக்கு அமைய வவுனியா- பூவரசங்குளத்தைச் சேர்ந்த 38 வயதுடைய மற்றொருவரையும் பொலிஸார்கைதுசெய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இரண்டு சந்தேக நபர்களும் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர்கள் என்று கண்டறியப்பட்டுள்ளது. இவர்களைப் பொலிஸார் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை மேற்கொண்டு வந்தனர். இவர்களை புதுக்கடை 3 ஆம் இலக்க நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தியதையடுத்து, அவர்களை 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

(ற-ஐ-5)

# ஞாபகார்த்த கூட்டம் இன்று

யாழ்ப்பாணம், ஏப்.12

நவ சம சமாஜக் கட்சி, ஆ.க. அண்ணாமலையின் ஞாபகார்த்த கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இல. 121, 2 ஆம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

வல்லிபுரம் திருநாவுக்கரசு தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், விக்ரமபாகு கருணாரட்ன "தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியலமைப்பு மூலம் தீர்வு அவசியம்" எனும் தலைப்பில் நினைவுப் பேருரை வழங்கவுள்ளார். (ற-ஐ-ரி)

# சித்திரைப் புத்தாண்டுக்காக யாழில் அழகு ராணிப் போட்டி

## ஏற்பாடு செய்கிறார்கள் பொலிஸார்

யாழ்ப்பாணம், ஏப்.12

யாழ்ப்பாணப் பொலிஸாரின் ஏற்பாட்டில் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு மாநகர சபை மைதானத்தில் அழகு ராணிப் போட்டி நடத்தப்படவுள்ளது.

குறித்த நிகழ்வுகள் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு இடம்பெறவுள்ள நிகழ்வுகளின் அங்கமாக நடைபெறவுள்ளது என்று யாழ்.பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டி.டி.பி. வீரசிங்க தெரிவித்தார்.

சித்திரைப் புத்தாண்டில் தங்க இல்லம் எனும் தொனிப்பொருளில் ஏப்ரல் 18 ஆம் திகதி அன்று யாழ்ப்பாணம் நகர சபை மைதானத்தில் பல நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

இதற்கமைய சைக்கிள் ஓட்டம், மரதன் ஓட்டம், அழகு ராணிப் போட்டி, கிறீஸ் மரம் ஏறுதல், தலையணைச் சமர், சட்டி உடைத்தல், விநோத உடைப் போட்டி, சங்கீத தொப்பி மாற்றல், யானைக்கு கண் வைத்தல், பணிஸ் சாப்பிடுதல், பலூன் உடைத்தல், தேங்காய் துருவுதல், கயிறு இழுத்தல், றபான் அடித்தல், சாக்கு ஓட்டம் என்பன இடம்பெறவுள்ளன.

இந்தப் போட்டிகள் திறந்த போட்டிகளாகவும், ஆண், பெண், குழந்தைகளுக்குமான போட்டிகளாகவும் அமையவுள்ளன.

நிகழ்வுக்கு வட மாகாண சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் உட்பட பலரும் கலந்து சிறப்பிக்க உள்ளனர்.

இதேவேளை குறித்த நிகழ்வில் தமிழ் மக்களின் கலாசாரத்துக்கு எதிரான அழகு ராணி எனும் போட்டியை பொலிஸார் நிறுத்த வேண்டும் என மகளிர் அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற-ஐ-101)

# இராணுவ ஆட்சியா வடக்கில் நடக்கிறது?

## சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. கேள்வி

யாழ்ப்பாணம், ஏப்.12

வடக்கில் இராணுவ ஆட்சி நடைபெறுகின்றதா ? அல்லது ஜனநாயக ஆட்சி நடைபெறுகின்றதா ? என்ற சந்தேகம் எழுந்துள்ளது என்று வன்னி மாவட்ட நாடாளுமன்றஉறுப்பினர்சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்குத்தொடுவாய் பிரதேசத்தில் வைத்து கிராமசேவையாளர்கள் தென்னிலங்கை மீனவர்களால் தாக்கப்பட்டமை மற்றும் இராணுவத்தினரால் அச்சுறுத்தப்பட்டமையைக் கண்டித்து விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

போரால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்த கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகின்றனர். ஆனால் எவ்வகையான முயற்சிகளை எடுத்தாலும் அவற்றை முன்கொண்டு செல்வதில் பல முட்டுக் கட்டைகளை நல்லாட்சி அரசு ஏற்படுத்தி வருகின்றது.

> கொக்குத்தொடுவாய் பிரதேசத்தில் அத்துமீறி வாடி அமைத் துள்ள தென்பகுதி மீனவர்களால் கிராம சேவையாளர்கள் தாக்கப்பட்டுள்ளனர். இராணுவத்தினரால் அச்சுறுத்தப்பட்டுள்ளனர். இது ஏற்கக் கூடியதல்ல.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கொக்குத்தொடுவாய் பிரதேசத்தில் அத்துமீறி வாடி அமைத்துள்ள தென்பகுதி மீனவர்களால் கிராம சேவையாளர்கள் தாக்கப்பட்டுள்ளனர். அத்துடன் இராணுவத்தினரால் மிகமோசமாக அச்சுறுத்தப்பட்டுள்ளனர்.

இதனை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன். இப்படியான சம்பவங்கள் எமது வட பகுதியில் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இது வருந்தத்தக்க விடயம். தமது கடமையின் நிமித்தம் சென்ற கிராம சேவகருக்கே வட பகுதியில் இவ்வாறான நிலையென்றால் சாதாரண பாமர மக்களின் நிலை என்ன ?

முல்லைத்தீவு மாவட்டத்தில் கிராமப் புறங்களில் இருக்கின்ற மக்கள் இராணுவத்தினரால் மிகப் பெரியதுன்பங்களை அனுபவித்து வருகிறார்கள். இதேவேளை, குறித்த விடயங்கள் தொடர்பாக வன்னிப் பிராந்திய பொலிஸ் மா அதிபருக்கு தெரியப்படுத்தியிருக்கின்றேன். இது தொடர்பாக உரிய முறையில் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளேன்.

குறிப்பாக கிராம சேவகர்களை தாக்கிய இராணுவ அதிகாரியை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்து வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளேன்.

பொலிஸ்மா அதிபர் அது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளார். ஆனாலும் எனக்கு நம்பிக்கையில்லை.

கடந்த ஏழாம் திகதி இலங்கையிலுள்ள அனைத்து கிராம சேவகர்களுக்கும் சமாதான நீதிவான் என்ற அந்தஸ்து வழங்கப்பட்டது. சமாதான நீதிவான் அந்தஸ்து வழங்கப்பட்ட மூன்று தினங்களுக்குள்ளே முல்லைத்தீவு கிராமசேவ கர்களை இராணுவம் மிகக்கடுமையாகத்தாக்கியுள்ளது. இதுதான் இந்த அரசின் நல்லாட்சியா? என்று ஜனாதிபதியிடம் நேரடியாகக் கேட்கவுள்ளேன். இதேவேளை, இப்படியான சம்பவங்கள் வருங்காலங்களில் நடக்கக் கூடாது என்று ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கவுள்ளேன் - என்றுள்ளது. (ற-ஐ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமத்துக்கு ஒரு மில்லியன் திட்டம் முன்மொழிவுகள் சேகரிப்பு ஆரம்பம்

சாவகச்சேரி, ஏப்.12

தென்மராட்சி பிரதேச செயலக பிரிவில் கிராமத்துக்கு ஒரு மில்லியன் ரூபா வேலைத் திட்டத்துக்கான முன்மொழிவுகளைப் பெறும் நடவடிக்கைகள் அந்தந்தப் பிரிவு கிராம அலுவலர்கள், பொருளாதார அபிவிருத்தி அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு பிரிவிலும் கிராம அலுவலர் தலைமையிலான கூட்டங்கள் நடத்தப்பட்டு கிராமத்தில் மேற்கொள்ளவேண்டிய அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் தொடர்பான விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன.

இந்தக் கூட்டங்களில் பிரிவில் உள்ள பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரை பங்குபெறச் செய்து மேற்கொள்ளவேண்டிய அபிவிருத்தி வேலைத் திட்டம் தொடர்பான முன்மொழிவுகள் பெறப்பட்டு அவற்றில் அனைவராலும் முன்னுரிமைப்படுத்தப்படும் வேலைத் திட்டங்கள் பிரதேச செயலகத்தில் கையளிக்கப்படுகின்றன.

பொதுமக்களால் பிரிவில் இனங்காட்டப்படும் மிக அவசியம் எனக் கருதப்படும் வீதிகள், குளங்கள், வாய்க்கால்கள், உட்கட்டுமானங்கள், சிறிய மின்சார வேலைத் திட்டங்கள் போன்றவை பொதுமக்களால் முன்னுரிமைப்படுத்தப்பட்டு வழங்கப்படுகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட கிராமத்துக்கு ஒரு மில்லியன் ரூபா வேலைத்திட்டத்தில் பிரதேசத்தில் உள்ள 60 கிராம அலுவலர் பிரிவுகளிலும் 76 வேலைகள் மாவட்டச் செயலகத்தால் அங்கீகரிக்கப்பட்டு அவை குறித்த காலப் பகுதியில் செய்து முடிக்கப்பட்டன.

இந்த வருடத்தில் கிராமத்துக்கு ஒரு மில்லியன் ரூபா வேலைத்திட்டத்தில் முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்க பொது அமைப்புகள் முன்வந்துள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-ஐ-9)

# வலி.கிழக்கு பிரதேச சபை கழிவகற்றல் வாகன வசதிகள் இன்மையால் பாதிப்பு

வலி.கிழக்கு பிரதேச சபையில் போதிய கழிவகற்றும் வாகன வசதிகள் இன்மையால் கழிவகற்றும் பணிகள் பாதிக்கப்படுகின்றன என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வலிகிழக்கு பிரதேசசபைச் செயலர் திலீபனிடம் கேட்டபோது, பழுதடைந்த வாகனங்களை மீண்டும் பணியில் ஈடுபடுத்த இன்னும் இரண்டு வாரங்கள் தேவைப்படும் எனத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

சபையில் ஏற்கனவே நான்கு உழவு இயந்திரங்கள் கழிவகற்றும் பணியில் ஈடுபட்டன. அதில் இரண்டு உழவு இயந்திரங்கள் பழுதடைந்துள்ளன. மற்றைய இரண்டு உழவு இயந்திரங்களும் இந்தக் கழிவுப் பொருள்களை அகற்றும் பணியில் ஈடுபட்டு வருகின்றன.

சபைக்கு உட்பட்ட பகுதியில் தேங்கும் கழிவுகளை உரிய முறையில் விரைவாக அகற்றுவதற்கு போதிய வாகன வசதிகள் இன்றி, சபை நிர்வாகம் சிரமப்பட்டு வருகின்றது. இந்த இரண்டு உழவு இயந்திரங்களுமே மாறி மாறி கழிவுகளை அகற்றி வருவதோடு, மக்களுக்கான குடிதண் ணீர் விநியோகத்திலும் ஈடுபட்டு வருகின்றன.

குறிப்பாக இருபாலை மற்றும் வளலாயில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கான குடிதண்ணீர் விநியோகம் தினமும் இடம்பெற்று வருகின்றது. இந்தக் குடிதண்ணீர் விநியோகம் பாதிக்கப்படாத வண்ணம் பௌசர் மூலம் தினசரி இடம்பெற்று வருகின்றது.

போதிய வாகன வசதி இன்றி பிரதேச சபை சிரமப்பட்டு வருவதோடு, கழிவகற்றும் பணியிலும் தாமதம் ஏற்பட்டுக் காணப்படுகின்றது. தற்போது பழுதடைந்திருக்கும் மற்றைய இரண்டு உழவு இயந்திரங்களையும் சபை விரைவாக திருத்தியமைத்தும் வருகின்றது.

இந்தத் திருத்தும் பணிகள் இன்னமும் இரண்டு வாரத்துக்குள் நிறைவடைந்துவிடும். அதன் பின்னர் எந்தவித இடையுறுகளும் இன்றி பிரதேச சபையின் கழிவகற்றல் மற்றும் நீர் வழங்கல் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்- என்றார். (ந-ஐ-ரி5,17)

## நாவற்குழியில் பொதுச் சந்தை திறக்கப்பட்டது

நாவற்குழி உப அலுவலக நிர்வாக எல்லைக்குட்பட்ட நாவற்குழி சந்தியருகே புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பொதுச்சந்தை கடந்த வெள்ளிக் கிழமைதிறக்கப்பட்டது. சாவகச்சேரி பிரதேச சபையின் செயலாளர் அருணகிரி வினோராஜ் சம்பிரதாய பூர்வமாக சந்தையை ஆரம்பித்தார்.

நிகழ்வில் நாவற்குழி உபஅலுவலகபொறுப்பதிகாரிநா.தங்கவேல், சாவகச்சேரி பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் டயஸ் மற்றும் பொது மக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். நீண்ட காலமாகப் பொதுச் சந்தை இல்லாத குறை நீக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாவற்குழி சந்தியில் வியாபாரத்தில் ஈடுபட்ட மீன் வியாபாரிகள் நாவற்குழி பொதுச் சந்தையில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று அ.வினோராஜ் தெரிவித்துள்ளார். (ந-ஐ-131)


**பாவித்த ஓடுகள் விற்பனைக்கு**

பாவித்த உறுதியான நல்ல 7,500 ஓடுகள் யாழ்ப் பாணத்தில் விற்பனைக் குண்டு.

தொடர்பு: 076 830 1238
024 222 2572

**தேவை**

எமது நிறுவனத்துக்குப் பொதி செய்வதற்கும், மிக்ஷர் உற்பத்தி செய்வதற்கும் (பெண்கள்). சாரதி மற்றும் விற்பனை பிரதிநிதியும் தேவை (ஆண்கள்- அனுபவம் விரும்பத்தக்கது) மேலதிக விவரங்களுக்கு:

**194, யாழ்.வீதி, மானிப்பாய்.**
**021 320 0639, 077 111 5793**

**Vacancy**

**Customer Care Executive** (Male/Female)

- Must have good proficiency in English (IELTS 4.5 preffred)
- Manageable computer skills
- Full time & Part Time

Walk in interview- Contact Us:
021 221 7971, 076 857 8474
Forward your CV to info.penguin@yahoo.com

**சிறுநீரகம் தேவை**

இரு சிறுநீரகங்களும் செயலிழந்துள்ள 58 வயது தந்தைக்கு "A" அல்லது "O" இரத்த வகையைச் சேர்ந்த ஒருவரிடமிருந்து(வயது 25 முதல் 55 வயது வரை) சிறுநீரகம் எதிர்பார்க்கப்படுகின்றது. **தகுந்த சன்மானம் வழங்கப்படும்.**

011 2364 865, 077 6925 226

**யாழில் ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்**



முழுமையான ஆங்கிலப் புலமைக்கு ஓர் டிப்ளோமா கற்கைநெறி

GET Enrolled........
& Feel the Difference..

**Spoken English**
Veta Fluency Diploma

உங்கள் பதிவுகளை DMI இன்
யாழ்ப்பாணம், நெல்லியடி, சாவகச்சேரி, சுன்னாகம், கிளிநொச்சி
கிளைகளில் உறுதிப்படுத்துங்கள்

10% ... Spoken English <space> ... Type ... 0777173517 ... SMS ...

பாடத்திட்ட மேம்படுத்தல் 2016 இன் ஊடாக DMI இன் Veta Diploma (Part - 1 , Part - 2) ஆங்கில கற்கைநெறியில் கற்கைநெறிக்கு மேலதிகமாக 30 மணி நேர கணினி மூலமான Listening பயிற்சி மற்றும் 30 மணி நேர English conversation class மேலதிகமாக உள்ளடக்கப்பட்டுள்ளது.

**DMI**
COMPUTER EDUCATION

**சர்வதேச ஆங்கிலப் பரீட்சைகள்**

**IELTS**

**IELTS Life Skills (A1,B1)**
திருமணம் செய்து UK செல்பவர்களுக்கு

DMI, British Council இன் அங்கீகரிக்கப்பட்ட IELTS பரீட்சை பதிவு மையமாகும்.

**DMI COMPUTER EDUCATION**

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| No.113, ... வீதி, | M.M.V. வீதி, | No. 174 ... HNB வங்கி அருகில் | No. 130 K. K. S. வீதி, NSB வங்கி அருகில் | No. 19 A9 ... |
| Tel.: 021-222 4403 | Tel.: 021-226 2470 | Tel.: 021-227 0775 | Tel.: 021-224 1970 | Tel.: 021-228 5655 |

**வீடு வாடகைக்கு உண்டு**

மாட்டின் வீதியில் சகல வசதிகளுடன் வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 077 688 2533

**வீடு வாடகைக்கு**

யாழ்.ஸ்ரேசன் வீதியில் சகல வசதிகளுடன் கூடிய நான்கு அறைகள் கொண்ட மேல் மாடி வீடு வாடகைக்குண்டு.

077 999 3434

**அபிவிருத்தி இலட்சாதிபதி**

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 005 சீட்டிழுப்பு திகதி 2016.04.11

வெற்றி இலக்கங்கள்: 03 29 41
இவ்வார இலட்சாதிபதிகள்: 121
வழங்கப்பட்ட மொத்த பரிசு: 23,732,080/=

தொ.பே. 011 4062002 / 0114062062 Web. www.dlb.lk

**SUPER BALL** சுப்பர் போல்

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 486
சீட்டிழுப்பு திகதி 2016.04.11

வெற்றி இலக்கங்கள்: 06 49 52 63 T
அடுத்த திங்கட்கிழமைக்கான ஜக்பொட்: ரூ. 51,548,720/=

தொ.பே. 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

**ஜயோதா**

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1253 சீட்டிழுப்பு திகதி 2016.04.11

வெற்றி இலக்கங்கள்: 11 14 46 64 E
அடுத்த திங்கட்கிழமைக்கான ஜக்பொட்: ரூ. 13,060,880/=

தொ.பே. 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

**வாகனங்கள் ஏல விற்பனைக்கான கேள்விக் கோரிக்கை**

NPYW - 1846 இலக்கமுடைய நல்ல நிலையிலுள்ள பஜாஜ் (BAJAJ) வகை முச்சக்கர வண்டி ஏல விற்பனைக்கு உண்டு. பெற விரும்புவோர் வாரத்தில் ஏழு நாள்களும் காலை 7.00 மணி தொடக்கம் பிற்பகல் 6.00 மணிவரையும் கீழ் காண் முகவரியில் பார்வையிட முடியும் என்பதோடு கேள்வி கோர விரும்புவோர் தங்களது கேள்விக் கோரிக்கையினை மூடு தபாலில் இட்டு இடது பக்க மேல் மூலையில் " பஜாஜ் (BAJAJ முச்சக்கர வண்டிக்கான கேள்வி கோரல்" எனத் தவறாது குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ 25.04.2016 இற்கு முன்னர் எமக்கு கிடைக் கக் கூடிய வகையில் அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**தொடர்புகளுக்கு:**

**தி.இராசநாயகம், தலைவர், மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம். ஜெயந்திநகர், கிளிநொச்சி.**
**தொ.பே.இல: 077 060 4950, 021 492 3118**

**மாபெரும் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியும் (Over Game) சைக்கிள் ஓட்டப் போட்டியும்**

சங்கானை நீற்சாமம் ஞானவைரவர் விளையாட்டுக்கழகம் நடத்தும் மாபெரும் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியும், சைக்கிள் ஓட்டப்போட்டியும் எதிர்வரும் 15.04.2016 வெள்ளிக்கிழமை எமது கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் மற்றும் கழகங்கள் உடனடியாக எமது கழகத்துடன் தொடர்பு கொள்ளவும்

**பரிசுகள்**

**5 பேர் கொண்ட Over Game. கரப்பந்தாட்டம்**
முதலாம் பரிசு - ரூபா 30,000
2ஆம் பரிசு - ரூபா 15,000

**04 பேர் கொண்ட Over Game கரப்பந்தாட்டம்**
முதலாம் பரிசு - ரூபா 40,000
2ஆம் பரிசு - ரூபா 20,000

சைக்கிள் ஓட்டப்போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெறுபவர்களுக்குப் பெறுமதிமிக்க பரிசுகள் வழங்கப்படும்.
-செயலாளர்-

077 459 4712, 076 985 6126, 077 404 6597

**வேலை வாய்ப்பு**

01) களஞ்சியக்காப்பாளர்
தகைமை:- க.பொ.த (உ/த) வர்த்தகப்பிரிவு சித்தி
கணினி அறிவு
இருமொழித் தகைமை
வயதெல்லை 20-35

02) தொழிநுட்ப/விற்பனை அதிகாரி
கல்வித்தகைமை:- துறைசார் தொழிநுட்பக்கல்லூரி சான்றிதழ்
இருமொழித் தகைமை
வயதெல்லை 20-30

முடிவுத்திகதி: 21.04.2016

தொடர்புகளுக்கு: 021 227 1242

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி: முகாமையாளர், ரோக்கியோ ரெடி மிக்ஸ் பிளாண்ட், மி நகரில், யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தாண்டு கால குதூகலத்தில்
சொப்ட்லொஜிக் உடன் இணைந்திடுங்கள்

softlogic max

250 மில்லியனுக்கு மேல்
பெறுமதியான தள்ளுபடிகள்
மற்றும் பரிசுகள்

Panasonic 32" LED



3 வருட
உத்தரவாதம்
6,999/- மாத்திரம்
செலுத்தி
எடுத்துச் செல்லுங்கள்

SAMSUNG 32" LED JOY PLUS



3 வருட
உத்தரவாதம்
6,999/- மாத்திரம்
செலுத்தி
எடுத்துச் செல்லுங்கள்

இலவச DVD

மீதி வட்டியில்லாத
15 மாத தவணைக்
கொடுப்பனவு
முறையில்

DEL Laptop 3543 i3



FREE Printer

ரூ. 85,999/-
ரூ. 5,200/-
15 இலவசம்

6 வது Generation இல்
புதிய மடிக்கணினியை
14,999/- செலுத்தி
எடுத்துச் செல்லுங்கள்

Panasonic 32" LED 32sv7



ஆரம்ப
கட்டணம்
9,999/-
மற்றும் இலவச Home theater (XH166)

இந்தச் சலுகைகள் எமது கிளையில் மட்டுமே

தொடர்புகளுக்கு:

softlogic MAX
maximum experience

பிரதான கிளை

இல.420, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (KFC கட்டடம்)

0777 397734 / 021 567 8989 / 077 982 4213

UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

WALK -IN – INTERVIEW

Walk in interview for the following posts which is scheduled to be held on 15.04.2016 has been postponed to 28.04.2016 due to unavoidable circumstances.

- Posts of Temporary Lecturer/Temporary Instructor in Music (Vocal) 09.30 a.m

- Posts of Temporary Lecturer/Temporary Instructor in Music (Violin) 10.00 am

- Posts of Temporary Lecturer/Temporary Instructor in Music (Miruthangam) 10.00 a.m10.15 a.m

All the qualified candidates for the above post are requested to be present for the Walk in interview on 28.04.2016 in the Board Room of this University at the time indicated above with relevant certificates, NIC and self prepared application.

Registrar
University of Jaffna
11.04.2016

# போட் சிற்றி தாமதத்துக்கு இழப்பீடு தேவையில்லை

கொழும்பு, ஏப்.12
கொழும்புத்துறைமுக நகரத் திட்டம் தாமதிக்கப்பட்டமைக்காக எந்த இழப்பீட்டையும் சீனாவுக்குச் செலுத்த வேண்டியதில்லை என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சீனப் பயணத்தை முடித்துக் கொண்டு திரும்பிய பின்னர் கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே பிரதமர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

சீனப் பயணத்தின் போது இழப்பீட்டு விவகாரம் எழுப்பப்படவில்லை. இது எளிதாகத் தீர்க்கப்படும் என்று உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது. மூல உடன்பாட்டில் குறைபாடுகள் இருந்ததால்தான் இதனை நிறுத்தி வைத்தோம். அவை ஒவ்வொன்றாகத் தீர்க்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-ஐ-5)

நியூ அபிராமி ரெக்ஸ்ரைல்
புதுவருடத்தை முன்னிட்டு நியூ அபிராமி
ரெக்ஸ்ரைல் வழங்கும்
மிகப் பெரிய மலிவு விற்பனை



ஆம்
5000/= or 6000/= விற்கப்பட்ட சாறிகள்
1000/= ரூபாவிற்கு.
4500/= விற்கப்பட்ட சின்னசைஸ் (20-38)
நெற் பஞ்சாபிகள் 1000/= ரூபாவிற்கு.
பெண்களுக்கான கொட்டன் பஞ்சாபிகள்
6000/= விற்கும் 5000/= விற்கப்பட்டது 3000/=
ரூபாவிற்கும் மற்றும் கொட்டன் சாறிகள் சகலவிதமான
ஆடை தெரிவுகளையும் மலிவு விலையில் பெற்றுக்
கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்.

நியூ அபிராமி ரெக்ஸ்ரைல்ஸ்
ஆஸ்பத்திரி பின் பக்கம்,
225C மின்சார நிலைய வீதி, யாழ்.

மலிவு விற்பனை கையிருப்பு உள்ளவரை மட்டுமே.

ABI ABI யின்

புத்தாண்டு சிறப்புத் தள்ளுபடி

தமிழ் புத்தாண்டை மகிழ்ச்சியுடன் கொண்டாடிட
குடும்பத்தில் உள்ள அனைவரும் விரும்பும்
ஆடைகள் ஒரே இடத்தில்..



இன்பத்தின் தருணங்கள்
எங்கெங்கு உண்டோ
அபியின் ஆடை வகைகள்
அங்கங்கு உண்டு.

உங்கள் தெரிவுகளுக்கு ஏற்ப
20% முதல் 50%
வரையான விசேட
விலைக்கழிவுகள்

சில ஆடைகளுக்கு
ஒன்று வாங்கினால்
இன்னொன்று இலவசம்

இச் சலுகை
14.04.2016 வரை மட்டுமே

"எதை எடுப்பது எதை விடுவது என்ற
சந்தோசத்தில் நீங்கள் திணறப்போவது நிச்சயம்"

அபியின் வாடிக்கையாளர்
அட்டைக்கு 3% விசேட
விலைக்கழிவு
(நிபந்தனைகளுக்குட்பட்டது)

இந்தப் புத்தாண்டுக்கு முன்னதாகவே வந்து உங்கள் உள்ளத்தை கொள்ளை
கொண்ட ஆடைகளை சிறப்புத் தள்ளுபடி விலையில் அள்ளிச் செல்லுங்கள்.

112, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
(சத்திரச்சந்திக்கு அருகில்)
தொ.பே: 021 222 3738

மாபெரும் மலிவு விற்பனை

அனைவருக்கும் இனிய சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்

எதிர்வரும் 14.04.2016 வரை
ராசி கலக்ஷன்ஸ் (ராசி சில்க்ஸ்)

இந்தியாவில் இருந்து விசேடமாக தருவிக்கப்பட்ட நவீன
டிசைன்களினாலான ஆடைத் தினுசுகள்

| | | |
|---|---|---|
| சாறிகள்(சீக்குயின்ஸ்) | 4000/= | 1500/= |
| மொடல் சாறி | 5500/= | 2000/= |
| கொட்டன் சாறி | 1000/= | 500/= |
| நெற் சல்வார் | 6000/= | 4000/= |
| கொட்டன் சல்வார் | 5000/= | 2500/= |
| TOP | 1600/= | 800/= |
| T சேட் | 1800/= | 800/= |
| மொடல்சேட் | 1800/= | 900/= |



இது மட்டுமன்றி அனைத்து
ஆடைவகைகளும் மாபெரும் மலிவு
விற்பனை. இன்றே விரையுங்கள்.
உங்களுக்குப் பிடித்தமானதை
அள்ளிச் செல்லுங்கள்.

ராசி
கலக்ஷன்ஸ்
(ராசி சில்க்ஸ்)
Rasi Collections

இல.199, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

தொடர்பு: 021 222 5571

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீங்களும் ஆங்கில ஆசிரியராகலாம்

* ஆங்கிலத்தினை அடிப்படையிலிருந்து கற்று ஆங்கில ஆசிரியராக விரும்புபவர்களுக்கும்
* ஆங்கிலத்தினை முழுமையாகக் கற்பதற்கு விரும்புபவர்களுக்கும்
* ஆங்கில மொழிமூல கற்கை நெறிகளைப் பின்பற்ற உள்ளவர்களுக்கும்
* ஆங்கில அறிவினை மேலும் விருத்தி செய்ய விரும்பும் ஆங்கில ஆர்வலர்களுக்குமான மிகக் குறைந்த கட்டணத்தில் மொத கற்கைநெறி.

(Trainer Training (Teacher Training Diploma)

- 500 மணித்தியாலங்களில் நீங்களும் மிகச்சிறந்த ஆங்கில ஆசிரியர்
- அனைத்தும் அடிப்படையிலிருந்து.(The Stracture of Language and oral situation approaches)
- நவீன அணுகுமுறைகள்
- Psychology, Leadership, Personality development.
- Teaching practice
- How to use the Techniques and teaching aids effectively in English

**New batches Start On : 9.am (16.04.2016) சனி (weekend batch)**
**9.am (18.04.2016) திங்கள் (Week day batch)**

4th, 5th Batch இல் இணைய பதிவுகளுக்கு முந்துங்கள்

ELAS
English Language Adventure School
Sir Pon Ramanathan Road, Thirunelveli, Jaffna.
T.P: 021 221 2410, 076 697 3040

## சிறிகுமரன் ரெக்ஸ்

தட்டாதெருச் சந்தியில் புது வருடத்தை முன்னிட்டு
விசேட விலைக்கழிவில் புத்தம் புதிய தெரிவுகள்

இந்தியாவில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட அனைத்து ரக ஆடைகளையும் நம்ப முடியாத விசேட விலைக்கழிவில் பெற்றுக்கொள்ளலாம்.



விசேடமாக Office Wear Sarees 690/= இலிருந்து

* பட்டுச் சாறி
* பன்சி சாறி
* கொட்டன் சாறி
* சல்வார்
* சல்வார் துணி
* TOP வகைகள்
* ரவுசர், சேட்

என்பவற்றை மலிவாகப் பெற்றுக்கொள்ள

**சிறிகுமரன் ரெக்ஸ்**
770, K.K.S. றோட், தட்டாதெரு சந்தி, யாழ்ப்பாணம்.

## "மாசற்ற நீரே குறைவற்ற செல்வம்"




இச்சலுகை 30.04.2016 வரை மட்டுமே

- உங்கள் கிணற்று நீர் பருகுவதற்கு உகந்ததா என்பதில் சந்தேகமா?
- மேலதிக கல்சியம், மக்னீசியம், நைட்ரைட் ஒரு பிரச்சினையா?
- மலத்தொற்று கிருமிகள் போன்ற உயிர்க்கொல்லி நோய்க்கிருமிகள் உங்கள் கிணற்று நீரிலும் இருக்கலாம் என அச்சமா?
- போத்தலில் அடைக்கப்பட்ட நீருக்கான செலவு அதிகமா?
- மேற்குறிப்பிடப்பட்டவை போன்ற அனைத்து பிரச்சினைகளுக்கும் நம்பிக்கை உத்தரவாதத்துடனான தீர்வு எம்மிடம் மட்டுமே...
- **UV** உடனான **HI-PURE RO** நீர் சுத்திகரிப்பு இயந்திரத்தின் மூலம் 100% தூய நீரை உங்கள் வீட்டிலேயே பெற்று பயன் பெறலாம்.
- அனைத்து நீர் சுத்திகரிப்பு தொடர்பான சிறந்த தீர்வுக்கு எங்களை நாடுங்கள்.

**EVER PURE HI-TEC (PVT) LTD**
**341, K.K.S ROAD, JAFFNA.**
**TEL:- 0215677567, 0773626230**

## யாழ்ப்பாணத்தில் காண்டம் வாசிக்கப்படுகின்றது

ஸ்ரீ கௌசிக அகஸ்திய நாடி சோதிட நிலையம் (pvt)Ltd

**P. ஜெய்சங்கர்**

கொழும்பில் கடந்த 25 வருடங்களாக, கௌசிக அகஸ்திய முனிவர்களால் எழுதப்பட்ட ஏட்டுச் சுவடிகள் மூலம், தங்களின் கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம், கல்வி, திருமணம், குழந்தைகள், தொழில்வாய்ப்புகள் வெளிநாட்டுப் பயணம் போன்றவற்றைக் கூறிப் புகழ் பெற்ற சோதிடர்களால் தற்போது யாழ்ப்பாணத்தில் பலருடைய வேண்டுகோளுக்கு இணங்கி கீழ் கண்ட முகவரியில் காண்டம் வாசிக்கப்படுகின்றது.

**தொடர்புகளுக்கு:**
**384 A, நாவலர் வீதி, (கைலாசபிள்ளையார் கோயில் சந்தி, நல்லூர்)**
**தொலைபேசி: 021 221 7944**
**கொழும்பு முகவரி:**
**19,1/1, கொத்தலாவல மாவத்தை, பம்பலப்பிட்டி**
**தொலைபேசி: 011 258 6180/ 011 258 6208**

(சி. 22235) (12.18)

## சித்திரைப் புதுவருடத்தை முன்னிட்டு மிகத் தரமான உடைகள்

# மிகப்பெரிய மலிவு விற்பனை

பணத்தினை மீதப் படுத்துங்கள்




- கொட்டன் துணிகள் பல வண்ணங்களில்
- றொப் வகைகள்
- சல்வார் துணிகள்
- பற்றிக் கவுன் பல டிசைன்களில்
- பல விலைகளில் பல டிசைன்களில் சில்க், கொட்டன் சாறிகள்
- சிறுவர்களுக்கான சோளிகள், குருதாக்கள்
- குவாலிட்டி சாறங்கள்
- வேட்டிகள் இன்னும் பற்பல

தெரிவுகளுக்கு முந்துங்கள்

தரமானவற்றை மலிவாகப் பெறுங்கள்

நம்பமுடியாத விலைகளில்

ஒவ்வொரு வாடிக்கையாளரையும் திருப்திப்படுத்தும் எமது சேவை.

# அம்பாள்

ரேட் (பிறைவேற் லிமிடெட்)

புடவை விற்பனையில் மாபெரும் புரட்சி

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

புதிய மாநகரசபைக் கட்டடத் தொகுதி, முதல் மாடி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும் நன்றி நவிலலும்

**மன்மத வருடம் பங்குனி மாதம் முதலாம் நாள் (14.03.2016) திங்கட்கிழமை சிவபதம் அடைந்த எமது குடும்பத்தலைவி**



## அமரர் பார்வதி வைரவநாதன்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (13.04.2016) புதன்கிழமை காலை 6 மணியளவில் கீரிமலை புனித கண்டகி தீர்த்தக் கரையில் நடைபெற்றுத் தொடர்ந்து வீட்டுக்கிருத்திய நிகழ்வும் நண்பகல் 12 மணியளவில் மதியபோசன நிகழ்வும் அவரின் இல்லத்தில் நடைபெற வுள்ளது. அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையி லும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் மறைவுச் செய்தி அறிந்து நேரடியாகக் கலந்துகொண்டவர்களுக்கும் தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியோருக்கும், பல வழிகளிலும் உதவி புரிந்தோருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எங்களால் யாருக்காவது அழைப்பு விடத் தவறியிருந்தால் பெருமனத்துடன் மன்னித்து இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்குமாறு பணிவுடன் வேண்டுகின்றோம்.

நகுலேஸ்வரா வீதி,
கீரிமலை.

(சி/22346)(11.18)

வைரவநாதன் - கணவர்
கண்ணன், அருண்- மகன்மார்.


# அமெரிக்க டொலருக்கு நிகராக மாறவுள்ளது சீனாவின் யுவான்

கொழும்பு,ஏப்.12

அமெரிக்க டொலருக்கு நிகரான மதிப்பு சீனாவின் யுவான் நாணயத்துக்கு இலங் கையில் வழங்கப்படவுள்ளது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் சீனப் பயணத் தின் போது இதற்கான இணக்கப்பாடுகள் எட்டப்பட்டுள்ளன.

பிரதமருடன் சீனப் பயணத்தை முடித்துக் கொண்டு கொழும்பு திரும்பியுள்ள, மத்திய வங்கியின் ஆளுனர் அர்ஜுன மகேந் திரன் இது தொடர்பாகக் கருத்து தெரிவித் துள்ளதாவது–

சீன அபிவிருத்தி வங்கி விரைவில் தனது செயற்பாடுகளைக் கொழும்பில் ஆரம்பித் ததும், இலங்கையில் யுவான் இலகுவில் மாற்றக்கூடிய நாணயமாக மாறும். அமெ ரிக்க டொலருக்கு இலங்கையில் காணப் படும் மதிப்பைப் போன்று சமமான மதிப்பு, சீனாவின் யுவானுக்கு வழங்கு வதற்கான புதிய திட்டம் வகுக்கப்பட் டுள்ளது.

இதற்குத் தெளிவான கால எல்லை எதனையும் இன்னும் குறிப்பிடவில்லை. இந்தத் தீர்மானம் பல்வேறு மட்டங்களில் மிகவும் முக்கியமானது. பொருளாதார ரீதியில் சீனா தனது செயற்பாட்டை எமது நாட்டில் ஒருங் கிணைக்க அனு மதிப்பதானது, சீனாவுடன் இலங்கை மேலான உறவு களை விரிவாக்கு வதற்கு வாய்ப் பாக அமையும். குறிப்பாக மென் கடன்கள், நீண்ட கால மற்றும் குறுகியகால நிதி உதவிகளுக்கும் இது சந்தர்ப்பமாக அமையும். உல கப் பொருளா தாரத்தில் சக்தி வாய்ந்த நாடாக சீனா முன்னேறி வரும் நிலையில் தற்பொழுது எடுக்கப்பட் டிருக் கும் தீர்மானம் மிகவும் முக்கி யம் வாய்ந்தது.– என்றார்.

(ந–ஜ–5)


## வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 13.03.2016
ஞாயிற்றுக்கிழமை
சிவபதமடைந்த

அமரர்
**சின்னத்தம்பி சின்னத்துரை**

அவர்களின் வீட்டுக் கிருத் தியக் கிரியைகள் இன்று (12.04.2016) செவ்வாய்க் கிழமை நண்பகல் 12 மணி யளவில் அவரின் இல்லத் தில் நடைபெறும். அத்தரு ணம் தாங்களும் வருகை தந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அத னைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

புத்தூர் வீதி,
புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
சுன்னாகம்.

குடும்பத்தினர்.

# நெஞ்சகலா ஈராண்டு நினைவலைகள்



## செல்வி இராதா அருளானந்தம்

(சிரேஷ்ட தாதிய போதனாசிரியர் -
யாழ். தாதியர் பயிற்சிக் கல்லூரி யாழ். போதனாவைத்தியசாலை)

**12.04.2016**

அன்னை மடியில்
**25.04.1956**

ஆண்டவன் அடியில்
**05.04.2014**



அன்னை மடியினில் முழுநிலாவில் முத்தாகத் தவழ்ந்து
நிலவாக வளர்ந்த எம் இணையறா உறவே!
அருமையான சோதரியாய் கிடைத்த சிவப்பு வைரமே!
கல்வி கேள்வியில் சிறந்து நீ எம்மை பெருமிதமாக்கினாய்!
இளமையில் சேர்த்த பெருமைகளால் நற்புகழ் உன்னை நாடி வந்தனவே!
பள்ளிகள், பயிற்சிக் கல்லூரிகள், பல்கலைக்கழகம் என கால் பதித்த இடமெல்லாம்
தடம்பதித்து உயர்ந்து நின்றாயே! - விளையாட்டையும் விஞ்ஞானத்தையும்
அலங்கரித்த கோலம் எம் நெஞ்சம் மறந்திடுமா?
குடும்ப விருப்பினால் தாதியத்தை ஆர்வமுடன் கற்றறிந்து
தரமுடன் அதற்குப் பொருளுமானாய்! - உன் சேவையால் பூரித்தவர் பலருண்டு
உன் போதனையால் உயர்ந்தவர் பலருண்டு
புடம் போட்டுத் தாதியத்தைப் புகட்டிய எங்கள் அருமைச் சகோதரியே!
எமக்கும் நீ தாதியாய் இருந்த தருணங்கள் அத்தனையும் மறவோம் அம்மா!
மௌனமாய் நீ சுமந்து வலிகள் பல!
சத்தியமான உறவுகளுக்காக அன்புடன் நீ அர்ப்பணித்தவை பல
அமைதியான அழகு, கனிவான பேச்சு, நடையில் நளினமான கம்பீரம்
சேவையில் காட்டிய அர்ப்பணம் எல்லாவற்றிலும் உனது தனித்துவம்
முத்திரை பதித்து இருக்கையில் சஷ்டி திதியில் இறையடி சேர்ந்தீர்
இராதா அம்மா உமைப்பிரிந்து வாடுகிறோம்
சிவபதியில் என்றும் இன்பம் பெற இறைவனை நெஞ்சார இறைஞ்சுகின்றோம்.

**நினைவகலா நெஞ்சமுடன்**

செல்வி சுசீலாதேவி அருளானந்தம் (கல்வியியல்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

செல்வி மனோரதி அருளானந்தம் (இளைப்பாறிய குடும்பநல சேவையாளர், சாவகச்சேரி)

**தேவாலய வீதி, நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவட்ட செயலகத்தை முற்றுகையிட்டு காணி பறிப்புக்கு எதிராகப் போராட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.12

பாதுகாப்புத் தரப்பின் தேவைகளுக்காக யாழ்.மாவட்டத்தில் எந்தவொரு காணி சுவீகரிப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாது என்ற உத்தரவாதத்தை வழங்க வேண்டும் என்று கோரி, யாழ்.மாவட்ட அரச அதிபரின் அலுவலகத்தை பூட்டி நேற்றுப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது பொலிஸார் குவிக்கப்பட்டதால் பதற்ற நிலைமை உருவாகியிருந்தாலும், ந.ப 12 மணியுடன் போராட்டத்தை முடித்துக் கொண்டு போராட்டக் காரர்கள் வெளியேறினர்.



யாழ்.மாவட்டத்தில் கடந்த சில மாதங்களாக, பாதுகாப்புத் தரப்



பின் தேவைகளுக்காக காணி சுவீகரிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதற்குரிய காணிகளை அளவீடு செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் ஆனைக்கோட்டை கூழாவடியில் பொதுமக்களுக்குச் சொந்தமான 16 பரப்புக் காணியை சுவீகரிப்புச் செய்வதற்கு முன்னோடியாக நேற்று, காணி அளவீடு செய்வதற்கு நில அளவையாளர்கள் சென்றிருந்தனர். காணிகளின் உரிமையாளர்கள், பொதுமக்கள், வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசியல்வாதிகள் திரண்டிருந்தனர்.

நில அளவை மேற்கொள்ளப்படுவதற்குக் கடுமையான எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர். அதனால் நில அளவையாளர்கள் காணிகளை அளவீடு செய்யாமல் திரும்பினர்.

இதன் பின்னர், போராட்டம் மேற்கொண்டவர்கள் யாழ்.மாவட்டச் செயலகத்துக்கு சென்றனர். யாழ். மாவட்ட அரச அதிபரிடம் மனு ஒன்றைக் கையளித்தனர். அதில், யாழ்.மாவட்டத்தில் பாதுகாப்புத் தரப்பின் தேவைக்காக எந்தவொரு காணியும் சுவீகரிக்கப்படக் கூடாது என்று குறிப்பிட்டிருந்தனர். அத்துடன் இதற்கான உத்தரவாதத்தை யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் வழங்க வேண்டும் எனவும், அது வரையில் தாம் அங்கிருந்து வெளியேறப் போவதில்லை என்றும் குறிப்பிட்டனர்.

அதன்பின்னர் யாழ்.மாவட்ட அரச அதிபரை அலுவலகத்துக்குள் வைத்து பூட்டி விட்டு, அரச அதிபர் அலுவலகவாசலில் போராட்டக்காரர்கள் அமர்ந்தனர். அரச அதிபர் அலுவலகத்தினுள் எவரையும் உள்ளே செல்ல விடாமல், போராட்டம் மேற்கொள்ளப்பட்டது. அது தொடர்பில் பொலிஸ் நிலையத்துக்கு தகவல் தெரியப்படுத்தப் பட்டது. இதன் பின்னர் பொலிஸார் மாவட்டச் செயலகத்தில் குவிக்கப் பட்டனர்.



பூட்டிய கதவைத் திறக்குமாறு பொலிஸார் கோரிக்கை விடுத்தனர். இதன்போது போராட்டக்காரர்கள், அரச அதிபர் உறுதி வழங்கும் வரையில் கதவைத் திறக்க விடமாட்டோம் என்றும், ந.ப. 12 மணியுடன் தமது போராட்டத்தை நிறைவு செய்வோம் என்றும் தெரிவித்தனர். அதைடுத்து பொலிஸார் அங்கேயே நின்று கொண்டனர். இதற்கிடையில், யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேத நாயகன், அரச அதிபர் அலுவலகத்தின் மற்றுமொரு கதவின் ஊடாக வெளியேறினார்.

இறுதியில் ந.ப. 12 மணியுடன் போராட்டக்காரர்கள் மாவட்டச் செயலக அரச அதிபரின் கதவைத் திறந்தனர். இனிமேல் இவ்வாறான காணி சுவீகரிப்பு நடவடிக்கை இடம்பெற்றால் கடுமையான - இதனை விடப் பாரதூரமான போராட்டங்களைச் சந்திக்க வேண்டி வரும் என்று தெரிவித்தனர்.



யாழ்.மாவட்ட அரச அதிபரின் அலுவலகத்துக்கு முன்னால் இடம்பெற்ற போராட்டத்தில் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், க.விந்தன், பா.கஜதீபன் மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் செ.கஜேந்திரன் ஆகியோர் பங்குபற்றினர்.

(ற-ஐ-5-101-106)

## ஆளணியை அதிகரிப்புச் செய்தால் கால் நடை உற்பத்தியைக் கூட்டலாம்

### வவு. மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களப் பணிப்பாளர் தெரிவிப்பு

வவுனியா, ஏப்.12

வவுனியா கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்துக்குத் தேவையான ஆளணி பற்றாக்குறையை நிவர்த்தி செய்யுமிடத்து, கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு கால்நடை உற்பத்தியை அதிகரிக்க முடியும் என வவுனியா மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் திருமதி தேவனேசன் தபோதினி தெரிவித்தார்.

கால்நடை திணைக்களத்தின் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பாக திணைக்களத்தின் பணிப்பாளரைத் தொடர்பு கொண்டு கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கடந்த ஆண்டு 7.12 மில்லியன் முட்டையும், 9.85 மில்லியன் லீற்றர் பால் உற்பத்தியும், 1.5 மில்லியன் புறொயிலர் கோழி உற்பத்தியும், 0.52 மில்லியன் ஆடு, மாடு உற்பத்தியும் வவுனியா மாவட்டத்தில் இடம்பெற்றுள்ளன.

இந்த உற்பத்திகளுக்கு எமது கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் பங்களிப்பை போதியளவு வழங்கியுள்ளோம். எமது அபிவிருத்தி செயற்பாட்டுக்கு ஆளணிப் பற்றாக்குறை பெரும் பிரச்சினையாகவுள்ளது.

தற்போது வவுனியா நகரத்துக்கு 2 வெளிக்கள உத்தியோகத்தரும், செட்டிகுளம் வவுனியா வடக்கு பிரதேசங்களுக்கு தலா ஒரு வெளிக்கள உத்தியோகத்தரும், வவுனியா தெற்குக்கு 2 வெளிக்கள உத்தியோகத்தர்களும் கடமையாற்றுகின்றனர்.

ஆனால் ஒரு பிரதேசசெயலாளர் பிரிவுக்கு 4 உத்தியோகத்தர்கள் தேவையாகவுள்ளது. இதனைக் கவனத்தில் எடுத்து இந்த வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப் படடல் வேண்டும். இவ்வாண்டு ஆடு, மாடு, கோழி வளர்ப்புக்கு 50வீதமான மானியமாவது வழங்க உத்தேசித்துள்ளோம்.

கால்நடைகளைவளர்ப்பதற்குகொட்டில்களோ கூடுகளோ அமைப்பதற்கான உதவி அல்லது கணிசமான அளவு கால்நடைகளை விநியோகித்தல், கால்நடைகளுக்கு தேவையான புற்களை வளர்ப்பதற்குரிய உதவிகளை மேற்கொள்ளல், கால்நடை வளப்பாளர்களுக்கு பயிற்சிகள் மற்றும் அறிவுரைகள் வழங்குதல், மருத்துவ உதவிவழங்கல் உள்ளிட்ட பல உதவிச்செயற்றிட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம்.

அதன் மூலம் ஆயிரத்து 200க்கும் மேற்பட்ட கால்நடைவளர்ப்பாளர்கள் பயனடைவர் என உத்தேசிக்கப்பட்டுள்ளது - என்றார். (ற-ஐ-402)

## வீட்டு மதில் பாய்ந்து திருட முற்பட்டவர் விளக்கமறியலில்

யாழ்ப்பாணம், ஏப். 12

தாவடியில் வீட்டு மதில் ஏறிப்பாய்ந்து திருட முற்பட்ட குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர். அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர் ஊரெழு பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய நபர் என பொலிஸார் கூறினர். மேற்படி சந்தேக நபரான இளைஞனுக்கு எதிராக பலதிருட்டுக்களுடன் தொடர்புடைய வழக்கு மல்லாகம் நீதிமன்றில் உள்ளன என்றும், பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இரவு ரோந்துப்பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸார் குறித்த நபரைக் கைது செய்யதனர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ற-4,107)

## மொழிசார் கற்கைக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஏப்.12

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் மொழிக் கற்கைத் துறையால் சிங்கள மற்றும் தமிழ் பாடநெறிகளுக்கான மொழிசார் கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என யாழ். பிராந்திய உதவிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இந்தப் பாடநெறிக்கு விண்ணப்பிப்பதற்கு 18 வயதைப் பூர்த்தியடைந்திருந்தல் வேண்டும். எந்த வித கல்வித் தகைமையும் அவசியமில்லை.

விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் பிறவுண் வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்திலும், 155 ஆம் மைல் கல், கண்டிவீதி, கிளிநொச்சியில் அமைந்துள்ள கற்கை நிலையத்திலும், ஒட்டுசுட்டான் வீதி, புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள முல்லைத்தீவு கற்கை நிலையத்திலும் மற்றும் மன்னார் கற்கை நிலையத்திலும் இணையத்தளம்மூலம்விண்ணப்பிக்க முடியும் எனவும் அறிவித்துள்ளார். (ற-ஐ-ரி)

## சத்திரசிகிச்சைக் கூட சீருடைகள் கையளிப்பு

முல்லைத்தீவு, ஏப்.12

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு புங்குடுதீவு தாயகம் அமைப்பால் மாகாண சபை உறுப்பினர் க.சிவநேசன் ஊடாக ஒரு தொகுதி சத்திர சிகிச்சைக்கூட சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன.

புலம்பெயர் உறவுகளால் கொள்வனவு செய்யப்பட்ட சுவிஸ் நாட்டு தயாரிப்பான சத்திர சிகிச்சைக் கூடத்தில், சத்திர சிகிச்சை நிபுணர்களால் அணியப்படும் மேலங்கி அதற்கான பியாமா உள்ளடக்கியதான 120 சீருடைகளே மாவட்ட வைத்தியசாலைப் பணிப்பாளர் பி.தயானந்தரூபனிடம் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் வைத்தியசாலையின் சத்திர சிகிச்சை நிபுணர் சி.மதிவாணன், மாகாண சபை உறுப்பினர் க.சிவநேசன், தாயகம் அமைப்பைச் சேர்ந்த காண்டீபன் ஆகியோர்கலந்துகொண்டனர். (ற-ஐ-102)

## கடை உடைத்து திருட்டு

யாழ்ப்பாணம், ஏப். 12

கரவெட்டி தெற்கு பகுதியில் உள்ள கடை ஒன்றினுள் நுழைந்த திருடர் 40 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் மற்றும் 4 ஆயிரம் ரூபா பணம் என்பவற்றை திருடிச் சென்றுள்ளனர் என்று நெல்லியடி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தத் திருட்டு கடந்த 6 ஆம் திகதி இரவு இடம்பெற்றுள்ளது என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-4,107)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயரமற்ற தகரக் கொட்டகைகளில் வெதும்பித் தவிக்கும் வன்னி மக்கள்

யாழ்ப்பாணம், ஏப்.12
வன்னிப் பகுதிகளில் போரால் பாதிக்கப்பட்ட மக்கள் உயரம் குறைந்த தற்காலிகத் தகரக் கொட்டகைகளில் தற்போது நிலவும் கடும் வெப்ப நிலையால் வெதும் பித் தவிக்கிறார்கள்.

போரின் பின்னர் மீள் குடியமர்த் தப்பட்ட மக்களுக்கு உயரம் குறைந்த தற்காலிகத் தகரக் கொட்டகைகளே வழங்கப்பட் டிருந்தன. போர் முடிந்து 6 ஆண் டுகள் முடிவடைந்த நிலையிலும் அந்த மக்கள் தற்காலிகக் கொட் டகைகளிலேயே வாழ்க்கையை நகர்த்தி வருகின்றனர். அரசு அவர்களுக்கு எந்தவித வீட்டு வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்கவில்லை. இந்த நிலை யில் தற்போது நிலவும் கடும் வெப்பத்தால் தகரக் கொட்ட கைகளில் குடியமர்த்தப்பட்டுள்ள மக்கள் பெரும் பாதிப்புகளைச் சந்தித்து வருகின்றனர் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

> “இப்படியான அவல வாழ்க்கையை எதிர் நோக்கும் குடும்பங்களைச் சேர்ந்த பாட சாலை மாணவர்கள் கல்வியைத் தொடர் வதிலும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.
> போரால் பாதிக்கப்பட்டு மீள்குடியமர்த்தப்பட்ட மக்களுக்கு நிரந்தர வீட்டுத்திட்டங்களை அமைத்து வழங்குவதற்காக வெளிநாட்டு அரசு பெருமளவு நிதியை கடந்த காலத்தில் அரசிடம் வழங்கியிருந்தன.”

உயரம் குறைந்த பாதுகாப்பற்ற நிலையில் காணப்படும் தற் காலிகக் கொட்டகைகளில் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த குழந் தைகள், சிறுவர்கள், முதியவர் கள், நோயாளிகள் எனப் பலரும் பெரிதும் பாதிப்புக்குள்ளாகின் றனர் என்று மக்கள் கவலை தெரி வித்தனர். தமது நிலை பற்றி எவருமே கருத்திற்கொள்ளாதுள் ளனர் என்றும் அவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

உயரம் குறைந்த தற்காலிக கொட்டகைகளில் வசிக்கும் மக் கள் பல்வேறுபட்ட நோய்த் தாக் கங்களுக்கும் உள்ளாகியுள்ள னர் என்று தெரிவிக்கப்படுகின் றது. இப்படியான அவல வாழ்க் கையை எதிர்நோக்கும் குடும் பங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் கல்வியைத் தொடர்வதிலும் பெரும் சிரமங் களை எதிர்நோக்கி வருகின்றனர்.

போரால் பாதிக்கப்பட்டு மீள்குடிய மர்த்தப்பட்ட மக்களுக்கு நிரந்தர வீட்டுத்திட்டங்களை அமைத்து வழங்குவதற்காக வெளிநாட்டு அரசு பெருமளவு நிதியைக் கடந்த காலத்தில் அரசிடம் வழங்கியிருந்தன.

கடந்த காலங்களில் பாதிக்கப் பட்ட மக்களுக்கு வீட்டுத்திட்டங் கள் வழங்கப்படுகின்றன என்று கூறிச் சிலருக்கு வழங்கப்பட்ட போதும் பாதிக்கப்பட்ட பெருமள வான ம்க்களுக்கு வீட்டுத்திட் டங்கள் வழங்கப்படவில்லை என்றும், அதற்கான முயற்சி களும் எடுக்கப்படவில்லை என் றும் மக்கள் கவலை வெளி யிட்டனர்.

கடந்தகாலங்களில் வழங்கப்பட்ட அரச வீட்டுத்திட்டங்கள் பல முறை கேடான வகையில் வழங்கப்பட் டுள்ளன. வீட்டுத் திட்டங்களைப் பெற்றவர்களில் பலர் அவற் றைக் கட்டிப் பூட்டிவிட்டு வெளி யிடங்களில் சென்று வசதியான நிலையில் வாழும் நிலையில் வீட்டுத் திட்டம் கிடைக்காத பலர் தற்போதும் உயரம் குறைந்த தற்காலிகத் தகரக் கொட்டகை களிலேயே அவல வாழ்க்கை வாழ்ந்து வருகின்றார்கள் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டி யுள்ளனர்.

கடந்த ஆட்சியின்போது பாதிக் கப்பட்ட மக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டதென்றால் தற் போதுள்ள நல்லாட்சி அரசும் பாதிக்கப்பட்ட மக்களின் அவல நிலையைக் கருத்தில் எடுப்ப தாகத் தெரியவில்லை என்றும் மக்கள் தெரிவித்தனர்.
(ற-ஜ-426)

## நுளம்பு கட்டுப்பாட்டு குழுவால் யாழில் 6,037 வீடுகள் தரிசிப்பு

### 19 குடியிருப்பாளருக்கு எதிராக நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஏப்.12
யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றப் பகுதியில் இடம் பெற்ற தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கை யின்போது 6 ஆயிரத்து 37 வீடுகள் தரிசிக்கப்பட் டன என சுகாதார வைத் திய அதிகாரி பணிமனை வட்டாரங்கள் தெரிவித் துள்ளன.

இந்தநுளம்புக்கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் கடந்த மாதம் 29 ஆம் திகதி ஆரம்பமாகி இந்த மாதம் நான்காம் திகதி வரை நடைபெற்றன. மாநக ராட்சி மன்றத்தின் ஆறு பொதுச் சுகாதாரப் பரி சோதகர் பிரிவுகளில் மட் டும் இந்த நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கை கள் மேற்கொள்ளப்பட் டன.

நுளம்பு பெருகுவதற்கு இலக்கான இரண்டா யிரத்து 145 குடியிருப்பா ளர்களின் சுற்றாடல் களும், 18 சுற்றாடல்களில் நுளம்பு குடம்பிகளும் இனங்காணப்பட்டு அவை அழிக்கப்பட்டன.

அதனைவிட போதிய சுகா தார வசதி இன்றி காணப் பட்ட 455 குடியிருப்பாளர் களின் சுற்றாடல்களுக்கு சிவப்பு எச்சரிக்கை ஸ்ரிக் கர்களும் ஒட்டப்பட்டன.

இதன்போது நுளம்புப் பெருக்கத்துக்கு வழிய மைத்த 19 குடியிருப்பாளர் களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளும் மேற் கொள்ளப்பட்டன.

இந்த ஒருவார கால நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் மாநகர சுகாதாரப் பகுதியினர், பொலிஸார், சமுர்த்தி பணி யாளர்கள், கிராம உத்தி யோகத்தர்கள், பொது அமைப்பு பிரதிநிதிகள் என 500க்கும் மேற் பட்டோர் கலந்து கொண் டனர்.

மாநகராட்சி மன்றத்தின் வட்டார ரீதியான குழுக் களாகப் பிரிந்து, இந்தத் தேசிய நுளம்பு கட்டுப் பாட்டு நடவடிக்கையில் இந்தக் குழுவினர் ஈடு பட்டனர். (ற-ஜ-17)



கிளிநொச்சி மாவட்டத்துக்கான தொழில் அலுவலகம் கடந்த சனிக்கிழமை கிளிநொச்சி 55ஆம் கட்டைப் பகுதியில் தொழில் அமைச்சர் ஜோன் செனவிரட்னவால் திறந்து வைக்கப்பட்டது. இராஜாங்க அமைச்சர் ரவீந்திர சமரவீர உள்ளிட்ட குழுவினர் தொழில் அலுவலகத்துக்கு வருகை தந்து, நாடாவெட்டி அலுவலகத்தை திறந்து வைத்தனர். (ற-ஜ-21)

## சிலை திறப்பும் நூல் வெளியீட்டு விழாவும்

யாழ்ப்பாணம், ஏப்.12
கூட்டுறவுப் பெரியார் சின் னத்தம்பி சிவமகாரா சாவின்பத்தாவது நினைவு தினத்தை முன்னிட்டு சிலை திறப்பு விழாவும், நூல் வெளியீட்டு விழா வும் எதிர்வரும் 16ஆம் திகதி சனிக்கிழமை பிற் பகல் 2 மணிக்கு தெல் லிப்பழை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் ந.உமாகரன் தலைமையில் தெல் லிப்பழைபலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் கலந்து கொள்ளவுள் ளார். நினைவு நூல் தொடர்பான ஆய்வு ரையை முன்னாள் யாழ். பல்கலைக்கழக சமூக வியல் துறை துணை வேந்தர் நா.சண்முக லிங்கன் வழங்கவுள் ளனர் என்று ஏற்பாட் டாளர்கள் குறிப்பிட்டுள் ளனர். (ற-ஜ-ரி5-17)

## வியாபார நிலையங்கள் உடைக்கப்பட்டு திருட்டு

### வவுனியாவில் சனியன்று சம்பவம்

வுனியா, ஏப்.12
வவுனியா நகரை அண் மித்த பகுதியில் மூன்று வியாபார நிலையங்கள் உடைக்கப்பட்டு, பொருள் கள் – பணம் என்பன கள வாடப்பட்டுள்ளன என பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் செய்யப் பட்டுள்ளன.

வவுனியா நகரை அண் மித்த சூசைப்பிள்ளையார் குளம்சந்தியிலுள்ளமூன்று வியாபர நிலையங்களே உடைக்கப்பட்டு பொருள் கள் களவாடப்பட்டுள்ளன.

கடந்த சனிக்கிழமை மூன்று வியாபார நிலை யங்களையும் பூட்டி விட்டு உரிமையாளர்கள் சென் றுள்ளனர். நேற்றுமுன் தினம் ஞாயிற்றுக்கிழமை என்பதால் வியாபார நிலையங்களுக்கு உரி மையாளர்கள் செல்ல வில்லை. இந்த நிலையில் நேற்றுக் காலை அந்தப் பகுதியிலுள்ள வியாபார நிலைய உரிமையாளர் ஒருவர் அங்கு சென்றுள் ளார்.

இதன் போது மூன்று வர்த் தக நிலையங்கள் உடைக் கப்பட்டிருப்பதை அவதா னித்துள்ளார். அதை யடுத்து சம்பந்தப்பட்ட வியாபார நிலைய உரிமை யாளர்களுக்கு தொலை பேசியூடாக அவர் தெரியப் படுத்தியுள்ளார். வியாபார நிலைய உரிமையாளர் கள் வந்து பார்த்தபோது, அவர்களது கடைகள் உடைக்கப்பட்டு திருடப்பட் டிருந்துள்ளது. இதனை யடுத்து பொலிஸாருக்கு முறைப்பாடு மேற்கொள் ளப்பட்டது.

இயந்திர உதிரிப்பாக விற் பனை நிலையம், சிற்றுண் டிச்சாலை, ரயர் விற்பனை நிலையம் என்பனவே இவ் வாறு உடைக்கப்பட்டிருந் தன. இவற்றில் இயந்திர உதிரிப்பாக விற்பனை நிலையத்திலிருந்து 37 ஆயிரம் ரூபா பணம் காணாமற் போயுள்ளது. சிற்றுண்டிச்சாலையின் இயந்திரம் ஒன்று அரு கிலிருந்த வீட்டிலிருந்து மீட்கப்பட்டுள்ளது. ரயர் விற்பனை நிலையம் உடைக்கப்பட்ட போதும் எந்தவொரு பொருளும் களவாடப்படவில்லை என்று தெரிவிக்கப்படு கின்றது.

பொலிஸார் மேலதிக விசா ரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (ற-ஜ-5)

## பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம்,ஏப்.12
யாழ்ப்பாணம் தேசிய கலை இலக்கியப் பேரவை, இளம் இலக்கியப் படைப் பாளிகளை உருவாக்கும் பொருட்டு இளைஞர், யுவதிகளுக்கு சிறுகதை யரங்கம், கவிதையாக்கம் தொடர்பான பயிற்சிப் பட்டறையை ஏற்பாடு செய்துள்ளது.

இந்தப் பயிற்சிப் பட்டறை எதிர்வரும் 23 ஆம், 24 ஆம் திகதிகளில் காலை 9 மணி முதல் மாலை 4 மணிவரையும் இல.62 கே.கே.எஸ். வீதி, கொக்கு வில் என்ற முகவரியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேர வையில் நடைபெறவுள் ளது.

இலக்கியப் பயிலரங்கில் பயிற்சி பெற ஆர்வமுள் ளவர்கள் தங்கள் பதிவு களை 15 ஆம் திகதிக்கு முன்னர் மேற்படி முக வரியிலுள்ள கலை இலக் கியப் பேரவையில் மேற் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஜ)

## பெருந்திருவிழா

யாழ்ப்பாணம்,ஏப்.12
வட்டுக்கோட்டை அடைக் கலந்தோட்டம் ஸ்ரீ கந்த சுவாமி ஆலயத்தின் பெருந்திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெற வுள்ளன.

எதிர்வரும் 20 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழா வும், மறுநாள் வியாழக் கிழமை முற்பகல் 11 மணிக்கு தீர்த்தத்திரு விழாவும் நடைபெறவுள் ளன. (ற-ஜ-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்முடன் கலந்தாலோசிக்காது திட்டங்களை தன்னிச்சையாக செயற்படுத்துகின்றது மத்தி

## வடக்கு மாகாண முதலமைச்சர் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம்,ஏப்.12

**மத்திய அரசால் மேற்கொள்ளப்படும் திட்டங்களுக்கு எம்முடன் கலந்து ஆலோசிக்கப்படாமல், அலுவலர்களுடன்மட்டும்தொடர்பு கொண்டு முன்னெடுக்கப்படுகின்றன. இது போன்ற நடவடிக்கைகளால் ஏற்படும் ஊழல் செயற்பாடுகளை ஆராய்வதில் அல்லதுவிசாரணைசெய்வதில்பெரும் இடையூறுகளை சந்தித்துள்ளோம். – இவ்வாறு வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

வடமாகாண மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்கான உதவிப்பாலம் உதவிகள் வழங்கும் நிகழ்வு கைதடி ஸ்ரீ விநாயகர் மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

உதவிப் பாலம் என்ற மக்கள் பயனுறும் திட்டத்தின் கீழ் போரால் பாதிக்கப்பட்ட மக்கள் பலருக்கும் பலவிதமான உதவிகளை நாம் செய்து வருகின்றோம். எனினும் பெரும் திட்டங்களையே உலகம் எதிர்பார்க்கின்றது. ஆனால் அந்தத் திட்டங்கள் வெளிநாட்டு நிறுவனங்களின் நிதி உதவியுடன் மத்திய அரசால் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. பல தடவைகளில் எங்களிடம் கேட்காது எமது அலுவலர் களுடன் மட்டும் கலந்தாலோ சித்தே இவ்விதமான பெரும் செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுவருகின்றன.

அதனால் 'நெல்சிப்' போன்ற பெரும் செயற்திட்டங்களில் ஊழல் நடைபெற்றபோது எம்மால் அதுபற்றி நடவடிக்கைகள் எடுப்பது சிரமமாக இருந்தது. எமது மாகாணத்துக்குரிய எந்த செயற்றிட்டமானாலும் எமக் கூடாகவே அவை மத்திய அரசால் நடைமுறைப் படுத்தப்பட வேண்டும்.

65 ஆயிரம் பொருத்து வீடுகள் திட்டமும் தான் தோன்றித்தனமாக எமது பங்குபற்றல் எதுவுமின்றியே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மக்கள் பிரதிநிதிகளாகிய எங்களுடன் கலந்தாலோசித்தால் மக்கள் சார்பான கருத்துக்களை வெளியிடலாம் என்ற எண்ணத்திலேயே எம்முடன் கலந்தாலோசித்து முடிவுகளை எடுக்க வேண்டுகின்றோம்.

> 65 ஆயிரம் பொருத்து வீடுகள் திட்டமும் தான் தோன்றித்தனமாக எமது பங்குபற்றல் எதுவுமின்றியே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மக்கள் பிரதிநிதிகளாகிய எங்களுடன் கலந்தாலோசித்தால் மக்கள் சார்பான கருத்துக்களை வெளியிடலாம் என்ற எண்ணத்திலேயே எம்முடன் கலந்தாலோசித்து முடிவுகளை எடுக்க வேண்டுகின்றோம்.

அத்துடன் அதிகாரப்பகிர்வு என்று வாய் கிழியக் கத்திவிட்டு இதைக்கூட எமக்குத் தெரியாமல் செயற்படுத்த முன்வந்தால் மத்தியின் உண்மையான மனநிலை என்ன என்ற கேள்வியே மேலோங்கி நிற்கும்.

எம்மைச் சந்திக்கப் பல பாதிக்கப்பட்ட மக்கள் வருகின்றார்கள். பலரின் குறைகளைத் தீர்க்க முடியாத நிலையில் நாங்கள் அவர்கள் பெயர்களையும் தேவைகளையும் பதிந்து வைக்கின்றோம். இவ்வாறான நிகழ்வுகள் வந்ததும் அவர்களுக்கு எம்மாலான உதவிகளை வழங்குகின்றோம். வருடப் பிறப்பின் போது இங்கு வந்திருக்கும் பயனாளிகளுக்கு ஏதோ ஓர் உதவி கிடைக்கப் போகின்றது.

ஆனால் அது உங்களை வருடப் பிறப்பின் போது மகிழ்வுடன் வைத்திருக்க எமது கொடையாளிகள் தரும் உதவி. அதை நாங்கள் மதிக்கின்றோம். ஆனால் வெறும் உதவிகளிலேயே காலத்தைக் கடத்தும் ஒரு பழக்கம் எங்களுள் சிலருக்கு இப்பொழுது பழக்கப்பட்டு வருகிறது. எங்காவது சென்று ஏதாவதுஉதவிகளைப்பெற்று அன்றாடம் வயிற்றை நிரப்ப அவர்கள் ஆயத்தமாகி இருக்கின்றார்கள். இது தவறான வழிமுறை.

பல மாணவ, மாணவிகள் பிற நாடுகளில் இருந்து அவர்களின் உற்றார் உறவினர் அனுப்பும் பணத்தை நம்பி வாழ்ந்து வருகின்றனர். பணம் அனுப்புபவரின் துன்பத்தை அவர்கள் உணர்வதில்லை. மாணவ, மாணவியர் தமது சொந்தக் கால்களில் நின்று முன்னேற முடிவெடுக்க வேண்டும். பலர் வேலை இல்லை என வருந்துகின்றனர். இதற்கான தீர்வுகள் கிடைக்கும் காலம் தொலைவில் இல்லை. படித்தவர்களும், பாமரர்களும் ஏதாவது தொழில்களில் ஈடுபட வேண்டும். மக்கள் தாம் இருந்த இடங்களில் இருந்தே சிறு கைத்தொழில்களில் ஈடுபடவும், சந்தை வாய்ப்புக்களைப் பெறவும் நாம் ஆவன செய்துவருகின்றோம்.

எமது மக்களில் பலர் இந்திய வீட்டுத்திட்டத்தின் கீழ் வீடுகளைக் கட்டத் தொடங்கிவிட்டு அவற்றைப் பூர்த்தி செய்ய நிதிவளம் இல்லாது தவிக்கின்றனர். அவர்களின் வீடுகளைக் கட்டி முடிக்க வெறும் இரண்டு அல்லது மூன்று இலட்சங்களே தேவைப்படுகிறது. மிகக் குறைந்த வட்டியுடன் இவர்களுக்கு கடன்களைக் கொடுத்துக் காலக் கிரமத்தில் அவற்றைத் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம்.

பலர் எமக்குப் பணம் அனுப்புகின்றார்கள். அவற்றை ஒரு சிறப்பு வங்கிக் கணக்கில் இட்டு, உதவிகோரும் மக்களின் உண்மையான நிலை பற்றி எங்கள் அலுவலர்களைக் கொண்டு ஆராய்ந்தறிந்து அறிக்கை பெற்று, பண உதவி செய்து, அவர்களின் தேவைகள் பூர்த்தியடைகின்றனவா என்று தொடர் நடவடிக்கைகள் எடுத்து வருகின்றோம். மக்களைப் பிராந்திய ரீதியாகவோ மத, மொழி, சாதி ரீதியாகவோ பிரித்துப் பார்க்காது வகையற்றவர்கள் வளம் பெற உதவ வேண்டும் என்ற குறிக்கோளுடன் செயற்படுகின்றோம். –என்றார்.

(ற–ஜ–ரி5)

## விசேட சந்திப்பு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஏப்.12

கிராம அபிவிருத்தி அமைச்சருக்கும் வடமராட்சி கிழக்கு மக்களுக்கும் இடையில் இன்று நடைபெறவிருந்த விசேட சந்திப்பு திகதிகள் குறிப் பிடாமல் ஒத்திவைக்கப்பட்டுள் ளன என வடமாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா. டெனிஸ்வரன் குறிப்பிட்டுள் ளார்.

கிராம அபிவிருத்தித் திணைக்களமும், அப்பகுதிப் பிரதேச செயலகமும் இணைந்து ஒழுங்கு செய்திருந்த வடமராட்சி கிழக்கு பிரதேசத்தைச் சேர்ந்த கிராம, மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களினது தேவைகள் பிரச்சினைகள் தொடர்பிலான விசேட கலந்துரையாடல் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இந்தநிலையில் வடக்குமாகாண சபையில் அரசியல் அமைப்புத் தொடர்பிலான விசேட அமர்வு இன்று இடம்பெற உள்ளதால் இந்த சந்திப்பை விரைவாக இன்னுமொரு தினத்தில் நடத்துவதற்கு திட்டமிட்டுள்ளது என்றும் அதற்கான திகதி பின்னர் திணைக்களம் ஊடாக அறிவிக்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பில் கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் தவறாது சமுகம் தருமாறும், இவ்விசேட சந்திப்பில் குறிப்பாக அப்பகுதியில் காணப்படும் வீதி அபிவிருத்தி தொடர்பான பிரச்சினைகள் முக்கியத்துவப்படுத்தப்பட்டு உள்ளன என்றும் அமைச்சர் டெனிஸ் வரன் குறிப்பிட்டுள்ளார். (ற–ஜ–ரி5)

# நாட்டின் எந்தப் பாகத்திலும் பணியாற்ற அனைவரும் தயாராக இருக்க வேண்டும்

## அமைச்சர் ஜோன் செனவிரட்ண தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஏப்.12

தென்பகுதியில் உள்ளவர்கள் வடபகுதியில் கடமை புரிய வேண்டும். அதே போன்று வடபகுதியில் உள்ளவர்களும் தென்பகுதியில் கடமை புரிவதற்குத் தயாராக இருக்க வேண்டும். இதனூடாக இரண்டுசமூகங்களினதும்மொழி – கலாசாரத்தை அறிந்து கொள்ள முடியும். – இவ்வாறு தொழில் மற்றும் தொழிற் சங்க உறவுகள் அமைச்சர் ஜோன் செனவிரட்ண தெரிவித்தார்.



முல்லைத்தீவு மாவட்டத்துக்கான தொழில் திணைக்களம், மாஞ்சோலைமருத்துவமனைக்குஅண்மையாக கடந்த சனிக் கிழமை, அமைச்சர் ஜோன் செனவிரட்ண மற்றும் இராஜாங்க அமைச்சர் இரவீந்திர சமரவீர ஆகியோரால் திறக்கப்பட்டது. அந்த நிகழ்வில் உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது–

நாட்டில் அனைத்து இளைஞர் யுவதிகளுக்கும்வேலைவாய்ப்பை வழங்கும் முகமாக தனியார் தொழிற் சாலைகள் நிறுவப்பட்டு வருகின்றன. தனியார் துறையை முன்னேற்றுவதன் மூலம் அதிகளவான இளைஞர்யுவதிகளுக்கு வேலை வாய்ப்பை வழங்க முடியும்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தொழில் வழங்குநர்களாக 470 பேர் பதிவு செய்துள்ளனர். இவர்களின் கீழ் 3 ஆயிரத்து 600 பேர் வேலை புரிவதாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இதுவரையில் பதிவுகளைச் செய்யாதவர்களையும், பதிவுகள் செய்வதற்கு தூண்ட வேண்டும்.

இங்குள்ள ஊழியர்களின் பற்றாக்குறை எனக்குத் தெரியும். வடக்கு – கிழக்கில் 47 தமிழ் உத்தியோகத்தர்களுக்குப் பற்றாக்குறை நிலவுகின்றது. நாட்டில் 203 உத்தியோகத்தர்களுக்குப் பற்றாக்குறை இருக்கின்றது. இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சரவைப் பத்திரம் சமர்பிக்கப்பட்டுள்ளது. அமைச்சரவை அனுமதி கிடைத்ததும் இந்த வெற்றிடங்கள் உடனடியாக நிரப்பப்படும்.

கடந்த அரசில் நான் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சராக இருந்தேன். இந்த [illegible] அதிபரானதமிழர்ஒருவரை மொனராகலை மாவட்டத்துக்கு அரச அதிபராக நியமித்தேன். அவர் 6 மாதத்துக்குள் அங்குள்ள மக்களின் மனங்களில் ஆழமாக இடம் பிடித்துவிட்டார். அவரைக் கடந்த வருடம் வடக்கு மாகாண பிரதம செயலாளராக இடமாற்றம் செய்யும் போது, மொனராகலை மாவட்ட மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். அந்தளவுதூரம் அவரது சேவைகளால், மொனராகலை மக்கள் கவரப்பட்டிருந்தனர்.

இதேபோல் தென் பகுதி உத்தியோகத்தர்களும் இங்கு கடமை புரிய வேண்டும். இங்குள்ளவர்களும் தென் பகுதிகளில் பணி புரிவதற்கு தயாராக இருக்க வேண்டும். இதன் மூலம் இரண்டு சமூகங்களினதும் மொழி, கலாசாரத்தை அறிந்து கொள்ள வாய்ப்பாக அமையும்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய வடக்கு மாகாண சபை உறுப்பினர் க.சிவநேசன், இங்கு தொழிலாளர்களையும் வறியவர்களையும் சுரண்டி வாழும் கலாசாரம் வெகுவாக பரவி வருகின்றது. இளம் சமுதாயம் பல்வேறுபட்ட நெருக்கடிகளைச் சந்தித்து வரும் காலத்தில் இந்த அலுவலகம் திறக்கப்பட்டுள்ளது. இந்த அலுவலகம் பல்வேறுபட்ட பொறுப்புகளை சுமந்து நிற்கின்றது. இது உடனடியாக செயற்பட்டு தொழிலாளர்களின் நியாயமான தீர்வுக்குப் பாடுபட வேண்டும். கஷ்டத்தின் நிமித்தம் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்டவர்களும் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் இளம் பெண்களும் சுய கௌரவத்துடன் வாழ்வதற்காக ஆடைத் தொழிற் சாலைநிறுவனங்களுக்குவேலைக்கு செல்லும் போது தண்ணீர் கூட எடுத்துச் செல்ல முடியாத நிலை காணப்படுகின்றது. அங்கு ஓய்வின்றித் தொடர்ச்சியாக வேலை வாங்கப்படுவதாகவும் பாதிக்கப்பட்ட பலர் முறையிடுகின்றனர். இங்கு அவர்களின் அடிப்படை உரிமைகள் பல மீறப்படுகின்றன. தொழிலாளர்களின் உரிமைகள் நிலை நாட்டப்பட வேண்டும்.

மாகாண கொடியானது மாகாண சபைப் பிரதிநிதி ஒருவராலேயே ஏற்றப்பட வேண்டும். இங்கு ஒரு பிரதிநிதி இருந்தும் அது நிலை நாட்டப்படவில்லை. அந்தச் சம்பிரதாயம் மீறப்பட்டுள்ளது. இது தவறுதலாக இடம்பெற்றிருந்தால் எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் திருத்திக் கொள்ளப்பட வேண்டும்–என்றார். (ற–ஜ–5–102)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாண அபிவிருத்திக்கு மாகாண சபையே முட்டுக்கட்டை

## சாடுகின்றார் மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதன்

கொழும்பு, ஏப்.12
போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உருப்படியாக எதையும் செய்யாத வடக்கு மாகாணசபை, மத்திய அரசு மேற்கொள்ளும் மீள்குடியேற்ற, அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டையாக உள்ளது. - இவ்வாறு குற்றம்சாட்டியுள்ளார் புனர்வாழ்வு, மீள் குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன்.

வடக்கு - கிழக்கில் 65 ஆயிரம் பொருத்து வீடுகளை அமைக்கும், மீள்குடியேற்ற அமைச்சின் திட்டத்துக்கு வடமாகாண சபை எதிர்ப்புத் தெரிவித்திருந்ததுடன், இது தொடர்பாக, அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனுக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்திருந்தார்.

வீடமைப்புத் திட்டம் தமிழ் சமூகத்துக்கான ஒன்றாக அல்லாமல் அரசால் ஜெனீவாவுக்குக்காண்பிப்பதற்கான ஒன்றாகவுள்ளது என்று க.வி.விக்னேஸ்வரன் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அதற்குப் பதிலளிக்கும் வகையில் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அமைச்சர் சுவாமிநாதன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அதில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது-

2009 ஆம் ஆண்டு போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட பின்னர் வட மாகாணசபை உருப்படியானஎதையும்செய்யவில்லை. வட மாகாண அபிவிருத்திக்காக மத்திய அரசால் வழங்கப்பட்டதாகக் கூறப்படும் பணம் அங்கு வீடமைப்பு, வாழ்வாதாரம், உட்கட்டமைப்பு, விவசாயம், மீன்பிடி மற்றும் தொழிற்றுறை பொருளாதார செயற்பாடுகள் என்பவற்றில் அபிவிருத்திக்கான தீவிர தேவைப்பாடு இருந்தும், அவற்றுக்காகச் செலவிடப்படவில்லை.

தமது தேவைப்பாடுகள் குறித்து அழுத்தம் கொடுப்பதற்காக மாகாண சபையைத் தமிழ் மக்கள் தெரிவு செய்துள்ள நிலையில், அது, அவர்களது நியாயபூர்வமான அடிப்படைத் தேவைகள் குறித்து செயலாற்றாமல் பேச்சளவில் மட்டுமே நாடகமாடிக் கொண்டிருக்கிறது.

> தமது தேவைப்பாடுகள் குறித்து அழுத்தம் கொடுப்பதற்காக மாகாண சபையை தமிழ் மக்கள் தெரிவு செய்துள்ள நிலையில், அது அவர்களது நியாய பூர்வமான அடிப்படைத் தேவைகள் குறித்து செயலாற்றாமல் பேச்சளவில் மட்டுமே நாடகமாடிக் கொண்டிருக்கிறது

### பதவிகளைத் தக்க வைக்கவே முயற்சி

அரசு எதையாவது மேற்கொள்ளும் போது வடமாகாணசபை அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அனைத்து மீள்குடியேற்ற மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளையும் முடிவுக்கு கொண்டு வந்து கொண்டிருக்கிறது. இந்த அணுகுமுறை பாதிக்கப்பட்டவர்களின் காயங்களைக் குணப்படுத்துவதற்கு அக்கறை காட்டாது தமது பதவி நிலைகளைத் தக்கவைத்துக் கொள்ளவே அக்கறை காட்டி வருகின்றது என்று எனக்குத் தோன்றுகிறது.

அரசு நீர் விநியோகம், குழாய்க் கிணறு, மின்சாரம், கட்டில்கள், மின்விசிறிகள், இணைய வசதிகள், எரிவாயு கொள்கலனுடன் எரிவாயு சமையல் அடுப்பு, உள்ளடங்கலான தளபாடங்களையும் வீட்டுப் பாவனைப் பொருள்களையும் உள்ளடக்கி கணிசமான பெறுமதியுடைய முழுமையான தளபாட வசதியுடைய வீட்டை வழங்கத் தீர்மானித்த போது அந்தத் திட்டத்துக்கு முதலமைச்சர் எதிர்ப்புத் தெரிவிக்கிறார்.

அவர் கடந்த 30 ஆண்டு காலமாகத் துன்பத்தை அனுபவித்து வரும் மக்களுக்கு எந்தவித வசதிகளுமற்ற முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாத வீடுகளைக் கட்டிக் கொடுக்க விரும்புகிறார்.

இந்த வீடமைப்புத்திட்டத்தை எதிர்ப்பவர்களுக்கு, இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்களிலும் தற்காலிக குடிசைகளிலும் நண்பர்கள் மற்றும் உறவினர்களின் தயவிலும் வாழும் மக்களைச் சென்று பார்க்க வேண்டுகோள் விடுக்கிறேன்.

### அரசியல்வாதிகள் சொகுசு வீட்டில்

குளிரூட்டி வசதிகளுள்ள வீடுகளில் வாழ்பவர்கள் தமது குடும்ப உறுப்பினர்களுக்கும் பிள்ளைகளுக்கும் நல்ல வீடுகளையே விரும்புகின்றனர். ஆனால் தம்மைத் தேர்தல் மூலம் தெரிவு செய்யும் தொகுதி மக்களுக்கு அத்தகைய வசதியான வீடுகளை இடித்துத் தள்ளி எந்த வொரு வசதிகளுமில்லாத அரை குறையாக நிர்மாணிக்கப்பட்ட வீடுகளையே வழங்க விரும்புகின்றனர்.

இந்த வீடமைப்புத்திட்டத்தின் அடிப்படை உண்மைகளை உணராது நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அது தொடர்பாக ஒரு மாதத்துக்கு முன்னர் குற்றஞ்சாட்டினார். அவரது கடிதத்தில் ஏற்கனவே வழங்கப்பட்டிருந்த தகவல்கள் தொடர்பான மிகவும் அடிப்படையான கேள்விகளை மட்டுமே அவர் கேட்டிருந்தார்.

வெற்றிபெற்ற அரசுகளால் தமிழ் சமூகத்தின் பொருளாதார மற்றும் சமூக நிலைப்பாட்டைத் தரமுயர்த்துவதற்குக் கொண்டு வரப்பட்ட ஒவ்வொரு அபிவிருத்தித் திட்டத்துக்கும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டு வந்துள்ளது. அதனால் அந்த சமூகத்துக்கு மோசமான பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

தமது சொந்தத் தொகுதிகளுக்கு எதனையும் செய்யாத இந்த அரசியல்வாதிகள், மற்றவர்கள் ஏதாவது நல்ல அபிவிருத்தி பணியை மேற்கொள்ளும் பட்சத்தில் அதனை எதிர்த்து வருகின்றனர்.

### முதலமைச்சரின் புதுக் குற்றச்சாட்டு

இதற்கு முன் முதலமைச்சர் விலை, பாவனை, மோதல்களுக்கு பின்னரான நிர்மாணம் மற்றும் நிலக்கீழ் நீர் என்பன தொடர்பில் தனது விவாதங்களை முன்வைத்திருந்தார். அந்தப் பலவீனமான விவாதங்களுக்கு தொழில்நுட்ப ரீதியாக விளக்கமளிக்கப்பட்டது.

தற்போது அவர் இந்த ஜெனீவா அடிப்படையிலான ஆரம்பம் என்ற புதிய நிகழ்ச்சித் திட்டத்துடன் வந்துள்ளார்.

ஜனாதிபதியும், பிரதமரும் இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதிலும் மோதல்களால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் சமூக நிலையைத் தரமுயர்த்துவதிலும் மிகுந்த அக்கறை எடுத்து வருகின்ற நிலையில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த வாய்ப்புக்களைப் பயன்படுத்தித் தம்மால் இயன்றளவு சிறப்பாகச் செயற்பட வேண்டும். எவரும் எல்லோரையும் எந்த நாளும் முட்டாள்களாக்க முடியாது. - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஜ-5)

### வெளிநாட்டு வாழ் இலங்கையரும் வாக்களிக்க சந்தர்ப்பம்

எதிர்வரும் தேர்தல்களில் வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களுக்குவாக்களிப்பதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல் மற்றும் அதற்கு அனுகூலமான காரணிகளை ஆராய்ந்து அறிக்கைப்படுத்துவதற்கான விசேடமான நாடாளுமன்றச் செயற்குழுவொன்றை நியமனம் செய்வது தொடர்பாக நாடாளுமன்றத்தின் அனுமதி கிடைத்துள்ளது.

இது சம்பந்தப்பட்ட பிரேரணை மாத்தறை மாவட்ட (ஜே.வி.பி) நாடாளுமன்ற உறுப்பினரான சுனில் ஹந்துன்நெத்தியால் முன் மொழியப்பட்டிருந்ததோடு, கொழும்பு மாவட்டத்தின் (ஐ.ம.சு.மு) நாடாளுமன்ற உறுப்பினரான தினேஷ் குணவர்த்தனவால் வழி மொழியப்பட்டிருந்தது. (ற-ஜ-22)

## துறைமுகங்கள் அதிகார சபைக்கு ரூ.100 மில்லியன் வரையில் நட்டம்

### தொழிற்சங்க நடவடிக்கைகளால்

கொழும்பு,ஏப்.12
போனஸ் கொடுப்பனவுகள் குறைக்கப்பட்டுள்ளமை உள்ளிட்ட தொழிற்சங்கக் கோரிக்கைகளை முன்வைத்து கடந்த வாரம் நடத்தப்பட்ட தொழிற்சங்க நடவடிக்கைகளால், துறைமுகங்கள் அதிகார சபைக்கு 100 மில்லியன் ரூபா வரையில் நட்டம் ஏற்பட்டுள்ளது என்று துறைமுகங்களின் ஒருங்கிணைந்த தொழிற்சங்கத்தின் ஏற்பாட்டாளரான உதேனி கலுதந்திரி தெரிவித்துள்ளார்.

துறைமுக ஊழியர்களின் கோரிக்கைகளுக்குத் துறைமுக நிர்வாகத்தரப்புக்களால் தீர்வுகள் வழங்கப்படாதிருப்பதால் இந்த நட்டம் ஏற்பட்டுள்ளது என்றும் கடந்த வாரம் மூன்று கடற்படைக் கப்பல்கள் வந்து திரும்பிச் சென்றுள்ளன என்றும் தெரிவித்துள்ளார்.

இந்தப் பெரிய அளவிலான நட்டத்துக்கு சம்பந்தப்பட்ட அமைச்சரும், தலைவருமே பொறுப்புக் கூற வேண்டியுள்ளது எனவும், இந்தளவு பெரிய நட்டம் ஏற்பட்டுள்ள நிலையிலும் துறைமுக ஊழியர்களுடன் பேசித் தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு இன்று வரையிலும் எந்தவொரு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது இவ்வாறிருக்க, இந்தப் போராட்டத்தை ஒழுங்கு செய்திருந்த தொழிற்சங்கங்களின் தலைவர்களுக்கு துறைமுகங்கள் அமைச்சர் அர்ஜுண ரணதுங்க கொலை அச்சுறுத்தல் விடுத்துள்ளார் என்றும் அது சம்பந்தமாக மோதர பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

துறைமுகங்கள் அமைச்சரதும் தலைவரினதும் தான்தோன்றித்தனமான செயற்பாடுகள் காரணமாக மற்றும் துறைமுகங்கள் அதிகாரசபை முடங்கிப் போகும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்றும், நாட்டின் இதயத்தைப் போன்ற துறைமுகத்தைச் சிறப்பாக நிர்வகிக்கக்கூடிய தலைவரொருவருக்கு துறைமுகத்தைக் கையளிக்குமாறு ஜனாதிபதியிடமும் பிரதமரிடமும் கோருகின்றோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற-ஜ-22)

## பிரகீத் வழக்கின் சந்தேக நபர்கள் கையொப்பத்தை மாற்றியுள்ளனர்

### குற்றப்புலனாய்வு அதிகாரி நீதிமன்றில் தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.12
ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்தப்பட்டு காணாமற்போகச் செய்யப்பட்டது தொடர்பாகக் கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்களான இராணுவப் புலனாய்வு அதிகாரிகள் தமது கையொப்பங்களை மாற்றியியுள்ளனர் என்று குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

ஹோமகம நீதிமன்றத்தில் கடந்த சனிக்கிழமை இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, முன்னிலையான, குற்றப் புலனாய்வுப் பிரிவின் உதவிப் பொலிஸ் கண்காணிப்பாளர் அபேசேகர இதுபற்றி நீதிவானிடம் தெரியப்படுத்தினார்.

இந்த வழக்கில் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஒன்பதாவது சந்தேக நபரின் கையொப்பத்தைத் தாம் ஆராய்ந்த பின்னர், சந்தேக நபர்கள் தமது கையொப்பத்தையும் கூட மாற்றியுள்ளனர் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். சந்தேக நபரின் கையொப்பம் சில ஆண்டுகளுக்கு முன்னர் இராணுவ ஆவணங்களில் அவர் ஒப்பமிட்டுள்ளது போன்று இல்லை.

2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம், பிரகீத் எக்னெலிகொட அக்கரைப்பற்றுக்குக் கொண்டு செல்லப்பட்டார் என்று தெரிய வந்துள்ளது. சந்தேக நபர்கள் இராணுவ முகாமிலுள்ள எரிபொருள் நிலையத்தில் எரிபொருளைப் பெற்றுள்ளனர். அந்த இராணுவ எரிபொருள் நிலையத்தின் ஆவணங்களில் சந்தேக நபரின் கையொப்பம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரி தெரிவித்துள்ளார்.

இதையடுத்து இந்த விசாரணைகளைத் துரிதப்படுத்துமாறு, குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு உத்தரவிட்ட நீதிவான், சந்தேக நபர்களை எதிர் வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (ற-ஜ-5)

## மின் உற்பத்தி நிலையங்களில் கமரா பொருத்த நடவடிக்கை

கொழும்பு, ஏப்.12
பிரதானமான மின் உற்பத்தி நிலையங்களிலும், ஏனைய அனைத்து உபமின்உற்பத்திநிலையங்களிலும் சீ.சீ.ரி.வி.கமராக்களைப் பொருத்துவதற்கு மின்சார சபை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

அதற்கமைய 19 மின் உற்பத்தி நிலையங்கள் மற்றும் 35 உப மின் உற்பத்தி நிலையங்களிலும் சீ.சீ.ரி.வி கமராக்கள் பொருத்துவதற்கு 25 கோடி ரூபா வரையில் தேவை என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தச் செயற்றிட்டத்தில் 3 ஆயிரம் வரையான கமராத் தொகுதிகள் பொருத்தப்படவுள்ளன.

விக்ரோறியா மின் உற்பத்தி நிலையத்தில் 14 கமராக்களும், உக்குவெல மின் உற்பத்தி நிலையத்தில் 38 கமராக்களும் என அனைத்து இடங்களிலும் 3 ஆயிரம் வரையிலான சீ.சீ.ரி.வி கமராக்கள் பொருத்தப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-ஜ-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்தவைச் சிக்கலில் மாட்டியுள்ள மே தினம்

கொழும்பு,ஏப்.12

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்குப் பெரும் தலையிடியைக் கொடுக்கும் தினமாக எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி மாறியுள்ளது. அன்று சுதந்திரக் கட்சி காலியில் நடத்தும் மே தினப் பேரணியில் அவர் கலந்து கொள்வாரா? அல்லது கூட்டு எதிர்க்கட்சியின் தலைமைத்துவத்தின் கீழ் தொழிற்சங்கங்கள் கிருலப்பனையில் ஒழுங்கு செய்துள்ள மே தினப்பேரணியில்கலந்துகொள்வாரா? என்பதே இன்றளவில் அரசியல் களத்தில் பேசப்படும் முக்கிய விடயமாகியுள்ளது.

இதனிடையே காலியில் உள்ள சமனல விளையாட்டுத் திடலில் நடத்தப்படவுள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மே தினப் பேரணிக்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு அழைப்பு விடுத்துள்ளோம் என்று சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள் சிலர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை–கிருலப்பனையில் உள்ள லலித் அத்துலத் முதலி விளையாட்டுத் திடலில் நடத்துவதற்கு ஒழுங்குசெய்யப்பட்டிருக்கும் கூட்டு எதிர்க்கட்சியின் தலைமையிலான தொழிற் சங்கங்களின் அரசுக்கு எதிரான ஒருங்கிணைந்த மே தினப் பேரணிக்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்று கூட்டு எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

தற்போது சிறிலங்கா சுதந்திரக் கட்சியினுள் நிலவி வரும் பனிப்போரை முடிவுக்குக் கொண்டு வந்து நடத்தப்படும் இந்த இரண்டு பேரணிகளின் பின்னர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் எதிர்காலம் சம்பந்தப்பட்ட நல்லதொரு அரசியல் தீர்வு எட்டப்படுவதற்கு பெரும்பாலும் இடமுண்டு என்று அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.(ற-ஐ-22)

# இந்தியக் கடலை கட்டுப்படுத்துவதில் இந்தியா – சீனா மோதல் ஏற்படாது

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.12

இந்தியப் பெருங்கடலைக் கட்டுப்படுத்துவதில் சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடையில் மோதல் ஏற்படும் வாய்ப்பு இல்லை. இது தொடர்பில் இந்தியாவுடன் பேச்சுக்கள் நடத்தப்பட்டுள்ளன என்று பிரத மர் ரணில் விக்கிரமசிங்க தெரி வித்துள்ளார்.

பீஜிங்கில் செய்தியாளர்களிடம் பேசிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கொழும்புத்துறைமுக நகரத் திட்டத்தால், பாதுகாப்புப் பிரச்சினை ஏற்படும் என்ற கேள்விக்கே இடமில்லை. இந்தியாவின் பாதுகாப்புக் கரிசனைகள் எம்மால் தீர்க்கப்பட்டுள்ளன. இதுபற்றி இந்தியாவுடன் மேலும் பேச்சுக்கள் நடத்தப்படும்.

துறைமுக நகரத் திட்டமோ, பெரு நகரத் திட்டமோ எவருக்கும் அச்சுறுத்தலாக அமையாது. இது எல்லோருக்கும் பணத்தைச் சம்பாதிக்கும் ஒரு வாய்ப்பாகும். வெளிநாட்டு முதலீட்டுத் திட்டங்களில் பல குறைபாடுகள் இருந்ததைக் கண்டுபிடித்தோம். அவற்றை நாம் நிராகரிக்கவில்லை. அவற்றைத் திருத்தியமைத்து புதிய வடிவம் கொடுத்திருக்கிறோம்.

> பயிற்சி தொடர்பாக மேலும் இராணுவ ஒத்துழைப்புக்களை நாம் வலுப்படுத்தவுள்ளோம். சீனா எமக்கு ஒரு ஆழ்கடல் ரோந்துக் கப்பலை வழங்கவுள்ளது.

துறைமுக நகரத் திட்டத்தில் சீனாவுக்கு நிலத்தை உரிமையாகக் கொடுக்கவில்லை. ஆனால் 99 ஆண்டு குத்தகைக்குக் கொடுத்திருக்கிறோம். இந்தியப் பெருங்கடலில் துறைமுக நகரம், ஒரு நிதி மற்றும் வர்த்தக கேந்திரமாக இருக்கும்.

சீனாவுடனான உடன்பாட்டு விடயத்தில் நீண்டகாலம் நிலையான கொள்கையைப் பின்பற்றப்பட வேண்டும் என்பதால் பீஜிங் புறப்பட முன்னர், முன்னாள் ஜனாதிபதிகள் மகிந்த ராஜபக்ச, சந்திரிகா குமாரதுங்க ஆகியோருடனும் பேச்சு நடத்தியிருந்தேன்.

இலங்கையில், சீனா எந்த இராணுவத் தளத்தையும் அமைப்பதற்குக் கோரவில்லை. பயிற்சி தொடர்பாக மேலும் இராணுவ ஒத்துழைப்புகளை நாம் வலுப்படுத்தவுள்ளோம். சீனா எமக்கு ஒரு ஆழ்கடல் ரோந்துக் கப்பலை வழங்கவுள்ளது. இந்தியாவும் கூட எமக்காக இரண்டு ஆழ்கடல் ரோந்துக் கப்பல்களைக் கட்டி வருகிறது.

இந்தியப் பெருங்கடலில் சீனா–இந்தியாவுக்கு இடையில் மோதல் ஏற்பட வாய்ப்பில்லை. இந்தியப் பெருங்கடல் கடல் சார் கொள்கைச் சட்டங்களின் படி நிர்வகிக்கப்பட வேண்டும். சுதந்திரமான நடமாட்டத்துக்கு இடமளிப்பதாக இருக்க வேண்டும். இந்தியப் பெருங்கடலில் சுதந்திரமான நடமாட்டத்தை இலங்கை உறுதி செய்யும்.



இங்கு கடற்கொள்ளைக்கு எதிரான நடவடிக்கைகளில் இந்தியக் கடற்படை ஈடுபடுகிறது. சீனாவும் டிஜிபோட்டியில் தளத்தை அமைக்கிறது. பல நாடுகள் தளங்களை அமைக்கின்றன. ஆனால், அவை ஐ.நாவின் கடற்கொள்ளை முறியடிப்பு உடன்பாட்டின் ஒரு பகுதியாகவே இருக்கின்றன.

கடற்கொள்ளைக்கு எதிரான சீனாவின் இராணுவப் பிரசன்னம், இந்தியப் பெருங்கடலில் மோதலை உருவாக்கும் என்று கருதவில்லை. அம்பாந்தோட்டை துறைமுகம் சீனாவிடம் கையளிக்கப்படாது. அம்பாந்தோட்டை அபிவிருத்தி சீனாவினுடையதல்ல. அது இலங்கையின் அபிவிருத்தி திட்டம்.

எவரும் வந்து பிரதேசங்களை அபிவிருத்தி செய்யலாம்;- என்று தெரிவித்துள்ளார். (ற-ஐ-5)

# வாக்களிப்பதற்குத் தகுதியான அனைவரும் வாக்காளர்களாவர்

## புதிய செயற்றிட்டம் நடைமுறைக்கு

கொழும்பு, ஏப்.12

வாக்களிப்பதற்குத் தகுதிகளைப் பெற்றுள்ள ஒரு நபரைக்கூட கைவிட்டு விடாது அனைத்து நபர்களையும் வாக்காளர்களாக்கும் நாடளாவிய தேர்தல் செயற்பாடொன்றைத் தேர்தல்கள் ஆணைக் குழு நடைமுறைப்படுத்தவுள்ளது.

தேர்தல்கள் திணைக்களத்தால் நடைமுறைக்குக் கொண்டு வரப்படும் இந்த மூலோபாயத் திட்டத்தின் கீழ், எந்தவொரு வாக்காளரும் கைவிடப்படாத விதமாக வாக்குரிமை பெற்றுள்ள அனைவரும் விழிப்புணர்வூட்டப்படவுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

மூன்றாண்டுகள், ஐந்தாண்டுகள் மற்றும் ஏழாண்டுத் திட்டங்களை இதன் கீழ் தயாரித்து நடை முறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும், உத்தியோகத்தர்கள், அரசியல்வாதிகள், பொதுமக்கள், சமயத்தலைவர்கள், தொழிற்றுறையினர், வலுவிழந்தோர், பல்கலைக்கழக மாணவர்கள், புத்திஜீவிகள், மகளிர் அமைப்புக்கள் உள்ளிட்ட பலதரப்பட்ட பிரிவுகளிடமிருந்து தகவல்களைச் சேகரித்து இந்தத் தந்திரோபாயத் திட்டம்தயாரிக்கப்பட்டுநடைமுறைப் படுத்தப்படுமென தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மேலும் தெரிவித்தார். (த-ஐ-22)

# கலைஞர்களுக்கு விசேட நிதியம் உருவாக்குமாறு அமைச்சு பணிப்பு

கொழும்பு,ஏப்.12

கலைஞர்களின் நலனோம்பு விடயங்களை மேற்கொள்வதற்கு விசேட நிதியமொன்றை உருவாக்குவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் மத்திய கலாசார நிதியத்தின் உயர் அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

கலைஞர்கள் முதுமை நிலையை எட்டும் போது அவர்களுக்குத் தாக்கத்தை ஏற்படுத்தும் சுகாதாரப் பிரச்சினைகளுக்குச் சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்வது தொடர்பாகப் நிதியைப் பெற்றுக் கொள்ளக் கூடியதான முறைமை ஒன்று அவசியமானது என்பதால், இத்தகைய நிதியமொன்றை ஏற்படுத்துவது பொருத்தமானதாக இருக்குமென்பது அமைச்சர்களின் கருத்தாகவுள்ளது.

அதற்கமைய அந்த நிதியத்தை நிறுவுவதற்கு அடிப்படைச் செயற்பாடுகள் மத்திய கலாசார நிதியத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று தெரியவந்துள்ளது. (ற-ஐ-22)

# தலைமன்னார் – இராமேஸ்வரம் இடையே பாலம் அமைவது உறுதி

## இந்திய மத்திய இணை அமைச்சர் பொன்.இராதாகிருஷ்ணன் தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.12

பாக்கு நீரிணையில் தலை மன்னாருக்கும், இராமேஸ்வரத்துக்கும் இடையில் பாலம் அமைக்கும் திட்டத்தில், இந்திய மத்திய அரசு உறுதியாக இருந்துள்ளது என்று வீதிப் போக்குவரத்து, நெடுஞ் சாலைகள், கப்பல்துறை மத்திய இணை அமைச்சர் பொன். இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டம் இப்போது ஆரம்பக் கட்டத்தில் இருக்கிறது. மகாகவி பாரதியாரின் கனவை நிறைவேற்றும், இந்தத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதில் இந்திய மத்திய அரசு உறுதியாக இருக்கிறது.

இந்தத் திட்டத்தில் இலங்கை அரசும் இணைந்து கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-ஐ-5)

# கட்டுப்பாட்டு விலைகளை மீறி அதிக விலையில் பொருள்கள்

கொழும்பு,ஏப்.12

நுகர்வோர் அதிகார சபையால் அத்தியாவசியப்பொருள்களுக்கான கட்டுப்பாட்டு விலைகள் அறிவிக்கப்பட்டுள்ள போதிலும், அவை நடைமுறைப்படுத்தப்படுவதில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக பண்டிகைக் காலங்களில் அதிக விலை கொடுத்து அத்தியாவசியப் பொருள்களைக் கொள்வனவு செய்யவேண்டி நேர்ந்திருப்பதாக பாவனையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

அத்தியாவசியப் பொருள்களுக்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாட்டு விலைகள் தொடர்பில் வர்த்தக நிலையங்கள் மீது மேற்கொள்ளப்பட்டு வந்திருந்த சுற்றிவளைப்புக்களும் நிறுத்தப்பட்டுள்ளன எனவும் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

குறிப்பாக ஒரு கிலோ கோதுமை மா 87 ரூபா, ஒரு கிலோ சீனி 87 ரூபா, ஒரு கிலோ பருப்பு 169 ரூபா, ஒரு கிலோ கடலை 169 ரூபா, நெத்தலிக்கருவாடு ஒரு கிலோ 410 ரூபா என கட்டுப்பாட்டு விலைகள் விதிக்கப்பட்டுள்ள போதிலும், இவற்றைஅதிகவிலை கொடுக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஐ-22)

# எம்மை விமர்சித்தவர்கள் இப்போது சீனாவின் பக்கம்

## மகிந்த எம்.பி. கூறுகின்றார்

கொழும்பு, ஏப்.12

சீனாவின் நிதியில் அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்த முன்னைய அரசை, தற்போதைய அரசில் உள்ளவர்கள் தொடர்ந்து விமர்சித்து வந்தனர். ஆனால் இப்போது அவர்கள் சீனாவை நோக்கித் திரும்பியிருக்கிறார்கள். – இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அங்குனுகொலபெலஸ்ஸவில் நேற்று முன்தினம் நடந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அயலில் உள்ள நாடுகளுடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியம். சீனாவின் நிதியில் அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்த முன்னைய அரசை, தற்போதைய அரசில் உள்ளவர்கள் தொடர்ந்து விமர்சித்து வந்தனர். ஆனால் இப்போது அவர்கள் சீனாவை நோக்கித் திரும்பியிருக்கிறார்கள்.

சீனாவின் நிதியில் ஆரம்பிக்கப்பட்ட திட்டங்களுக்கு எதிராக அவர்கள் கருத்துக்களை மட்டும் வெளியிடவில்லை, ஆட்சிக்கு வந்த பின்னர் அந்தத் திட்டங்களையும் இடைநிறுத்தினார்கள். அந்தத் திட்டங்கள் தொடரப்பட்டிருந்தால், நாட்டின் அதிவேக நெடுஞ் சாலை வலையமைப்பு விரிவடைந்திருக்கும். புதிய ஆண்டிலாவது, தமது அரசியல் எதிரிகளை அரசு பழிவாங்காது என்று நம்புகின்றேன்- என்று தெரிவித்துள்ளார். (ற-ஐ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## நாட்டாண்மை கொள்கிறதா நல்லாட்சி?

முல்லைத்தீவு மாவட்டத்தை, எந்த வகைகளிலும் வழிகளிலும், தமிழ் மக்கள், தமது வாழ்விடம்-பிரதேசம்-என்று சொந்தம் கொண்டாடக் கூடாது. அதனை முழுக்க முழுக்கச் சிங்கள மக்கள் வாழும் இடமாக மாற்றிவிட வேண்டும்.

அதுவே, முன்னர் ஆட்சியில் அமர்ந்திருந்த மகிந்த அரசுகளின் உள்ளார்ந்த கபட நோக்கமாக இருந்தது. புதிய நல்லாட்சி அரசும் அந்தத் திசையிலேயே ஆழக்கால் பதித்திருக்கிறது.

அதற்கான முன்னோட்டங்களில் ஒன்றே, கொக்குத்தொடுவாயில் நேற்றுமுன்தினம் மாலையில், இராணுவத் தரப்புக் கட்டவிழ்த்து விட்ட அட்டகாசமும், பதற்றம் மற்றும் களேபரமும்.

ஆம். அந்தப் பகுதியைச் சேர்ந்த கிராம சேவகர்களின் அடையாள அட்டைகளை, இராணுவத் தரப்பினர் அத்துமீறிப் பறித்துச் சென்ற சம்பவத்தின் விளைவாக, முல்லைத்தீவில் மக்கள் மத்தியில் பெரும் பதற்றம் பரவிப் பறந்தது.

அந்தக் களேபரம் பிரதேச செயலரின் செயற்பாட்டினால் பின்னர் தணிந்து போயிற்று.

கிராமசேவகர்களிடம் இருந்து பறித்தெடுக்கப்பட்ட அடையாள அட்டைகள் மீண்டும் உரியவர்களிடம் வழங்கப்பட்டமையால், நிலைமை தளர்வுற்றது.

அரச அதிபர்கள், அந்தந்த மாவட்டத்தின் நேரடி அரச பிரதிநிதிகள். அதற்கான அதிகாரங்கள் அவர்களது பதவி சார்ந்து வழங்கப்படுபவை. அரசமைப்பின் சட்ட வலுக்கள் அதற்குத் தங்கு தடையின்றி, ஊன்றி வகை செய்கின்றன.

அதேவேளை, கிராம சேவகர்களையும் 'குட்டி அரச' அதிபர்கள் என்று கொள்வது ஒருவகையில் பொருந்தும். அவர்களை இன்னல்கள் மற்றும் இடையூறுகளுக்கு ஆட்படுத்துவது எந்த வகையிலும் ஏற்புடையதன்று.

அவர்கள், கேவலப்படுத்தப்படுகிறார்கள் அல்லது இம்சைகளுக்கு உள்ளாக்கப்படுகிறார்கள் என்றால், நல்லாட்சிக்கான அரச இயந்திரம் பிளந்து எறியப்படுகிறது எனலாம். கொடிய ஆட்சி ஒன்று முழு அளவில் சர்வாதிகாரத்தைக் கையில் எடுப்பதாகி விடும்.

மற்றொரு வகையில் கூறின், அரச செயற்பாடுகளில், மிகப்பல கோளாறுகள், முகிழ்க்கப் போகின்றன. ஆட்சியாளர்களிடம் சர்வாதிகார ஓர்மம் முளைத்து எழுகிறது; அதன் முன்னோட்டம் என்றும் இதனைக் கொள்ளலாம் அல்லவா?

இத்தகைய போக்கும், செயற்பாடுகளும் நல்லிணக்கத்தைத் துளிர்த்து எழச்செய்யாது; பதிலுக்கு நசித்துத் துவம்சம் செய்யும்!

உள்ளார்ந்து நோக்கின், அரச இயந்திரம் செயற்படுவதில் எங்கோ ஒரு வகைக் கோளாறு உள்ளது என்பதே முழுதார்ந்த அர்த்தம்!


இத்தகைய செயற்பாடுகள், அனைத்துலக மட்டத்தில் இலங்கைக்குப் பெரும் தலைகுனிவை உண்டாக்கும் என்பதை, அரசு--குறிப்பாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர்-உணர்ந்து உள்வாங்குவது எப்போது...?

அதற்குப் பின்னடித்தால், ஜனநாயகம், சட்ட ஆட்சி என்பன கேலிக்குரியதாக மட்டுமன்றி, கேள்விக்கு உரியனவாகவும் பருத்துப் பெருக்கும்!

அத்தோடு நல்லாட்சி, நாட்டாண்மை என்று உருக்கொண்டு ஆடும்...

# வடக்கு – கிழக்கு மீளிணைப்பும் தமிழ் – முஸ்லிம்களின் உறவும்

எம்.ஐ.முபாறக்



இந்த நாட்டு மக்கள் பலத்த எதிர்பார்ப்புகளுடன் தான் இந்த அரசை உருவாக்கினர். அந்தவகையில், எல்லோரையும்விட சிறுபான்மை இன மக்களின் எதிர்பார்ப்புகள் அதிகமாக உள்ளன. அவர்கள் அனுபவித்து வரும் துன்பங்கள் அனைத்துக்கும் முற்றுப்புள்ளி வைக்கும் அரசாக இந்த அரசு அமைய வேண்டும் என அவர்கள் விரும்புகின்றனர்.

### நம்பிக்கை ஊட்டும் ஆண்டு

அந்தவகையில், ஆட்சி மாற்றம் ஏற்பட்ட 2015ஆம் ஆண்டு சிறுபான்மை இன மக்களுக்கு நம்பிக்கையூட்டும் ஆண்டாக இருந்தது. சிறுபான்மை இன மக்களுக்கு மாத்திரமன்றி முழு நாட்டுக்கும் அது நல்லதொரு ஆரம்பத்தைக் கொடுத்தது. சிறுபான்மை இனமக்கள் முழுமையாக ஜனநாயகம் – அரசியல் உரிமை போன்றவற்றை அடைந்துகொள்வதற்கான நுழைவாயிலாக 2015ஆம் ஆண்டு காணப்பட்டது.

தமிழ் – முஸ்லிம் மக்களுக்குப் பெரும் சாபக்கேடாக இருந்து வந்த மகிந்தவின் ஆட்சி 2015இன் ஆரம்பத்தில் கவிழ்ந்ததன் ஊடாக அந்த நுழைவாயில் திறக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 2015 முழுவதும் சிறுபான்மை இன மக்கள் ஓரளவு நிம்மதிப் பெருமூச்சை சுவாசிக்கத் தொடங்கினர்.

முஸ்லிம்களுக்கு எதிரான பௌத்த பேரினவாதம் முடிவுக்கு வந்தது. தமிழர்களின் ஓரிரு பிரச்சினைகள் தீர்த்துவைக்கப்பட்டன. காணிகள் மீள ஒப்படைப்பு, அரசியல் கைதிகளில் சிலரின் விடுவிப்பு என ஒரு சில நல்ல விடயங்கள் – நம்பிக்கையூட்டும் செயற்பாடுகள் தமிழர்களின் சார்பில் நிகழ்த்தப்பட்டன.

2016ஆம் ஆண்டை மேலும் நம்பிக்கையூட்டும் ஆண்டாக சிறுபான்மை இனமக்கள் எதிர்பார்க்கின்றனர். இந்த வருடத்துக்குள் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு வழங்கப்படும் என அரசு அறிவித்துள்ளமையே அதற்குக் காரணம். அது அனைத்து இன மக்களும் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக – குறிப்பாக, தமிழ் – முஸ்லிம் மக்களை ஒன்றிணைத்ததாக அமைய வேண்டும் என்பதே முக்கியம்.

### அரசியல் தீர்வு தொடர்பான எதிர்பார்ப்பு


அரசியல் தீர்வை அரசு முன்வைப்பதற்கு முன்னதாகவே அந்தத் தீர்வு எவ்வாறு அமைய வேண்டும்; அதில் தமிழர்களுக்கான பங்கு என்ன?, முஸ்லிம்களுக்கான பங்கு என்ன? என்ற கேள்விகளுக்கு இரண்டு இனங்களும் தீர்வுகாண வேண்டிய கட்டாயம் இப்போது ஏற்பட்டுள்ளது.

தீர்வுப் பொதி தொடர்பில் இந்த இரண்டு இனங்களையும் மோத விடும் விடயங்களாக காணி, பொலிஸ் அதிகாரம் மற்றும் வடக்கு – கிழக்கு மீளிணைப்பு போன்றவை காணப்படுகின்றன. இந்த விடயங்கள் தொடர்பில் இரண்டு இனங்களும் பேசி ஒரு முடிவுக்கு வர வேண்டும். அந்த முடிவுகள் உள்ளடக்கப்பட்டதாக அரசியல் தீர்வு அமையும் பட்சத்தில்தான் தீர்வு நீண்ட ஆயுளைக் கொண்டதாக அமையும்.

### வடக்கு - கிழக்கு மீள் இணைப்பு

அதிலும், குறிப்பாக,வடக்கு – கிழக்கு மீளிணைப்பு என்பது மிகவும் சிக்கலான விடயமாகும். மீளிணைப்பு சாத்தியப்படுவதே சந்தேகம். அவ்வாறு சாத்தியப்பட்டாலும், அது தமிழ் – முஸ்லிம் மக்களிடையே நிச்சயம் சிக்கலை ஏற்படுத்தி விடும்.

வடக்கு – கிழக்கு மீளிணைப்பை தமிழர்கள் ஆழமாகக் கோரி நிற்கின்றபோதிலும், முஸ்லிம்கள் அது தொடர்பில் மாறுபட்ட நிலைப்பாட்டிலேயே உள்ளனர். குறிப்பாக, கிழக்கு முஸ்லிம்கள் மீளிணைப்பைவிரும்பவில்லை. ஒருவேளை மீளிணைக்கப்படால் முஸ்லிம்களுக்குத் தனியான நிர்வாக அலகு வழங்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்பட வேண்டும் என்பதே முஸ்லிம்களின் நிலைப்பாடு. சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நிலைப்பாடும் இதுதான்.

வடக்கு – கிழக்கு மீளிணைப்பை முஸ்லிம்கள் விரும்பாமல் இருப்பதற்குக் காரணம் இணைந்த வடக்கு –கிழக்குக்குள் முஸ்லிம்களின் சனத்தொகை விகிதாசாரம் குறைந்துவிடும் என்பதுதான். அதனால், முஸ்லிம்களுக்கு அரசியல் ரீதியாக சில இழப்புகள் ஏற்படவும்கூடும்.

குறிப்பாக, வடக்கு – கிழக்கு மீளிணைக்கப்பட்டால் கிழக்கில் முஸ்லிம் ஒருவர் முதலமைச்சராக வருகின்ற வாய்ப்பு இல்லாமல் போய்விடும். அதுபோக, மீளிணைக்கப்பட்ட மாகாணத்தில் காணப்படும் சனத்தொகையை அடிப்படையாக வைத்து தேர்தல் முறைமையில் மாற்றம் கொண்டு வரப்பட்டால் அது நாடாளுமன்றத் தேர்தலிலும் முஸ்லிம்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் என முஸ்லிம்கள் அஞ்சுகின்றனர்.

ஆனால், தமிழ் – முஸ்லிம் மக்களின் ஒன்றிணைந்த தலையீடு இல்லாமல் அரசியல் தீர்வு ஒன்று உருவாக்கப்படுமாக இருந்தால் மாத்திரம்தான் முஸ்லிம்கள் மேற்படி விடயம் தொடர்பில் அஞ்ச வேண்டும். இரண்டு இனங்களும் ஒன்று கூடிப் பேசி தங்களுக்கு ஏற்றவிதத்தில் தீர்வு யோசனையைத் தயாரித்து அதை அரசின் ஊடாக அங்கீகரித்து – உத்தியோக பூர்வ அரசியல் தீர்வாக மாற்றி எடுப்பார்களேயானால் முஸ்லிம்கள் அச்சப்படத் தேவையுமில்லை; தமிழர்கள் அச்சப்படத் தேவையுமில்லை.

அவரவர் பிரச்சினைகள் விரிவாக ஆராயப்பட வேண்டும்; அவற்றுக்கான தீர்வுகள் முன்மொழியப்பட வேண்டும். பிரச்சினையைச் சுமந்து வாழ்கின்ற மக்கள்தான் தீர்வை அடையாளம் காண வேண்டும். இல்லாவிட்டால் பிரச்சினைக்குப் பொருந்தாத தீர்வை அரசு என்ற வெளியாள்கள் திணிக்கும் நிலை ஏற்படும்.

அவ்வாறு திணிக்கப்பட்டால் அது தமிழருக்கும் பாதகமாக அமையலாம்; முஸ்லிம்களுக்கும் பாதகமாக அமையலாம். அதுபோக, இரண்டு இனங்களும் வரலாற்று நெடுகிலும் மனக்கசப்புடன் – வேற்றுமையுடன் வாழும் நிலையும் ஏற்படலாம். அவ்வாறு நடந்தால் அது அரசியல் தீர்வாக அமையாது; இருக்கின்ற பிரச்சினைகளை மேலும் அதிகரிக்கச் செய்யும் ஒரு பொறிமுறையாகவே அது பார்க்கப்படும்.

**தமிழ் – முஸ்லிம் ஒன்றிணைவு**

தமிழ் – முஸ்லிம்கள் ஒன்றிணைந்து தயாரிக்காத – வெளி ஆள்களால் தரப்படும் அரசியல் தீர்வு எதிர்காலத்தில் எவ்வாறான பாதிப்புக்களை ஏற்படுத்தும் என்பதை சற்றுத் தூரநோக்கோடு சிந்தித்துப் பார்த்தால் அந்தப் பாதிப்பைத் தடுப்பதற்கான முயற்சிகளில் இந்த இரண்டு இனங்களும் இப்போதே ஒன்றிணைந்து இறங்கும்.

அரசியல் தீர்வு என்பது மேற்படி இரண்டு இனங்களும் ஒன்றிணைந்து எடுக்கும் இணக்கப்பாடுகளின் அடிப்படையில்தான் அமைய வேண்டும் என்ற உண்மையை இவர்கள் ஏற்றுக்கொண்டாலும் நடைமுறையில் இவர்கள் ஒன்றிணைந்து செயற்படுவதாகத் தெரியவில்லை. கொள்கையளவில் இது மாத்திரம் நிற்கின்றது.

தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒருபுறமும், முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மறுபுறமும் நின்று தமிழ் – முஸ்லிம் ஒற்றுமைக்கு அழைப்பு விடுக்கின்றன.

“அவரவர் பிரச்சினைகள் விரிவாக ஆராயப்பட வேண்டும்; அவற்றுக்கான தீர்வுகள் முன்மொழியப்பட வேண்டும். பிரச்சினையைச் சுமந்து வாழ்கின்ற மக்கள்தான் தீர்வை அடையாளம் காண வேண்டும். இல்லாவிட்டால் பிரச்சினைக்குப் பொருந்தாத தீர்வை அரசு என்ற வெளியாள்கள் திணிக்கும் நிலை ஏற்படும். அவ்வாறு திணிக்கப்பட்டால் அது தமிழருக்கும் பாதகமாக அமையலாம்; முஸ்லிம்களுக்கும் பாதகமாக அமையலாம்.”

மட்டக்களப்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்கூட மீண்டும் இந்த ஒற்றுமையை – அரசியல் தீர்வு விடயத்தில் இரண்டு இனங்களும் ஒன்றிணைந்து நிற்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி இருந்தார்.



ஆனால், இந்த இரண்டு பிரதிநிதிகளும் இவ்வாறு தனித்தனியாக நின்று அழைப்பு விடுப்பதை விடுத்து ஒன்றிணைந்து களத்தில் குதித்தால்தான் அரசியல் தீர்வை பொருத்தமான தீர்வாக மாற்றியமைக்க முடியும். இது தொடர்பில் இந்த இரண்டு கட்சிகளும் அண்மையில் சந்தித்துப் பேசிய தோடுசரி, அதன்பின் எதுவும் நடக்கவில்லை. இந்த இரண்டு கட்சிகளும் களத்தில் குதித்தால்தான் தீர்வு விடயத்தில் தமிழ் – முஸ்லிம் மக்களை ஒரு நிலைப்பாட்டுக்குக் கொண்டு வர முடியும்; தீர்வை சாத்தியமானதாக்க முடியும். முக்கியமாக சர்ச்சைக்குரிய –தமிழ் – முஸ்லிம் உறவைக் கேள்விக் குறியாக்குகின்ற வடக்கு – கிழக்கு மீளிணைப்பு தொடர்பில் ஒரு தீர்மானத்துக்கு வர முடியும். ஆகவே, அரசியல் தீர்வு முயற்சியை சிக்கலாக்கிக் கொண்டிருக்கும் இந்த வடக்கு – கிழக்கு மீளிணைப்பு விவகாரம் முதலில் பேசித் தீர்க்கப்பட வேண்டும். அதனைத் தொடர்ந்து ஏனைய பிரச்சினைகளும் ஆராயப்பட்டு அவற்றுக்கான தீர்வைக் கண்டறிந்து அவற்றின் அடிப்படையில் நிலையான – உறுதியான – மூவின மக்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய அரசியல் தீர்வு பிறப்பதற்கு வழிசமைக்க வேண்டும்.

## மூட நம்பிக்கை என்றால் மூட நம்பிக்கை தான்

கடந்த 6 ஆம் திகதி ஓர் அன்பர் வற்றாப்பளை அம்மனை வந்து பாரும் ஐயா என்று எழுதி இருந்தார். அற்புதம் என்றால் என்ன? சில விடயங்களை நாமே உருவாக்கிக்கொள்வது. அதாவது தீங்கு செய்யும் பாம்புகளை ஓர் இடத்தில் கொல்லாமல் விட்டு விட்டால் அதே இடத்தில் அதிகமாக இருப்பதற்குச் சந்தர்ப்பம் உண்டு. அடுத்து அம்மன் என்பது ஒருவகை சக்தி. அதை நாம் உருவில் வைத்து வணங்குகிறோம், அதற்காக மூட நம்பிக்கையுடன் சேர்க்கக்கூடாது.

நாம் எந்தக் கடவுளையும் வணங்கும் போது எமக்குள் ஒருவகை உற்சாகமும் உந்து சக்தியும் ஏற்படும். அதாவது மூளைக்கும் எமது உடம்புக்கும் உள்ள காந்த சக்தி வேகம் அடையும்போது எமது இதயம் சாந்தமடைந்து புதுப்புது சிந்தனைகள் உருவாகும். அதுவே பக்தி என்பது விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்பு. கடல் நீரில் விளக்கு எரியும் என்பதற்கும் அந்தத் தண்ணீரில் உள்ள ஒருவகை இரசாயன மாற்றமே காரணமாகும். தண்ணீரில் உப்புத் தன்மை அதிகமாகும்போது அதில் சில வாயுக்கள் கலந்துவிடும். வற்றாப்பளை அம்மன் இருக்கும் கடல்பரப்பு அதிகமாக உப்புத் தன்மையுடையது. எனவே விளக்கு எரியும் சந்தர்ப்பம் உண்டு. ஐந்தறிவுக்கும், “ஆறறிவுக்கும் தொடர்புபடுத்தி மூடநம்பிக்கையை இளம் சந்ததியினரிடம் புகுத்தி உண்மையான அம்மன் கடவுளை விளையாட்டாக எடுத்துக்கொள்ளக் கூடாது. அம்மனை வழிபடுங்கள் மூடநம்பிக்கையை கைவிடுங்கள்.

– அன்பரசன்
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

## நடத்துநர்கள் பண்பாகப் பழகவேண்டும்

சில தினங்களுக்கு முன்னர் காங்கேசன்துறை வீதியூடாக யாழ்ப்பாணத்துக்குச் செல்லும் தனியார் பஸ்ஸில் மல்லாகத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்குப் பயணம் செய்தேன். யாழ்ப்பாணத்தில் பஸ்ஸை விட்டு இறங்கிய போது ஐம்பது ரூபாவைக் கொடுத்து மீதியைத் தருமாறு கேட்டபோது, நடத்துநர் எவ்வளவு என்று கேட்டார். நான் 30 ரூபாவை எடுத்துவிட்டு மீதியைத் தருமாறு கேட்டேன். அதற்கு அவர் நானா அல்லது நீங்களா நடத்துநர் எனக் கோபமாகக் கேட்டார். அதற்கு நான் நீர்தான் நடத்துநர். ஆனால், நீர் இவ்வளவு கோபமாகக் கதைப்பதற்கு என்ன காரணம் எனக் கேட்டேன். அவர் ஏதேதோ சொன்னார். பின்னர் நான் மல்லாகத்தில்தான் ஏறினேன் அதற்குரிய கட்டணம் 30 ரூபா. ஆகவே மீதி 20 ரூபா வைத் தாருங்கள் எனக் கேட்டேன். அதற்கும் அவர் ஏதேதோ கதைத்தார். நான் மிகுந்த கவலையுடன் பஸ்ஸை விட்டு இறங்கிச் சென்றேன்.

நடத்துநர்கள் பயணிகளுடன் அன்பாகப் பழகவேண்டியது அவசியமாகும். ஏனென்றால் பயணிகள் பல்வேறு மனநிலைகளில் பஸ்களில் ஏறிப் பயணம் மேற்கொள்வார்கள். அவர்களுக்குக் கவலையை ஏற்படுத்தும் விதத்தில் நடத்துநர்கள் நடந்து கொள்கின்றமை நல்லதல்ல. [illegible] செயலும் அல்ல.

– ப.வரதராஜன்.

## இனியாவது சிந்திப்பார்களா?

நவாலி தெற்குக் கொத்துக்கட்டி வீதி அண்மையில் புனரமைப்பு செய்யப்பட்டிருந்தது. இந்த வீதியானது நவாலி அரசடியில் இருந்து கல்லுண்டாய் வீதி வரைக்கும். நாம் இந்த வீதியைப் புனரமைப்பதற்குத் தேவையான கற்கள் மண்கள் போறவை பறிக்கப்படுகின்றபோது மிகவும் சந்தோசப்பட்டோம். இந்த வீதியில் அரசடியில் இருந்து வருகின்ற போது சிறு சிறு கிடங்குகளே காணப்பட்டன. ஆனால் கல்லுண்டாய் பக்கம் இருந்து வருகின்றபோது மழை காலங்களில், வெள்ளம் வீதியை மேவிப்பாயும். கோடை காலங்களில் சூனியப் பிரதேசமாகக் காட்சியளிக்கும். எனவே தான் நாம் சந்தோசப்பட்டோம். இந்த முறை வீதிமுழுவதும் திருத்தப்பட்டு இந்த வீதியால் பயணிப்போர் எந்த வித சிரமங்களும் இன்றி பயணிக்கலாம் என்று நினைத்தோம்.

ஆனால் கல்லுண்டாய்க்கும் அரசடி வீதிக்கும் இடையில் அரைவாசி திருத்தப்பட்டுள்ளது. கல்லுண்டாய் வீதியில் இருந்து வரும் பக்கம் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட வீதி திருத்தப்படாது உள்ளது. ஏனெனில் அது சங்கானைப் பிரதேச சபைக்கு சொந்தமானதாம். இது மக்களாகிய எமக்குத் தெரியுமா? வலி.தென்மேற்குப் பிரதேச சபையும் வலி.மேற்குப் பிரதேச சபையும் இணைந்து இந்த வீதியைத் திருத்தியிருக்கலாம். முன்பு ஒருமுறையும் இந்த வீதி இவ்வாறே திருத்தப்பட்டது. எனவே இந்த வீதி தொடர்பில் போய் நாம் எங்கே சென்று முறையிடுவது...?

– வலிகாமத்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அன்னை திரேசாவுக்கு பிரிட்டன் உயர் விருது

லண்டன், ஏப்.12
பிரிட்டனின் மிக உயரிய பவுண்ட்டர்ஸ் விருது அன்னை திரேசாவுக்கு வழங்கப்பட்டுள்ளது.
பிரிட்டனைச் சேர்ந்த இந்திய வம்சாவளி தொழிலதிபர் பால் சாகு கடந்த 2010 ஆம்ஆண்டில்ஆசியன்விருதை தோற்றுவித்தார். பொதுச் சேவை, வணிகம், கேளிக்கை, கலை, விளையாட்டு என 14 பிரிவுகளில் ஆண்டு தோறும் ஆசியன் விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.
6ஆவது ஆசியன் விருது வழங்கும் விழா லண்டனில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்த விழாவில் அன்னை திரேசாவுக்கு பவுண்ட்டர்ஸ் என்ற விருது அறிவிக்கப்பட்டது. திரேசாவின் உறவினர் அஜி போஜாஜியு விருதினைப் பெற்றுக் கொண்டார்.
சிறந்த தொழில் குழுமத் தலைவர் விருது பிரகாஷ் லோகியா, சிறந்த கலைஞர் விருது உஸ்மான், சிறந்த விளையாட்டு வீரர் விருது சோன் ஹாங்-மின், திரைப்படைத் துறை சாதனையாளர் விருது ஆசிப் கபாடியா, சிறந்த டி.வி. நடிகர் விருது குணால் நய்யார் உள்ளிட்டோருக்கு வழங்கப்பட்டன. (தி)

# 219 மாணவிகளை வி

# 40 மில்லியன் ஸ்ரே

## கப்பம் கோருகின்றது போகோ ஹ

அபுஜா, ஏப்.12
போகோ ஹராம் அமைப்பினர் கடத்திய பெண் பிள்ளைகளை விடுவிக்க மீண்டும் 40 மில்லியன் ஸ்ரேலிங் பவுண்டுகளைப் பேரமாக முன்வைத்துள்ளனர்.
276 சிக்போக் பகுதிப் பாடசாலை மாணவிகள் கடத்தப்பட்டு 2 வருடங்களின் நிறைவு கடந்த வியாழக்கிழமை நினைவு கூரப்பட்டது. அவர்களில் சிலர் தப்பித்து வெளி வந்தனர். ஆனால் இன்னமும் 219 பேர் காணாமற்போயுள்ளனர். இந்த நிலையில் நேற்றுமுன்தினம் சர்வதேச ஊடகம் ஒன்று வெளியிட்ட செய்தியில், போகோ ஹராம் அமைப்பு நைஜீரிய அரசுடன் மாணவர்களை விடுவிப்பதற் கான பேரத்தை நடத்தியுள்ளது எனச் செய்தி வெளியிட்டுள்ளது.
அந்த செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
10 பில்லியன் நைரா அல்லது 40 மில்லியன் ஸ்ரேலிங் பவுண்ஸ்கள் பணம் தருவதாக இருந்தால் தாம் மாணவிகளை விடுவிப்போம் எனத் தெரிவித்துள்ளது.



# குறைந்த வயதில் சீனாவில் வேட்பாளரான இளைஞன்



ஹொங்கொங், ஏப்.12
ஹொங்கொங்கில், பதின்ம வயது வாலிபன் அரசியல் கட்சியை ஆரம்பித்துள்ளார். 2014 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கட்சி உலக அரசியலின் கவனத்தை ஈர்த்தது. வேட்பாளராகப் போட் டியிட்டு தோல்வியடைந்த போதும், தற்போது அவர் டெமொசிஸ்டோ கட்சியின் செயலாளராக உள்ளார். எதிர்வரும் சட்ட மன்றத் தேர்தலில் அவர் போட்டி யிடவுள்ளார். குறித்த பிரதான கட்சி தனக்கான இரு ஆசனங்களை தம்மு டன் இணையும் புதிய கட்சியினருக்கு வழங்கும் நோக் கோடு வேட்பாளரை நிறுத்தத்திட்டமிட்டுள் ளது.
மாணவத் தலைவராக இருந்த வோங் என்ற வாலிபன் தனது 19 ஆவது வயதில் அரசியல் கட்சியை ஆரம்பித்தார்.
மாணவத் தலைவனாக இருக்கும் போது வீடு வீடாகச் சென்று மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.
ஆனாலும் சிறப்பான எதிர்காலத்துக்கு இவை போதாது என்று உணர்ந்ததால், தொடர்ந்து போராட அரசியலுக்குள் நுழைந்ததாக ஊடகத்துக்குத் தெரிவித்தார்.
இளைஞராகிய சாம் அரசியலுக்குள் நுழைய வேண்டும். கட்சிகளுக்குள் உள்ள அமைப்புகளை மாற்ற வேண்டும், சுய உரிமைக்கான தீர் வைப்பெற வேண்டும் என வோங் மேலும் தெரிவித்தார்.
அதிகாரிகளுக்கு எதிராகப் போராடுவதற்கு அவர் தயாரானார். தேசிய கல்விக் கட்டமைப்புக்கு எதிரான ஒரு வலுவான பிரசாரத்தை மேற் கொண்டார். அத்துடன் வாக்களிக்கும் உரிமை தொடர்பாக மக்களுக்கு விளக்கம் அளித்து வாக்கு வீதத்தை அதிகரிக்கச் செய்தார். ஹொங்கொங் மக்கள் வாக்குரிமை மூலம் எதிர்காலத்தை தீர்மானிக்க வேண்டும் என அவர் தெரிவித்தார். (த-ரி4)

# தெற்காசியாவில் நிலநடுக்கம்

புதுடில்லி, ஏப்.12
தெற்காசியாவில் நேற்று முன்தினம் நில நடுக்கம் உணரப்பட்டது. இந்தியா,பாகிஸ்தான்,ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் 6.6 ரிச்டர் அளவில் இந்த நிலநடுக்கம் உணரப்பட்டது. இந்த நிலநடுக்கத்தில் 6 பேர் உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது.
அமெரிக்க புவியியல் நிலையம் தெரிவிக்கையில், வட கிழக்கு ஆப்கானிஸ்தானில் அஷ்காஷாம் பகுதியை மையப்படுத்தி நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. 210 கிலோ மீற்றர் ஆழத்தில் இந்த நிலநடுக்கம் உணரப்பட்டது.
புதுடில்லி, காபூல், இஸ்லாமாபாத் ஆகிய நகரங்களில் இந்த நிலநடுக்கம் உணரப்பட்டது. வட மத்திய பாகிஸ்தான், இந்தியாவின் வட பகுதியிலும் கட்டடங்கள் அதிர்ந்தன. பாகிஸ்தானில் மக்கள் பீதியில் வெளியான இடங்களில் கூடினர்.
இடர் தொடர்பில் பாகிஸ்தான் அரச ஊடகப் பேச்சாளர் தெரிவிக்கையில்,
மாலை 4 மணி அளவில் உணரப்பட்ட நிலநடுக்கத்தால், இடிபாடுகளில் சிக்கிய சிறுவர்கள் பலர் காயமடைந்துள்ளனர். 3 பேர் படுகாயமடைந்துள்ளனர். இடிபாடுகளுள் சிக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார் -என்றார்.
இந்திய ரெக்டோனிக் தகடுகளுக்கும், யுரேசிய ரெக்டோனிக் தகடுகளுக்கும் இடையில் இடம்பெற்ற நகர்வு இது எனவும், பாரிய சேதத்தை எற்படுத்தாது எனவும் தேசிய புவியியல் ஆய்வு மையத்தினர் தெரிவித்துள்ளனர். (த-ரி4)

# ஏமனில் அ
# 15 இராணு

சனா, ஏப்.12
ஏமனில் ஜனாதிபதிக்கு விசுவாசமான 15 இராணுவத்தினரை அல் குவைதா போராளிக் குழுவினர் கொலை செய்துள்ளனர் என உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.
கடந்த சனிக்கிழமை ஜனாதிபதி அப்ட்-ரபு-மன்சூர்- ஹைடியின் நெருக்கமான படையினர் 15 பேர் கடத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளனர்.
அடீன் பகுதியில் இருந்து, அல் மஷ்றாப் பகுதிக்குப் பயணித்த பாதையில் இராணுவத்தினர் போராளிகளால் கடத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டுள்னர்.
துப்பாக்கிச் சூட்டின் மூலம் கொல்லப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மேலும் 17 படையினர் காயமடைந்துள்ளனர் என்றும், அவர்கள் உயிருடன் இருக்கிறார்கள்



# இளவரச
# இந்தியாவ

லண்டன், ஏப்.12
இங்கிலாந்து இளவரசர் வில்லி
மனைவி கேட் மிடில்டனும் இந்திய
சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள
தினம் பூட்டானில் இருந்து புறப்பட்
இந்தியாவைச் சென்றடைந்தனர்.
இந்தப் பயணத்தின்போது தமது
2008 ஆம் ஆண்டு தீவிரவாதத்தா
தாஜ்மஹால் பலஸ் ஹோட்டலைப்
இதன் பின்னர் மும்பை மைதா
டெண்டுல்கருடன் கிரிக்கட் விளை
மிடில்டன். இதன்பின்னர் பங்க
தேக்கத்தைப் பார்வையிட்டனர்.
பொலிவூட் பிரபலங்களுடன் கலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுவிப்பதற்கு
# ரலிங் பவுண்ஸ்
## கா ஹராம்



முன்னதாகக் கடத்தப்பட்டு ஒரு மாதத்தின் பின்னர், சிறையில் உள்ள போகோஹராம் அமைப்பினரை வெளியில் விட்டால், மாண விகளை விடுவிப்பதாக அந்த அமைப்பின் தலைவர் அபுபக்கர்ாகாகு தெரிவித்திருந்தார். ஆனால் அவ்வாறான போராளிகள் யாரும் இல்லை என்ற அரசின் பதிலுக்குப் பின்னர், அவர்களுடன் போர் தொடுத்துச் சில பகுதி நிலப்பரப்பு அரசினால் மீட்கப்பட் டது. இதன் போது கடத்தப்பட்ட பெண்கள் ஆயிரம் பேர் விடுவிக்கப்பட்டனர். ஆனால் அவர்களுள் கடத்தப்பட்ட பாடசாலை மாண விகள் உள் ளடக்கப்படவில்லை.

2014 ஆம் ஆண்டு உளவு விமானங்கள் அனுப்பப்பட்டுத் தேடப்பட்டபோதும், ஒரு வரை மட்டுமே காணக்கூடியதாக இருந்தது என நைஜீரிய இராணுவத் தரப்பு தெரிவித் துள்ளது. சர்வதேச அளவில் பேரம் பேசுவ தற்கான பிடிமானம் பாடசாலை மாணவிகள் எனப் போகோஹராம் அமைப்பினர் திட்ட மிட்டிருப்பதாக ஊடகங்களில் தெரிவிக்கப் பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (த-ரி4)



# வெனிசுலா ஜனாதிபதியின் விநோதமான வேண்டுகோள்

கராக்கஸ், ஏப்.12

நாட்டின்மின்சக்திநெருக்கடியைத் தவிர்க்கப் பெண்கள் பயன்படுத் தும் தலைமுடி உலர்த்திச் சாதனங் களைத் தவிர்க்கவேண்டும் என வெனிசுலா பிரதமர் தெரிவித்துள் ளார்.

அதற்கு பதிலாக இயற்கை நடவ டிக்கைகளை மேற்கொள்ளுமா றும், இதன் மூலம் மின்சார நெருக் கடியைத் தவிர்க்க முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான சாதனங்களின் பாவனையின் மூலம், காற்றின் வெப்பம் அதிகரிக்கப்படுகிறது இதனால் சூழல் மாசு ஏற்படுகிறது என அவர் மேலும் தெரிவித்தார். ஆடை உலர்த்திகளின் பாவ னையையும் கட்டுப்படுத்தவேண் டும் எனவும் அவர் கூறினார்.

ஜனாதிபதியின் இந்த ஆலோச னைக்கு மக்கள் தமது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர். சக்தியைச் சேகரிப்பதற்காக எதிர்வரும் 60 நாள்களில் வெள்ளிக்கிழமை தோறும் வேலை செய்யத் தடை விதிக்கப்பட்டுள்ளது. 70 சதவீத மான மின்சாரம், நீர் மின் உற் பத்தி ஆலை மூலம் பெறப்படுகி றது. நீர் நிலையில் நீர் மட்டத்தின் அளவு குறைவடைவதால், மின் சார உற்பத்தி மட்டுப்படுத்தப்பட் டுள்ளது. இதனால் மேலும் வறட் சியான காலங்களில் மின் சாரம் உற்பத்தி செய்ய முடியாத நிலை ஏற்படலாம் என அதிகாரிகள் தெரி வித்துள்ளனர்.

கராக்கஸ் நகரப்பகுதியில், ஒரு வாரம் முழுவதும் மின்சாரம் நிறுத் தப்பட்டது. இதனால் கராக்கஸ் நகர மக்கள் பெரிதும் பாதிப்படைந்த னர். 100 க்கும் மேற்பட்ட வர்த்தக மையங்கள் மின்சாரத் தடையி னால் பாதிக்கப்பட்டன. இவ்வா றான நிறுத்தங்கள் மூலம் 20 சத வீத மின்சாரத்தையேனும் சேமி க்கஜனாதிபதிதிட்டமிட்டிருப்பதாகத் தகவல்கள் தெரிவித்தன. (த-ரி4)

# அல்குவைதாவால்
# னுவத்தினர் கொலை



என நம்பப்படுவதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

குடும்பத்தைப் பார்க்கச் சென்ற இராணுவ வீரர்கள், சம்பளம் பெறு வதற்காகத் திரும்பி அல் மஹ்ரா நகருக்கு வருகை தந்தபோது இந் தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது எனப் பாதுகாப்புப் படையினர் தெரி வித்துள்ளனர்.

அவர்கள் இராணுவச் சீருடையை அணிந்திருக்கவில்லை, இராணுவ வாகனத்தில் பயணிக்கவில்லை எனவும் அதிகாரிகள் தெரிவித்தனர். 2015 ஆம் ஆண்டு ஈரான் ஹொதிக் கிளர்ச்சியாளருக்கும், ஏமன் ஜனாதி பதி ஆதரவாளருக்கும் இடையில் போர் இடம்பெற்று வருகின்றது. இந் தப் போரில் இது வரை 6 ஆயிரத்து 2 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என் பது குறிப்பிடத்தக்கது. (த-ரி4)

# பதவியைத் துறந்தார் உக்ரைன் பிரதமர்

கிவி, ஏப் 12

உக்ரைன் பிரதமர் அர்சனி யற்சென்யுக் நேற்று முன்தினம் பதவியைத் துறந்தார். சமீப காலமாக இடம்பெற்று வரும் அரசி யல் நெருக்கடி காரணமாக பதவியை இழந்துள்ளார்.

மேற்கு நாடுகளின் உதவியை ஏற்க முடி யாத விதத்தில் அரசியல் நிலைமை உள்ளதால் இந்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. நாட்டின் நிலையை உறுதி யாகப் பேணுவதற்காகப் பதவியை நான் வேறு ஒருவரிடம் ஒப்படைக்கிறேன் எனத் தொலைக்காட்சிச் செவ்வியில் அர்சனி யற்சென்யுக் தெரிவித்துள்ளார்.

இரு வருடங்கள் பதவிக் காலத்தில் இருந்த பின்னர், 2 மாதங்கள் நெருக்கடி நிலையை முன்னிட்டு இந்த அதிரடி முடிவை எடுத்துள்ளார். ஆட்சியில் உள்ள ஜனாதிபதியின் மூலம், புதிய அரசியல் அமைப்பு, சட்டச் சீர்திருத்தம் மேற் கொள்ள முடியும் என அவர் தெரி வித் தார். ஆனாலும் ஐரோப்பிய ஒன்றியத் தில் அங்கத்துவம் வகிப்பதன் மூலம், சர வதேச ரீதியில் ஆதரவைப் பெறமுடியம் என அவர் தெரிவித்தார். (த-ரி4)



# இரு இந்திய மாணவர்கள் உக்ரைனில் படுகொலை

உக்ரைன் நாட்டில் மருத்துவம் பயின்று வந்த இந்திய மாண வர்கள் இருவர் படுகொலை செய்யப்பட்டதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்திய மாணவர்கள் மீது நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் ஒரு வர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து உக்ரைனில் உள்ள மற்ற இந் திய மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது தொடர் பாக உக்ரைனில் உள்ள இந்தியத் தூதரகத்துடன் தொடர்பில் இருப்பதாகவும் வெளியுறவு அமைச்சகச் செய்தித் தொடர்பாளர் விகாஸ் ஸ்வரூப் தெரிவித்துள்ளார்.

உக்ரைனில் இந்திய மாணவர்கள் இருவர் படுகொலை செய்யப்பட்டனர். ஒருவர் படுகாயமடைந்துள்ளார். உக்ரைனைச் சேர்ந்த மூன்று பேர் இந்த கொலையை செய் துள்ளனர். இந்த சம்பவம் மிகவும் துரதிர்ஷ்டவசமானது என விகாஸ் ஸ்வரூப் கூறியுள்ளார்.

கொலையான மாணவர்களின் அடையாளம் தெரியவந்துள் ளது. ஒருவர் உத்தரப் பிரதேச மாநிலம் முசாபர் நகரைச் சேர்ந்த பிரனவ் சைந்தல்யா, மற்றொருவர் காசியாபாத்தைச் சேர்ந்த அன்கூர் சிங் எனத் தெரியவந்துள்ளது. காயமடைந்த ஆக்ரா வைச் சேர்ந்த இந்தர்ஜித் சிங் சவுகான் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்திய மருத்துவ மாணவர்கள் இருவரைக் கொலை செய்தது தொடர்பாக உக்ரைன் நாட்டைச் சேர்ந்த மூன்று பேரை அந் நாட்டுப் பொலிஸார் கைது செய்துள்ளனர். எல்லையைக் கடந்து வேறு நாட்டுக்கு தப்பவிருந்த அவர்களை கைது செய்த பொலிஸார் பாஸ்போர்ட் உள்ளிட்ட ஆவணங்களையும் முடக்கியுள்ளனர்.

இந்த நிலையில், கொலை செய்யப்பட்ட இந்திய மாணவர்கள் இருவரின் சடலத்தையும் அவர்களது உறவினர்களிடம் ஒப் படைக்க தூதரகம் மூலம் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வரு வதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மேலும், உக்ரைன் தலைநகர் கியவில் உள்ள இந்தியத் தூதர கத்துக்கு ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணிக்கு தகவல் கிடைத் திருக்கிறது. அதன் அடிப்படையில் மாணவர்கள் பயின்று வந்த பல்கலைக்கழகம், பொலிஸார் மற்றும் சம்பவம் நடந்த பகுதி யில் வசிக்கும் மக்களிடம் இந்திய தூதரக அதிகாரிகள் தகவல் திரட்டி வருவதாக வெளியுறவு செய்தித் தொடர்பாளர் விகாஸ் ஸ்வரூப் தெரிவித்துள்ளார். (த

# ரசர் வில்லியம் தம்பதி
# ாவுக்கு சுற்றுப்பயணம்

வில்லியமும், அவரது இந்தியாவுக்கு நேற்றுச் னடுள்ளனர். நேற்று முன் றப்பட்ட இவர்கள் நேற்று ந்தனர்.

தமது முதல் கட்டமாக வாதத்தாக்குதலுக்குட்பட்ட டலைப் பார்வையிட்டனர். மைதானத்தில் சச்சின் விளையாடினார் கேட் பங்கங்கா புராதன நீர்த் ட்டனர். நேற்று மாலை ன் கலை நிகழ்வில் பங்கு கொண்டனர். அறக் கொடை நிறுவனத்திற்கு நிதி சேகரிக்கும் நோக்கில் இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது. இத்துடன் தாஜ்மகால், ஹிமாலய ஆட்சி பீடம் என்பவற்றைப் பார்வையிட்டனர். இள வரசர் தம்பதியரின் வருகைக்காகக் கடந்த மாதம் தாஜ்மகால் சுத்தம் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இன்றைய தினம் பிரதமர் நரேந்திர மோடியின் இல்லத்தில் மதிய விருந்துக்கு அழைக்கப்பட் டுள்ளனர். வில்லியம் தம்பதியர் தரையிறங்கிய தினத்தில் கொல்லம் கோவில் விபத்து ஏற்பட்டது. இதற்கு அவர்கள் தமது அனுதாபத்தைத் தெரிவிப் பதாக கெங்சிங்ரன் அரண்மனை ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

(த-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# துர்முகி வருடப்பிறப்பு

### வாக்கிய பஞ்சாங்கம்

கலியுகாதி சுத்ததினம் பங்குனி மாதம் 31 ஆம் திகதி (13.04.2016) புதன்கிழமை முன்னிரவு 6.36 மணிக்கு பூர்வபக்க ஸப்தமித் திதியில், திருவாதிரை நட்சத்திரத்தின் நான்காம் பாதத்தில் அதிகண்டம் நாம யோகத்தில், வணிசக் கரணத்தில் துலா லக்கினத்தில, விருச்சிக நவாம்சத்தில், சூரியன் காலவோரையில், செவ்வாய் சூக்கும வோரையில், ராசத குணவேளையில் நட்சத்திர பக்ஷியாகிய ஆந்தை சாவுத் தொழிலும், சூக்கும பக்ஷி நடைத் தொழிலும் செய்யும் காலத்தில் இந்தப் புதிய துர்முகி வருடம் பிறக்கின்றது.

அன்று பிற்பகல் 2.36 முதல் அன்று முன்னிரவு 10.36 வரை - புண்ணிய காலமாகும்.

இந்தப் புண்ணிய காலத்தில் எவரும் விதிப்படி சங்கற்பித்து மருத்து நீர் தேய்த்து சிரசில் கடப்பமிலையும், காலில் வேப்பமிலையும் வைத்து ஸ்நானஞ் செய்து நல்ல பச்சை, வெள்ளை நிறமுள்ள பட்டாடையாயினும், பச்சைக் கரை வெள்ளைக் கரையமைந்த புதிய பட்டாடையாயினும், தரித்து மரகதம், வைரம் இழைத்த ஆபரணம் அணிந்து, சுகந்த சந்தனம் பூசி, நறுமலர் சூடி விக்னேசுவரர் முதலிய குல தெய்வ வழிபாடு செய்து, இயன்ற தான தருமங்கள் இயற்றி குரு பெற்றோர் முதலிய பெரியோரை வணங்கி அவர்களின் ஆசி பெற்று, பந்து மித்திரர்களுடன் அளவளாவி, அறுசுவை அமைந்த உண்டிகளுடன் மோதகம், அப்ப வர்க்கம், மாதுளம் பழம் என்பவை சேர்த்தருந்தி தாம்பூலந் தரிசித்து புதிய வருட பலாபலன்களை வாசித்தும் கேட்டும் நன்குணர்ந்து அரிய தவத்தால் பெற்ற மானிடப் பிறவியில் செயற்பாலனவற்றை இனிது சிந்தித்து மங்கலகரமாகச் சயனிக்கக் கடவர்.

மறுநாளாகிய 14.4.2016 வியாழக்கிழமை வைகறையில் துயிலெழுந்து மனத்தூய்மையுடன் வழிபடும் கடவுளைத் தியானித்துத் தாம் செய்தவைகளையும் மேல் செயற்பாலனவாகிய அறம், பொருள், இன்பங்களையும் சிந்தித்து கண்ணாடி, தீபம், நிறைகுடம், தனது வலக்கை, தாய், தந்தை, ஆசிரியரின் பாதம், வழிபடும் தேவதையின் திருவுருவம், திருமுறைப் புத்தகம், தாமரை முதலிய பூக்கள், பழவகை, மஞ்சள், குங்குமம், சந்தனம், வெற்றிலை, பாக்கு முதலிய மங்கலப் பொருள்களைத் தரிசித்து நித்திய நைமித்திய கர்மானுஷ்டானங்களை முடித்து, தத்தம் வீடுகளில் சூரியனுக்குப் பொங்கல் பூசை வழிபாடு செய்து முன்போல போசன பூண தானதருமங்களியற்றி மங்கலகரமாக வாழக்கடவர்.

**சங்கிரம தோஷ நட்சத்திரங்கள்:-**
மிருகசீரிடம் 3 ஆம், 4ஆம் கால்கள், திருவாதிரை, புனர்பூசம் 1ஆம், 2ஆம், 3ஆம் கால்கள், சுவாதி, விசாகம் 4ஆம் கால், அனுசம், கேட்டை, சதயம் இவற்றில் பிறந்தோர் தவறாது மருத்து நீர் தேய்த்து ஸ்நானஞ் செய்து இயன்ற தானதருமங்களைச் செய்து சங்கிரம தோசத்தை நிவர்த்தி செய்யக்கடவர்.

**கைவிசேடம்**
16.4.2016 சனிக்கிழமை இரவு 10.38 மணி முதல் 12.23 மணி வரை
16.4.2016 சனிக்கிழமை பின்னிரவு 2.35 மணி முதல் 4.04 மணி வரை
18.4.2016 திங்கட்கிழமை காலை 9.07 மணி முதல் 9.35 மணி வரை
18.4.2016 திங்கட்கிழமை காலை 9.47 மணி முதல் 11.46 மணி வரை
18.4.2016 திங்கட்கிழமை இரவு 6.05 மணி முதல் 7.25 மணி வரை
18.4.2016 திங்கட்கிழமை இரவு 10.19 மணி முதல் 12.15 மணி வரை

### திருக்கணித பஞ்சாங்கம்

மன்மத வருடம் பங்குனி மாதம் 31 ஆம் திகதி (13.04.2016) புதன்கிழமை இரவு உதயாதி நாழிகை இரவு 7.48 மணிக்கு துர்முகி என்னும் பெயருடைய புத்தாண்டு உதயமாகிறது. அன்று நட்சத்திரம் புனர்பூசம் 1ஆம் பாதம், திதி பூர்வபட்ச ஸப்தமி. இது 60 வருட சுற்றுவட்டத்தில் 30 ஆவது வருடமாகும். அன்று மாலை 3.48 முதல் இரவு 11.48 வரை மேட சங்கிரமண புண்ணிய காலம் என்று சொல்லப்படும். வருடம் பிறக்கும்போது உதயலக்கினம் "துலாம்" ஆகும்.

இந்தப் புண்ணிய காலத்தில் சகலரும் சங்கற்ப பூர்வமாக மருத்துநீர் தேய்த்து தலையில் வேப்பமிலையும், காலில் கொன்றையிலையும் வைத்து ஸ்நானஞ் செய்து, பச்சை நிறப் பட்டாயினும் அல்லது பச்சைக்கரை வைத்த வெள்ளைப் புது வஸ்திரமாயினும் தரித்து, மரகதம் சேர்த்திழைக்கப் பெற்ற ஆபரணங்களை அணிந்து, விநாயகர் முதலான இஷ்டகுல தெய்வங்களைத் தரிசனம் செய்து, இயன்ற தானாதிகள் வழங்கி குரு, பெற்றோர் முதலிய பெரியோர்களை வணங்கி அவர்களின் ஆசிபெற்று, விருந்தினர்களை உபசரித்து சுற்றத்தினரிடமிருந்து, மோதகம், வடை, மாதுளம்பழம், நெல்லிக்காய்த் துவையல் போன்றவற்றுடன் அறுசுவைப் பதார்த்தங்களையும் போஜனஞ் செய்து, தாம்பூலம் தரித்து, சுகந்த சந்தன புஷ்பாதிகளை அணிந்து புதுப்பஞ்சாங்க பலன்களைக் கேட்டு சயனிப்பார்களாக.

மறுநாளாகிய சித்திரை முதலாம் திகதி வியாழக்கிழமை அதிகாலையில் எழுந்து கண்ணாடி, பூரண கும்பம், தீபம் முதலிய மங்கலப் பொருள்களைத் தரிசித்து முன்போல் ஸ்நானம் செய்து புதுவருட சூரியனுக்குப் பொங்கல் பூசை வழிபாடுகள் மேற்கொண்டு பிதிர் விரதானுசாரிகள், சிரார்த்தம், தர்ப்பணம் என்பன செய்து சுகந்த சந்தன புஷ்பாதிகளை அணிந்து சுற்றத்தாருடன் போஜனம் மேற்கொண்டு தாம்பூலம் தரித்து, புது வருடத்தில் ஆற்றக் கூடிய நற்கருமங்களைச் சிந்தித்து மங்கலகரமாக வாழ்வார்களாக.

**சங்கிரமதோஷ நட்சத்திரங்கள் :**
மிருகசீரிடம் 3ஆம், 4ஆம் கால்கள், திருவாதிரை, புனர்பூசம், விசாகம் 4 ஆம் பாதம், அனுசம், கேட்டை, பூரட்டாதி.

**கைவிசேடம்**
16.4.2016 சனிக்கிழமை மாலை 6.10 மணி முதல் 7.30 மணி வரை
18.4.2016 திங்கட்கிழமை இரவு 10.16 மணி முதல் 11.20 மணி வரை

# புனர்நிர்மாணத்துக்கான முக்கிய சக்தியாக விளங்கும் பாடசாலைகள்

தேவன்

நவீன முற்போக்குக் கல்விச் சிந்தனையின்படி பாட சாலைகள், சமூக புனர்நிர்மாணத்துக்கான ஒரு முக்கிய சக்தியாக விளங்க முடியும். பாடசாலைக்கு வெளியே மாணவர்கள் வெற்றிகரமாக வாழ்வதற்குப் போதிய திறன்களையும் மனப்பாங்குகளையும் பாடசாலை பாட ஏற்பாடு வழங்குதல் வேண்டும் என்றும் இன்று வலியுறுத்தப்படுகின்றது. இதனையே யுனஸ்கோவின் அண்மைக் காலக் கல்விச் சிந்தனைகள் பாடசாலை பற்றிய இந்தப் புதிய விளக்கத்தை வரவேற்பதாக அமைகின்றன. இவ்வாறான புதிய எண்ணப்பாடுகளைச் சமூக மாற்றத்துக்கான, சமூக ஐக்கியத்துக்கான வழிகளை உள்வாங்கித் தன்னைப் புதுப்பொலிவு பெறச் செய்து வருகின்ற செயற்பாட்டை நவாலி சென். பீற்றர்ஸ். றோ.க.த.க.பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள் ஊடாக நாம் காண்கிறோம். அண்மையில் இந்தப் பாடசாலையின் 135 ஆவது ஆண்டு விழா மிகவும் சிறப்பாக இடம்பெற்றது. இங்கு இடம்பெற்ற புதுமை என்ன? என்று பார்த்தால் நவாலி ஊர் திரண்டு விருந்தினர்களை அழைத்த காட்சி மிகவும் மனதைக் கொள்ளை கொண்டது. அங்கு நின்றவர்கள் தமக்குள்ளேயே யோசித்தார்கள். இப்போது நல்ல அதிபர், நல்ல ஆசிரியர்கள் இணைந்ததால் இன்று ஊரே கூடி நின்று தேர் இழுப்பது போல அமைந்தது என்றார்கள்.

நல்லைக் குருமகா சந்நிதான ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் சிறிய பாடசாலையாயினும் சமூகம் ஒன்று சேர்ந்தால் இந்து, கிறிஸ்தவர்கள் என்ற பேதமில்லாது இணைந்து விழா எடுப்பது சிறப்புக்குரியது என்றார். தொடர்ந்து பேராசிரியர் மா.சின்னத்தம்பி தமது உரையில் ஒழுங்கமைப்பால் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை அடைவதற்காக அதனுடன் தொடர்புபட்டவர்களை வழிநடத்திச் செல்லும் பணியான தலைமைத்துவம் இங்கு சிறப்பாகச் செயற்படுவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. தலைமைத்துவம் ஒழுங்கான கட்டமைப்பை உருவாக்கல், குழுச் செயற்பாடுகளை நெறிப்படுத்தல், தொழில்நுட்பப் பொருளாதார மற்றும் சமூக மாற்றங்களை அனுசரித்தல் ஊழிய வளத்தில் இருந்து உச்சப் பயனைப் பெறல். இலக்குகளிடையில் இணக்கத்தைஏற்படுத்தல்என்னும்முக்கியத்துவங்களைக்கொண்டது. இவ்வாறான ஒரு செயற்பாடு இங்கு உள்ள தலைவர் க.ஸ்ரீநந்தகோபனால் நடைமுறைப்படுத்தப்பட்டமையை இன்றைய விழாவின் உச்ச நிலையில் இருந்து காண்கிறோம். சமூகம் சார்ந்து பாடசாலையைக் கட்டியெழுப்புவது மிகவும் வரவேற்கத்தக்க அம்சமாகும்.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட அதி.வணக்கத்துக்குரிய யாழ்.ஆயர் கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் தமது உரையில் எனக்கும் நவாலிப் பகுதிக்கும் நீண்ட தொடர்பு உண்டு என்றும் தான் இந்தப் பகுதி கத்தோலிக்கக் கோட்டத்துக்குப் பொறுப்பாக இருந்த பொழுதும் இந்தப் பகுதி.

இப்பாடசாலையானது தேசிய நிலை வரை சாதனை படைத்துள்ளது. புலமைப்பரிசில் பரீட்சையிலும் கடந்த காலங்களில் உயர் நிலையில் இருந்து வந்துள்ளது. 2014ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 25 மாணவர்கள் தோற்றி 70 புள்ளிகளுக்கு மேல் 24 மாணவர்கள் புள்ளிகளைப் பெற்றனர். 5 பேர் சித்தியெய்தினர். 2015 ஆம் ஆண்டு 26 மாணவர்கள் பரீட்சையில் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்று வடக்கு மாகாண சான்றிதழ்களையும் பெற்றனர். சென்ற வருடம் தனி நடனம் வலய மட்டத்தில் முதலாம் இடம் பெற்றமை, சதுரங்கம் மாகாணம் 4ஆம் இடம் பெற்றமை, கோட்ட மட்டத்தில் ஆங்கிலக் குழுப்பாடல் இரண்டு இடங்களைப் பெற்றது. சிறுவர் நாடகம் கோட்ட மட்டத்தில் 2 ஆம் இடம் பெற்றது. மேலும் கடந்த ஆண்டு சமூகத்தில் உள்ளவர்களின் நிதிப் பங்களிப்பால் அதிபர் அலுவலகம், கட்புல, செவிப்புல சாதனக்கூடம் புனரமைப்புச் செய்யப்பட்டது. தற்போது எமது பாடசாலை அண்மையில் உள்ள பாடசாலை நல்ல பாடசாலை என்ற செயற்றிட்டத்தின் கீழ் இணைக்கப்பட்டு மேலும் சிறந்த மாதிரிப் பாடசாலையாக வளம் பெற உள்ளது என்றும் சகல வளர்ச்சிக்கும் ஒத்துழைக்கும் சமூகத்தவர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர், கோட்டக் கல்விப் பணிப்பாளர், கல்வி அமைச்சர், கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் அதிகாரிகள் அனைவருக்கும் நன்றி தெரிவித்து அதிபர் தமது உரையை நிறைவு செய்தார்.

> தலைமைத்துவம் ஒழுங்கான கட்டமைப்பை உருவாக்கல், குழுச் செயற்பாடுகளை நெறிப்படுத்தல், தொழில்நுட்பப் பொருளாதார மற்றும் சமூக மாற்றங்களை அனுசரித்தல் ஊழிய வளத்தில் இருந்து உச்சப் பயனைப் பெற இலக்குகளிடையில் இணக்கத்தை ஏற்படுத்தல் என்னும் முக்கியத்துவங்களைக் கொண்டது.

இளவாலை சென்.கென்றீஸ் கல்லூரி அதிபராக இருந்த பொழுது நான் இந்தப் பகுதி மக்களுடனும் இந்தப் பாடசாலையுடனும் நிறையவே பழகியுள்ளேன். அதன் நிலைகள் ஒவ்வொன்றும் எனக்குத் தெரியும். பாடசாலை, தற்பொழுது உள்ள அதிபரின் அமைதி, பொறுமை, சாந்தம் போன்ற நற்குணங்களால் ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட கற்றல் கற்பித்தல் செயலொழுங்கில் கட்டிவளர்க்கப்படுவதை இங்கு உரையாற்றியவர்களின் உரையின் தன்மையிலும் இன்றைய இந்த விழா ஒழுங்கின் தன்மையிலும் நிறையவே அறிய முடிகின்றது. அதிபரின் ஆளுமையால் பாடசாலை, அதன் சமூகம் என்பன ஒன்றித்த நிலை, இதனைவிட இந்து மக்களும் கிறிஸ்தவ மக்களும் ஒன்றிணைந்து விழா எடுப்பது மிகவும் சிறப்பாக அமைந்துள்ளது. குறிப்பாக இந்து சகோதரர்கள் என்னை வரவேற்றார்கள். உண்மையிலேயே இந்தப் பகுதியில் மதப்பிரிவு இல்லாமல் எல்லோரும் ஒற்றுமையாக இருப்பது சிறப்புக்குரியது. இந்தப்பாடசாலையின் முன்னைய அதிபர்கள், ஆசிரியர்கள் தற்போதைய அதிபர் ஆசிரியர்கள் மாணவர்கள் மற்றும் இந்தச் சமூகத்தில் வாழும் அனைத்து மக்களும் நற்சிறப்புக்களைப் பெற்று இன்புற்று இருக்க இறை ஆசியை வேண்டி நிற்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் அதிகாரிகள் பற்றாக்குறையும் ஆசிரிய வளம் போதாமையும்

கலாநிதி பா.தனபாலன்

(நேற்றைய உதயனில் 21 ஆம் பக்கத்தில் பிரசுரமான கட்டுரையின் தொடர்ச்சி....)



**2015** ஆம் ஆண்டு க.பொ.த. (சா) பரீட்சையில் க.பொ.த (உ) வகுப்பில் கற்க தகைமை பெற்ற மாணவர்களின் வலய மட்ட தரப்படுத்தலில் தமிழ் மொழி பாடசாலையில் அதிகமுள்ள கல்வி வலயங்களின் நிலை
(இலங்கையிலுள்ள மொத்தக் கல்வி வலயங்கள் 98)

**அட்டவணை 02**
பொதுவாக இலங்கையில் ஒப்பீட்டுக் கல்வி ஆய்வு அடிப்படையில் கல்விப் பிரயோகங்களை நோக்குகின்றபோது இன ரீதியான பாகுபாடு தெளிவாகப் புலப்படுகின்றது.

| இல | நிலை | வலயம் | வீதம் |
|---|---|---|---|
| 01 | 7 | மட்டக்களப்பு மத்தி | 77.7 |
| 02 | 11 | அக்கரைப்பற்று | 76.32 |
| 03 | 17 | கல்முனை | 74.13 |
| 04 | 27 | யாழ்ப்பாணம் | 70.61 |
| 05 | 35 | மன்னார் | 69.69 |
| 06 | 49 | மட்டக்களப்பு | 66.03 |
| 07 | 57 | வவுனியா | 65.89 |
| 08 | 60 | வடமராட்சி | 63.81 |
| 09 | 61 | மடு | 63.78 |
| 10 | 64 | சம்மாந்துறை | 62.98 |
| 11 | 65 | திருக்கோயில் | 62.86 |
| 12 | 72 | திருகோணமலை | 61.54 |
| 13 | 76 | பட்டிருப்பு | 60.32 |
| 14 | 84 | வலிகாமம் | 58.33 |
| 15 | 85 | தென்மராட்சி | 57.37 |
| 16 | 86 | புத்தளம் | 56.96 |
| 17 | 87 | கல்குடா | 56.77 |
| 18 | 88 | கிண்ணியா | 56.74 |
| 19 | 88 | நுவரெலியா | 56.74 |
| 20 | 90 | வவுனியா - வடக்கு | 55.46 |
| 21 | 92 | மூதூர் | 53.45 |
| 22 | 93 | முல்லைத்தீவு | 53.21 |
| 23 | 94 | துணுக்காய் | 49.19 |
| 24 | 95 | மட்டக்களப்பு - மேற்கு | 48.94 |
| 25 | 96 | கிளிநொச்சி | 46.44 |
| 26 | 97 | தீவகம் | 44.94 |
| 27 | 98 | திருகோணமலை - வடக்கு | 44.64 |

மேற்குறிப்பிட்ட பரீட்சைத் திணைக்களப்புள்ளி விவரங்களின்படி தமிழர்கள் செறிந்து வாழும் பிரதேச வலயங்களில் ஒப்பீட்டு ரீதியாகச் சிங்கள மொழி மூல வலயங்களுடன் சரிபார்க்கும் போது பின்னடைவான நிலைகள் தெளிவாகவுள்ளன.

1. தமிழ்மூலமான பாடசாலைகளில் கற்பிக்க ஆசிரிய வளம் இல்லாமை. அதிபர்கள் இன்மை. கல்விப்பணிப்பாளர்கள் இன்மை.
2. சிங்கள ஆசிரியர்கள் தமிழ் மாணவர்களுக்கு ஆங்கிலம் மற்றும் ஏனைய பாடங்களைக் கற்பிக்கும் நிலை.
3. சைவ சமய பாடத்தை மட்டும் ஏனைய சமய ஆசிரியர்கள் கற்பிக்கின்றமை.
4. பொருத்தமான பௌதிகவளப் போதாமைகள் தமிழ் அமைச்சர்களும் அரசியல்வாதிகளும் பாடசாலைக் கல்வி வளர்ச்சியில் அக்கறை காட்டாமை. சிங்கள அமைச்சர்கள், அரசியல் வாதிகள் கல்விக்கு அதிக அக்கறை காட்டுகின்றனர்.
5. கல்வியின் மீதும் தம் பிள்ளைகளின் ஒழுக்கம் மீதும் அக்கறை காட்டாத பெற்றோர்கள்.
6. தமிழர்கள் வாழும் சமூகச் சூழல், பொருளாதாரச் சூழல், சமயச்சூழல் மாணவர்களின் கல்வி விருத்திக்கான ஆதாரங்களை வழங்காமை. ஆலோசனை வழிகாட்டல் செயற்றிட்டம் பின்பற்றப்படாமை.
7. கல்வியமைச்சிடமிருந்து வளப்பங்கீடுகளில் குறைபாடுகள்.
8. பொருத்தமான வாண்மைத்துவ, தொடருறு கல்வியை, உயர்கல்வியைப்பெற முடியாத ஆசிரியர்கள், அதிபர்கள், கல்விப்பணிப்பாளர்.
9. எதிர்காலக் கல்வி அபிவிருத்தி நோக்கிய தேவைப்பகுப்பாய்வு மற்றும் ஆய்வு, திட்டமிடல் செயற்றிட்டங்கள் இன்மை. வழிப்படுத்துவோர் இன்மை. தொழிற்கல்வி தொடர்பான விழிப்புணர்வு இன்மை.
10. மாகாணக் கல்வியமைச்சுக்கள் தேவையான, பொருத்தமான கல்விச் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தாமை. பாடசாலைகளுடனும் மக்களுடனும் இறங்கி வேலை செய்யாமை.

இந்தப் பிரச்சினைகளில் இருந்து தீர்வுகளைப் பெற பொருத்தமான அரசியல் வலுவும் செல்வாக்கும் தமிழர் வாழும் பிரதேசங்களில் காணப்படவில்லை. மேலும் இலங்கையின் கல்விக் கலைத்திட்டம் விரிவான முறையில் தயாரிக்கப்பட்டிருப்பினும் அதன் அனைத்து அம்சங்களையும் தழுவியதாக தமிழ்மொழி மூலமான பாடநூல்களில் காணப்படாமை தமிழ் மொழி, சைவநெறி பாடநூல்களில் பல பிழைகள் ஏனைய பாடங்கள் மொழிபெயர்க்கப்பட்ட நிலையில் பல தவறுகளுடன் காணப்படுகின்றன. தேசிய கல்விநிறுவகம் கல்வியமைச்சு, பரீட்சைத் திணைக்களம், கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தில் தமிழ் அதிகாரிகள் பற்றாக்குறை கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம் ஆகிய பாடநெறிகளைக் கற்பிக்க ஆசிரிய வளம் போதாமை ஆகிய காரணிகள் பரீட்சைப் பெறுபேறுகளின் வீழ்ச்சி களுக்குத் துணைக்காரணங்களாகவுள்ளன.

தீர்வுகள் மேற்குறிப்பிட்ட பிரச்சினைகளைத் தேசிய ரீதியாகவும் மாகாண ரீதியாகவும் ஆய்வுகளை மேற் கொள்ளவும், விழிப்புணர்வுகளைச் செய்யவும், தீர்வுகளைக் காணவும், நிபுணத்துவம் வாய்ந்த கல்விக்குழு ஒன்று நியமிக்கப்படவேண்டும்.

மேலும் குறிப்பாக இலங்கையின் வட கிழக்கு மலையகத்தின் எதிர்கால அபிவிருத்திக்குத் தேவையான மனித வளம் பற்றிய ஓர் இருப்பெடுப்பு தேவைப்படுகின்றது. அத்துடன் மனித பௌதிக வளம் அதன் விரயம் எதிர் கால அபிவிருத்தி தொடர்பான ஆய்வுகள் அவசியமாகின்றன. பரீட்சைகளில் சித்தியடையாத மாணவர்களுக்கான மாற்று ஏற்பாடுகள் புதிய தொழில்கள் நிறுவனங்கள் பன்னாட்டு முதலீட்டின் விளைவாக உருவாக்கக் கூடிய புதிய பாணியிலான தொழில்கள், இவற்றுக்குத் தேவைப்படும் புதிய மனித வளம் அதற்கு வழங்கப்பட வேண்டிய மனிதவள விருத்திக்கான கல்வியும் பயிற்சியும் பற்றிய ஆய்வுகள் செயற்றிட்டங்கள் உடனடியாகத் தேவையாகவுள்ளன.

பாடசாலை மட்டத்தில் பரீட்சைப் பெறுபேறுகளை இலகுவாக உயர்த்தக்கூடிய 5 ஆண்டு செயற்றிட்டங்களை இலகுவாக அதிபரும், ஆசிரியர்களும், பெற்றோர்களும் இணைந்து மேற்கொள்ள முடியும். உள்ளக மேற்பார்வை மிக அவசியமாகும். இன்று உலகிலேயே ஒப்பீட்டு ஆய்வுப் பேறுகளின்படி உயர்ந்த தரமான பாடசாலைகள் நியூஸிலாந்தின் நாளைய பாடசாலைகளே முழு அதிகாரத்தையும் பெற்றுள்ளது. அந்த நாட்டிலுள்ள கல்வித்திணைக்களம் அகற்றப்பட்டு பாடசாலை மட்டப் பொறுப்புச் சபைகள் உருவாக்கப் பட்டுள்ளன. இந்தச் சபைகள் தங்கள் சமூகங்களுடன் ஒப்பந்தங்களைச் செய்து கொண்டு பாடசாலைகளை நிர்வகிக்கின்றன. அதிபர், ஆசிரியரால் நியமனங்களை இவர்களே மேற்கொள்கின்றார்கள்.

இவ்வாறே அமெரிக்காவிலும் பட்டயப்பாடசாலைகள் உயர் வளர்ச்சியடைந்து வருகின்றன. புதுமையான பாடசாலை நடைமுறைகளுக்காக பாடசாலை மட்டத்தில் ஒப்பந்தங்கள் அல்லது பட்டங்கள் மூலம் உள்ளூர் கல்விச்சபைகளும் சமூகங்களும் ஒப்பந்தங்களைச் செய்து கொள்ளும். அண்மைக்காலத்தில் இவை பெரு வளர்ச்சி கண்டுள்ளன. அரச பாடசாலைகளுக்குரிய பொருத்தமற்ற நிபந்தனைகள் தளர்த்தப்பட்டு அதிபரும், ஆசிரியர்களும் சுயாதீனமாக இயங்க பயிற்சிகள் அளிக்கப்பட்டு இயங்க அனுமதிக்கப்பட்டனர். இதனால்
1. தரமான கற்றலுக்கான வாய்ப்புக்கள் அதிகரித்தன.
2. அரச பாடசாலை கலைத்திட்டப்படி புதிய, பல் தெரிவுகள்.
3. கற்றல் கற்பித்தலில் புத்தாக்கங்கள் களப்பயிற்சிகள் சமூகம் நோக்கிய செயற்றிட்டங்கள்.
4. ஆசிரியர் தொழில் விருத்திக்கான சந்தர்ப்பம்.
5. மாணவர் கல்வியில் சமுதாய ஈடுபாடு.
6. மாணவர் அடைவுகளுக்குப் பொறுப்புக்கூறும் அதிபர், ஆசிரியர்கள் இன்று இவ்வாறான புதிய செயற்றிட்டங்கள் உலகளாவிய ரீதியில் பாடசாலை மட்டத்தில் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. இவற்றை அறிந்து பாடசாலை மட்டத்திலேயே பல பிரச்சினைகளை இலகுவாகத் தீர்த்து கல்வியின் அடைவுகளை மேலும் உயர்த்த முடியும். (முற்றும்)


> **பரீட்சைகளில் சித்தியடையாத மாணவர்களுக்கான மாற்று ஏற்பாடுகள் புதிய தொழில்கள் நிறுவனங்கள் பன்னாட்டு முதலீட்டின் விளைவாக உருவாக்கக் கூடிய புதிய பாணியிலான தொழில்கள் இவற்றுக்குத் தேவைப்படும் புதிய மனித வளம் அதற்கு வழங்கப்பட வேண்டிய மனிதவள விருத்திக்கான கல்வியும் பயிற்சியும் பற்றிய ஆய்வுகள் செயற்றிட்டங்கள் உடனடியாகத் தேவையாகவுள்ளன.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## குள்ள குள்ள வாத்து!

குள்ள குள்ள வாத்து!
குளத்தில் நீந்தும் வாத்து!
பள்ளம் மேடு பார்த்து;
பைய நடக்கும் வாத்து!
வெள்ளைக் கறுப்பு போன்ற
வேறு வேறு வண்ணம்
உள்ள போதும் கூட
ஒன்றாய் செல்லும் வாத்து!
பள்ளிக்கூடம் செல்லும்
பாப்பாக் கூட்டம் போல
மெல்ல செல்லும் நீரில்
மிதக்கும் படகே வாத்து!





# வரலாற்றில் இன்றைய தினம்

1606 - ஆங்கில மற்றும் ஸ்கொட்லாந்து கப்பல்களின் கொடியாக யூனியன் கொடி ஏற்றுக்கொள்ளப்பட்டது.

1927 - டெக்ஸாஸ் வரலாற்றில் மோசமான சூறாவளி ஒன்றின்போது 235 கட்டடங்கள் அழிவடைந்ததுடன் நகர மக்கள் 72பேர் சாவு. 205 பேர் காயமடைந்தனர்.

1937 - சேர் பிராங்க் வாற்றில் வடிவமைக்கப்பட்ட விமானங்களுக்கான ஜெற் இயந்திரம் முதன்முறையாக தரைச் சோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

1945 - அமெரிக்க ஜனாதிபதி பிராங்ளின் டி றூஸ்வெல்ற் பதவியிலிருக்கும்போதுகாலமானார். உதவி ஜனாதிபதி ஹாரிரூமன் ஜனாதிபதியானார்.

1955 - போலியோ தடுப்பு மருந்து மருத்துவர் ஜொனஸ் சோல்காால் உருவாக்கப்பட்டு அது வினைத் திறன் உடையதும் பாதுகாப்பானது எனவும் பிரகடனப்படுத்தப்பட்டது.

1961 - விண்வெளியில் பறந்த முதல் மனிதரானார் சோவியத் விண்வெளி வீரர் யூரிககாரின்.

1963 - சோவியத்தின் அணுசக்தியில் இயங்கும் நீர் மூழ்கிக் கப்பல் கே-33, பின்லாந்து வர்த்தகக் கப்பல் எம்.எஸ்.பின்னிகிளிபருடன் டனிஷ் குடாவில் மோதி விபத்துக்கு உள்ளாகியது.

1980 - லைபீரியாவின் கட்டுப்பாட்டினை சாமுவல் டூ கொண்டு வந்ததன் மூலம், 130 வருட அமெரிக்க - லைபீரிய சிறுபான்மை ஆட்சி முடிவுக்கு வந்தது.

1992 - டிஸ்னிலாண்ட் பாரிஸ் முறைப்படிதிறந்து வைக்கப்பட்டது.

1993 - பூநகரிப் பாதை விவகாரம் தொடர்பான திட்டத்தை ஜெனிவா தலைமையகம் அங்கீகரித்தது.

1993 - பிரிட்டன் ஆரம்பித்த பேச்சு வார்த்தையை பகிஷ்கரிக்க கூட்டணி, ஈ.பி.ஆர்.எல்.எப் இரண்டும் முடிவு.

1993 - இயக்கச்சிப் பகுதியில் புலிகள் வீழ்த்தியதற்குப் பதிலாக புதிய சீனச் சகடை விமானம் விமானப் படையில் இணைப்பு.


2000 - பௌத்தர்கள் இனவாதிகளல்லர்; நோர்வே கொடி எரிப்பு தவறானது என பெல்பொல விபஸ்ஸி தேரர் தெரிவிப்பு.

2000 - திருமலையில் கலை நிகழ்ச்சியின்போது குண்டு வெடிப்பு 12 வயதுச் சிறுவன் உட்பட 4 பேர் சாவு. 65இற்கும் மேற்பட்டோர் காயம்.

2009 - ஷிம்பாப்வே டொலரை உத்தியோக பூர்வமாக ஷிம்பாப்வே அரசு கைவிட்டது.



## வர்ணம் ட்டுவோம் வாங்க....



## பொது அறிவு

1. உலகிலேயே பரப்பளவில் மிகச் சிறிய நாடு எது?
   வத்திகான்
2. உலகிலேயே மிகப் பெரிய தீவு எது?
   கிரீன்லாந்து
3. உலகிலேயே மிக உயர்ந்த பீட பூமி எது?
   தீபெத் பீட பூமி
4. உலகிலேயேமிகஉயரத்தில்அமைந்துள்ள நாடு எது?
   சுவிட்சர்லாந்து
5. உலகிலேயே மிகப் பெரிய பாலைவனம் எது?
   சஹாரா பாலைவனம் (ஆபிரிக்கா)
6. உலகிலேயே மிகவும் வரண்ட பாலை வனம் எது?
   ஆடகாமா பாலைவனம் (சிலி)
7. உலகிலேயே மிக உயரமான நீர் வீழ்ச்சி எது?
   ஏஞ்சல் நீர்வீழ்ச்சி (வெனிசுலா)
8. உலகிலேயே மிக அகலமான நீர்வீழ்ச்சி எது?
   நயாகரா நீர்வீழ்ச்சி
9. உலகிலேயே மிக உயரமான மலைச் சிகரம் எது?
   எவரெஸ்ட் (நேபாளம் 8848 மீ)
10. உலகிலேயே மிகப் பெரிய வளைகுடா எது?
    மெக்சிகோ வளைகுடா
11. உலகிலேயே மிகப் பெரிய கண்டம் எது?
    ஆசியாக் கண்டம்





# மல்யுத்த வீரனை மடக்கிய தெனாலிராமன்

டில்லியிலிருந்து புகழ்பெற்ற மல்யுத்த வீரனொருவன் ஒவ்வொரு நாடாகச் சுற்றி வந்து மல்யுத்த வீரர்களைத் தோற்கடித்துப் புகழ்பெற்றுக் கொண்டிருந்தான். விஜய நகரத்துக்கு வந்த அவன் அங்கு மக்கள் முன்னிலையில் பல மல்யுத்த வீரர்களைத் தோல்வியுறச் செய்தான்.

அரண்மனை மல்யுத்த வீரர்களுக்கும் சவால் விட்டான் அவன். அரண்மனையைச் சார்ந்த மல்யுத்த வீரர்கள் அவனிடம் மற்போர் செய்யப் பயந்து பின்வாங்கினர்.

மல்யுத்த வீரனின் சவாலை ஏற்று எவரும் முன்வராதது கண்டு மன்னர் மிகவும் வருத்தப்பட்டார். தெனாலிராமனிடம் தன் வருத்தத்தைத் தெரிவித்தார்.

தெனாலி ராமனோ"நீங்கள் வருத்தத்தை விடுங்கள். மல்யுத்த வீரனை நான் மடக்குகிறேன்" என்றான்.

மல்யுத்த வீரனை அரண்மனைக்கு வரவழைத்தார்கள். "எங்கள் அரண்மனையில் உள்ள மல்யுத்த வீரர்களின் குரு இன்னும் சற்று நேரத்தில் வருவார். அவர் உன்னுடன் நாளை போட்டியிடப் போகிறார்" என அறிவித்தனர். சற்று நேரத்தில் மல்யுத்த வீரர்களின் விருதுகளைத் தரித்தபடி மல்யுத்த வீரர்கள் புடைசூழ தெனாலிராமன் சபைக்கு வந்தான். அவனது பந்தாவையும் மற்றவர்கள் அவனுக்குத் தரும் மரியாதையையும் கண்ட டில்லிவீரன் மனத்துக்குள் அச்சம் கொண்டான்.

ஆசனத்தில் அமர்ந்த தெனாலிராமன் மல்யுத்த வீரனை நோக்கி அட்டகாசமாகச் சிரித்தபடி "சிறுவனே நீ மல்யுத்த சாஸ்திரத்தில் எந்த விதிகளைக் கடைப்பிடித்து மற்போர் செய்கிறாய்" என்றான். மல்யுத்த சாஸ்திரமா? டில்லி வீரனுக்கு ஒன்றும் புரியவில்லை. அப்படி ஒரு சாஸ்திரம் இருக்கிறதா? அவனுக்குக் குழப்பமாக இருந்தது. இருப்பினும் சாமர்த்தியமாக நீங்கள் எந்த விதியைக் கடைப் பிடிக்கிறீர்களோ அதையே நானும் கடைப்பிடித்துப் போரிடத் தயார். ஏன் எனில் மல்யுத்த சாஸ்திரம் தெரியும்" என்றான்.

உடனே தெனாலிராமன் துள்ளி எழுந்தான். "மல்யுத்த சாஸ்திரத்தில் இந்த விதிமுறைகள் தெரியுமா?" என்றபடி கைகளை விரித்து கழுத்தைத் தடவி கைவிரல்களை அசைத்துக் காட்டினான். ஏதோ கதகளிக்கு அபிநயம் பிடிப்பதுபோல் இருந்தது அது.

மல்யுத்த வீரனுக்கு எதுவுமே புரியவில்லை. அதைப் புரிந்துகொண்ட தெனாலிராமன் "நாளை இந்த விதி முறைப்படிதான் உன்னிடம் மற்போர் புரியப் போகிறேன்" என்றான்.

அரைகுறை சம்மதத்துடன் புறப்பட்ட மல்யுத்த வீரன் அரண்மனையை விட்டு வெளியேறியதும் நேராக நகரை விட்டே வெளியேறினான். அவனது முகக் குறிப்பிலிருந்தே அவன் பயந்துவிட்டான் என்பதைப்புரிந்துகொண்ட மன்னர், "நீ ஏதேதோ கைக்கரணங்கள் காட்டினாயே அவற்றுக்கு என்ன பொருள்? மல்யுத்தத்துக்கு என தனி சாஸ்திர விதிகள் இல்லையே" என்றார்.

நான் காட்டிய கைக் கரணங்களின் பொருள், "நீ மிகுந்த பலசாலி. உன்னிடம் நான் மற்போர் புரிந்தால் நான் தோல்வியுற்று இறந்துவிடுவேன். என் மனைவி அனாதையாவள். அவள் தாலியை இழந்து தவிப்பாள். இப்போது நான் என்ன செய்யட்டும்?" என்ற கருத்துக்களைத்தான் கை சாடையாகக் காட்டினேன். மல்யுத்த சாஸ்திரம் என்று தனியாக எதுவும் இல்லை. அவன் வேறு எதுவோ தவறான கருத்தைப் புரிந்து கொண்டுவிட்டான்.

ஒற்றர்கள் வந்து மல்யுத்த வீரன் நகரைக் கடந்து செல்வதாகக் கூறினார்கள். மன்னர் மகிழ்ச்சியுற்று தெனாலிராமனுக்குப் பொற்காசுகளைப் பரிசளித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனாமா ஆவணங்களால் அம்பலமாகின மோசடிகள்

மத்திய அமெரிக்க நாடான பனாமாவைச் சேர்ந்த மோசாக் பொன்சேகா என்ற சட்ட நிறுவனம் இரகசியமாக வைத்திருந்த 1.15 கோடி ஆவணங்கள், உலகச் செய்தி நிறுவனங்களுக்குக் கசிந்துள்ளன. அவை வெளிநாட்டில் பதிவுபெற்ற 2.15 லட்சம் போலி நிறுவனங்கள் பற்றியவை. 143 அரசியல் தலைவர்கள் உள்ளிட்ட 14,153 பேர் இதில் சம்பந்தப்பட்டுள்ளனர். அவர்களின் சொத்துக்களை மறைவாக வைக்கவும் வரிகட்டுவதிலிருந்து தப்பவும் இந்த நிறுவனங்கள் பயன்படுத்தப் பட்டுள்ளன.

இந்த ஆவணங்களின் கசிவு உலகின் பல நாடுகளையும் அரசியல் தலைவர்களையும் தொழிலதிபர்களையும் பிரமுகர்களையும் தூக்கம் இழக்கச் செய்திருக்கிறது.

எதிர்பார்த்ததுபோலவே, சம்பந்தப்பட்டவர்களில் பலர் அதை மறுத்திருக்கிறார்கள். தங்கள் மீதான குற்றச்சாட்டுக்களைத் திசைதிருப்பும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளார்கள். இந்தத் தகவல் வெளியானதைத் தொடர்ந்து, ஐஸ்லாந்து பிரதமர் டேவிட் பதவி விலகிவிட்டார். சட்டவிரோதமாக முதலீடு செய்தவர்கள் பட்டியலில் அவருடைய பெயரும் இருந்தது. ரஷ்ய, சீனத் தலைவர்களோடு தொடர்புடையவர்களின் பெயர்களும் இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

சில நாடுகளின் சட்ட திட்டங்கள், வரி ஏய்ப்பாளர்கள் தங்கள் பணத்தை அவற்றில் பதுக்க ஏற்றதாக இருக்கின்றன. தங்களுடைய வங்கிகளில் முதலீடு செய்யும் வெளிநாட்டவர் பற்றிய தகவல்களை இரகசியமாக அவை வைத்துக்கொள்கின்றன.




அவர்களை ஊக்குவிக்கும் வகையில் தொழில் முதலீடுகளுக்கு வரிச் சலுகைகளை அளித்து சட்டபூர்வமாகவே செயற்பட அனுமதிக்கின்றன. இரட்டை வரிவிதிப்புத் தடுப்பு உடன்பாட்டை இதற்குப் பயன்படுத்திக்கொள்வதும் உண்டு. இப்படிப்பட்ட முதலீட்டாளர்களுக்கு ஆலோசனைகளை வழங்கி, பாதுகாப்பாக வரி ஏய்க்கச் செய்யும் சட்ட நிறுவனங்களும் இருக்கின்றன. வெளிநாடுகளில் தொழில் நிறுவனங்களைத் தொடங்கவும், அதில் முதலீடு செய்யவும் அனுமதிக்கும் சட்டங்களிலும் நடைமுறைகளிலும் உள்ள குறைபாடுகளைப் பெரும் பணக்காரர்கள் பயன்படுத்திக் கொள்கின்றனர். அவர்களைக் கறுப்புப் பணக்காரர்கள், வரி ஏய்ப்பாளர்கள் என்று முத்திரை குத்துவதைத் தவிர அரசுகளால் ஏதும் செய்ய முடிவதில்லை.

கறுப்புப்பணத்தை வெள்ளையாக மாற்றிக்கொள்ள இடம் தரக் கூடாது என்றும், பயங்கரவாதத்துக்கு நிதியுதவி செய்ய இடம் தரக்கூடாது என்றும் கடந்த பெப்ரவரியில் தீர்மானித்தது பனாமா அரசு. இந்த நிலையில், அம்பலப்படுத்தப்பட்டுள்ள பனாமா சட்ட நிறுவன விவகாரங்களையும் அதில் தொடர்புள்ளதாகக் கூறப்படும் இலங்கை அரசியல்வாதிகள் மற்றும் இலங்கை நிறுவனங்கள் குறித்தும் அரசு விசாரிக்கவேண்டும்.

இது தொடர்பாக அரசு கவனமாகச் செயற்பட்டால்தான் இப்படி முறைகேடாகப் பணத்தை வெளிநாடுகளில் முதலீடு செய்வதைத் தடுக்க முடியும்.



# உள்ளூராட்சி சபை வீதிகளை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு முன்னர் பொதுமக்களின் அபிப்பிராயம் பெறப்படவேண்டும்

ஆர்.ரிஷாந்

ஒவ்வொரு பொதுமகனும் தங்களது பிரதேச கிராம வீதிகள், சிறுவீதிகள் வரைபட ரீதியாக உள்வாங்கப் பட்டுள்ளதா? என்பதை பார்வையிட்டு அறிக்கையிடுங்கள், முறைப்பாடு செய்யுங்கள்.

(வீதி வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு முன்னர் ஒவ்வொரு தனிமனிதனின் தனிப்பட்ட உரிமைகளையும் கவனமாகப் பரிசீலியுங்கள்)

வீதிகளை ஒரு வலைப் பின்னல் திட்டத்தின் கீழ் ஒரு முகப்படுத்தும் திட்டம் கடந்த நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் வடக்கில் முன்னெடுக்கப்பட்டது.

இதன் மூலம் வடமாகாணத்தில் 34 உள்ளூராட்சி சபைகளுக்குட்பட்ட பிரதேசசபை, நகர சபை,மாநகர சைபை வீதிகள் அவ்வவ் உள்ளூராட்சி சபைகளால் புள்ளியிடல் திட்டத்தின் கீழ் முன்னுரிமைப்படுத்தப் பட்டுள்ளன.

இவ்வாறான வீதிகளின் பெயர் நீளம், ஆரம்பம், முடிவு அந்த வீதியில் உள்ள மதகு, சிறிய பாலம் வரைபடம் மற்றும் விவரங்களை உள்ளடக்கியதாக சபை வீதிகளின் பட்டியலை வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிப்பதற்கு (தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளில்) வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் முழு வீச்சில் நடவடிக்கை எடுத்த போதும் இந்தத் திட்டம் இதுவரை நிறைவேறவில்லை.

கடந்த காலங்களோடு ஒப்பிடுமிடத்து உள்ளூராட்சி சபைகளில் நவீன கணினி வசதி, வீதிகள் அளப்பனவுக் கருவிகள், போதுமான தொழில்நுட்ப அலுவலர் ஆளணி போன்றன போதுமான அளவில் (தேவைக்கு அதிகமாக) உள்ளன.

இவ்வாறாக ஏற்கனவே நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் தொகுக்கப்பட்ட வீதிவலைப் பின்னல் வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு காலதாமதமாகியுள்ளமைக்கு சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி அமைச்சு பொறுப்புக் கூற வேண்டிய நிலையில் உள்ளது.

இங்கு முக்கியமாக குறிப்பிட வேண்டிய விடயம் யாதெனில் வீதி வலையமைப்புப் பட்டியல் தொகுக்கப்பட்டுள்ள போதிலும், ஒவ்வொரு உள்ளூராட்சி சபைகளிலும் 50 முதல் 100க்கும் மேற்பட்ட வீதிகள் இன்னும் இனம் காணப்படாமல் வரைபடத்தில் உட்சேர்க்கப் படாமல், பெயரிடப்படாமல் அதன் விவரங்கள் தவிர்க்கப்பட்டு ஏற்கனவே 50 வருடங்களுக்கு முன்னர் எழுந்தமானமாகத் தொகுக்கப்பட்ட வீதிகளே தற்போதும் பூசி மெழுகி விவரப்பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன என்பதை இங்கு கூற முற்படுகின்றோம்.

எனவே உள்ளூராட்சி சபைகளால் இதுவரை உப அலுவலக ரீதியாக சபை வீதிகளின் முழுமையான பட்டியல் தொகுக்கப்படவில்லை.

இதுவரையில் தொகுக்கப்பட்ட வீதி விவரப் பட்டியல் வரைபடரீதியாக மக்கள் பார்வைக்கு (வைப்பதற்கான) பத்திரிகை விளம்பரம் செய்து மக்களின் அபிப்பிராயம் பெறப் படவில்லை.

தற்போது வடக்கு மாகாணத்தில் உள்ள முன்னாள் பிரதேச சபைகளின் தவிசாளர், உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் மற்றும் பொது மக்கள் [illegible] பிரதேச சபைகள் நகர சபைகளால் தொகுக்கப்பட்டு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட முன்னரான வீதிகளின் விவரப் பட்டியலை பார்வையிடத் துடிக்கின்றனர்.

எனவே வடமாகாண முதலமைச்சர் வீதி விவரப்பட்டியலை சபையிடமிருந்து பெற்று வர்த்தமானி பத்திரிகையில் பிரசுரிப்பது மட்டும் நோக்கமாக இருக்கக்கூடாது.

உள்ளூராட்சி சபைக்கு உட்பட்ட எந்தவொரு சிறுவீதியும் கைவிடப்படாது சகல வீதிகளும் (ஆர்டிடி, ஆர்டிஏ வீதி தவிர) உள்ளடக்கப்பட்டிருப்பதை திரும்பத் திரும்ப உறுதி செய்யப்பட்ட பின்னரே பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குறிப்பாக வடக்கில் உள்ள சகல சபைகளும் (34 சபைகள்) நூற்றுக்கும் மேற்பட்ட சிறு வீதிகளை உள்ளடக்காமலே பிரசுரிப்பதற்கு தயாராகுகின்றன.

இந்த விடயத்தில் வீதிகளைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற ஒவ்வொரு பொதுமகனும் தங்கள் பிரதேச வீதிகள் உரிய நீள அகலத்தில் உரிய பெயர்களுடன் (வரைபடரீதியாக) உள்வாங்கப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்ய வேண்டும்.

வீதிகள் புனரமைப்பு என்பது ஆமை வேகத்தில் இடம்பெற்றாலும் வீதிகள் பட்டியலில் முதலில் சேர்க்கப்பட வேண்டும்.

எதிர்காலத்தில் புதிய வீதிகள் எவையும் தோன்ற வாய்ப்பில்லை. எனவேஇருக்கின்ற சபை வீதிகள் (மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி,வவுனியா, யாழ்ப்பாணம்) ஆகிய 5 மாவட்டங்கள் உள்ளடக்கிய நிலையில்) ஒன்றும் தவறவிடப்படக்கூடாது என்பதே இந்தப் பெரிய திட்டத்தின் நோக்கமாக ஒவ்வொருவர் உள்ளத்திலும் இருக்க வேண்டும்.

வீதிகள் எவையும் தவறவிடப்பட்டால் அதற்கான முழுப்பொறுப்பும் அவ்வவ் பிரதேச சபை நகர சபைகளின் செயலாளர்கள் அதன் பின்னரான உதவி ஆணையாளர்களையே சாரும்.

எனவே வீதி வலையமைப்பு பட்டியல் வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு முன்னரான நடவடிக்கைகள் முறையே திட்டமிட்டு ஒழுங்கமைக்கப்பட்ட ஒன்றாக இருக்க வேண்டும்.

இந்த முயற்சி எதிர்காலச் சந்ததியினருக்கு அடுத்த கட்ட அபிவிருத்திக்கான முன்னோடியாக இருக்கும்.

எனவே சகல வீதிகளையும் முழுமையாக உள்வாங்கி அதனை ஊடகங்கள் பத்திரிகைகள் வாயிலாக பகிரங்கப்படுத்தி 14 நாள்கள் முன்னறிவித்தல் கொடுத்து, அதன் மூலம் கிடைக்கும் விவரங்களை உட்சேர்த்து மீளவும் 7 நாள் அறிவித்தல் கொடுத்து பகீரங்கப்படுத்திய பின்னரே வர்த்தமானியில் அடுத்த மாதம் 31 ஆம் (31.05.2016) திகதிக்கு முன்னர் பிரசுரிப்பதற்கு வடக்கு உள்ளூராட்சி அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே உண்மையான யதார்த்தமான அபிவிருத்தியின் முதற்படியாகும்.

இந்த விடங்கள் முதல் எய்தப்பட்டால் வீதி அபிவிருத்தியின் இலக்கு எய்தப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**மேடம்:** அவப்பெயர் வராமல் செயற்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். பெண்கள் ஆடம்பர எண்ணத்துடன் செயற்படுவர்.



**இடபம்:** தாமதமான பணி எளிதாக நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் புதிய வாய்ப்பு மூலம் ஆதாயம் அதிகரிக்கும். பெண்களுக்கு சகோதரர்களின் உதவி கிடைக்கும். மாமன், மைத்துனருக்கு உதவுவீர்கள்.



**மிதுனம்:** எவரிடமும் சச்சரவு செய்யக் கூடாது. தொழில், வியாபாரத்தில் பொறுப்பு அதிகரிக்கும். மிதமான பண வரவு கிடைக்கும். பெண்கள் பிள்ளைகளின் எதிர்காலம் குறித்து ஆலோசிப்பர்.



**கடகம்:** நேர்மை எண்ணம் மேலோங்கும். தொழில் வியாபாரத்தில் வியப்பூட்டும் வளர்ச்சி ஏற்படும். ஆதாயம் உயரும். நிலுவை பணம் வசூலாகும். விலகிச் சென்ற உறவினர் சொந்தம் பாராட்டுவர்.



**சிங்கம்:** சமூகத்தில் நன்மதிப்பு பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் குறுக்கிட்ட இடையூறு விலகும். வருமானம் அதிகரிக்கும். தாயின் தேவை அறிந்து நிறைவேற்றுவீர்கள்.





**கன்னி:** எதிரிகளால் தொல்லை உண்டாகும். தொழிலில் வளர்ச்சி பெற விடாமுயற்சி அவசியம். சுயகௌரவம் பாதுகாக்க கூடுதல் பணம் செலவாகும். ஒவ்வாத உணவு உண்ண வேண்டாம்.



**துலாம்:** தன்னம்பிக்கையுடன் இருப்பது நல்லது. தொழில் சார்ந்த குறையை பிறரிடம் சொல்ல வேண்டாம். பெண்களுக்கு வீட்டுச் செலவில் சிக்கனம் தேவை. வாகனப் போக்குவரத்தில் மிதவேகத்தைப் பின்பற்றவும்.



**விருச்சிகம்:** எவரிடமும் அன்பு, பாசத்துடன் பழகுவீர்கள். தொழில், வியாபாரம் வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். நிலுவை பணம் வசூலாகும். குடும்பப் பிரச்சினைக்கு சுமுக தீர்வு கிடைக்கும்.



**தனுசு:** சாமர்த்தியமாகச் செயற்பட்டு வருவீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட அபிவிருத்தி பணி நிறைவேறும். வருமானம் உயரும். உறவினர் வருகையால் மகிழ்ச்சி அதிகரிக்கும்.



**மகரம்:** பகைவரிடம் விலகுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் உருவாகிற குறையை தாமதமின்றி சரி செய்யவும். இலாபம் சுமாராக இருக்கும். இஷ்ட தெய்வ வழிபாடு அமைதிக்கு வழிவகுக்கும்.



**கும்பம்:** சிலர் நல்லவர் போல பாசாங்கு செய்வர். தொழில், வியாபாரம் வளர்ச்சிக்கான ஆலோசனையில் ஈடுபடுவீர்கள். இலாபம் கூடும். பெண்கள் அலைச்சலுக்கு ஆளாகலாம். நண்பரால் உதவி உண்டு.



**மீனம்:** மதி நுட்பத்தால் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சியில் இலக்கை அடைவீர்கள். பண வரவு சீராகும். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள்.



**Ambuja Simi**

**மனைவி:** 'ஹலோ நான் பேய் பேசுகிறேன்' படத்துக்கு போவோமா?

**கணவன்:** சரி.. என்ன படத்துக்கு போகலாம்?

**Sushima Shekar**

வாழைப்பழத்தில் விதை கிடையாது. அதனில் இருக்கும் விதையில் மரம் முளைக்காது. அதனால் பிறவா நிலையைக் கொடு என வேண்டி இறைவனுக்கு வாழைப் பழத்தைப் படைக்கின்றோம்.

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 2 | | 8 | | 7 | | | 3 |
| | 6 | | | | | 1 | 2 | 7 |
| 3 | | 7 | 5 | | | | 8 | |
| | | 4 | 9 | | | | | 2 |
| | 3 | | | | | | 1 | |
| 1 | | | | | 5 | 3 | | |
| | 8 | | | | 4 | 2 | | |
| | | 6 | | | | | 3 | |
| 9 | | | 1 | | 8 | | 6 | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 2 | 8 | 9 | 3 | 6 | 1 | 7 | 5 |
| 7 | 9 | 6 | 5 | 2 | 1 | 8 | 4 | 3 |
| 5 | 3 | 1 | 8 | 4 | 7 | 6 | 9 | 2 |
| 9 | 8 | 4 | 3 | 1 | 2 | 7 | 5 | 6 |
| 6 | 5 | 2 | 7 | 8 | 9 | 4 | 3 | 1 |
| 3 | 1 | 7 | 6 | 5 | 4 | 9 | 2 | 8 |
| 1 | 4 | 3 | 2 | 7 | 8 | 5 | 6 | 9 |
| 2 | 7 | 9 | 1. | 6 | 5 | 3 | 8 | 4 |
| 8 | 6 | 5 | 4 | 9 | 3 | 2 | 1 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே. கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப் பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதா கும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றி கரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



## நாவல் கதையில் அருண்

என்னை அறிந்தால் படத்தில் வில்லனாக நடித்த அருண் விஜய் தனது புதிய படத்தில் பொலிஸ் அதிகாரியாக நடிக்கிறார். அறிவழகன் இந்தப் படத்தை இயக்குகின்றார். அருண் விஜய் நாயகனாக நடித்த படங்கள் அவருக்கு பெயர் வாங்கித் தந்ததைவிட, அஜித்தின் என்னை அறிந்தால் படத்தில் நடித்த வில்லன் கதாபாத்திரம் அவரை தமிழகத்தில் நடிகராக பிரபலப்படுத்தியது. எனினும் இனி வில்லனாக நடிப்பதில்லை என்ற முடிவெடுத்தவர், காத்திருந்து நடிக்கும் படத்தைத் தான் அறிவழகன் இயக்குகிறார். ராஜேஷ் குமார் எழுதிய க்ரைம் நாவல் ஒன்றை அடிப்படையாக வைத்து இந்தப் படத்தை அறிவழகன் இயக்குகிறார்.



"கேட்டானே ஒரு கேள்வி"

ஒரு வியாபாரி, வாழைப்பழம் விற்றுக் கொண்டு இருந்தார், அவரிடம்...

**மின் அலுவலர்** : வாழைப்பழம் என்னப்பா விலை..?

**வியாபாரி** : ஐயா! இதை எதற்கு நீங்க வாங்குகிறீங்கள் எனத் தெரிஞ்சால் தான் விலை செல்ல முடியும்...?

**மின் அலுவலர்**: என்னப்பா சொல்லுறாய், நான் எதற்கு வாங்கினால் உனக்கு என்ன..??

**வியாபாரி** : ஐயா, இதை எதற்கு நீங்க வாங்குகிறீர்கள் என தெரிஞ்சால் தான் விலை செல்ல முடியும்...? ஐயா நீங்கள் இந்த வாழைப்பழத்தைக் கோயிலுக்கு என்று வாங்கினால் விலை 10 ரூபா.

குழந்தைகளுக்கு என்று வாங்கினால் ஒரு பழம் 20 ரூபா. தெரிஞ்சவங்கள் வீட்டுக்கு வாங்கினால் விலை 25 ரூபா. நீங்க சாப்பிட வாங்கினால் ஒரு பழம் 30 ரூபா.....

**மின் அலுவலர்** : டேய், எவரை ஏமாத்துறாய், ஒரே பழம் எப்படி இத்தனை மாறுபட்ட விலைக்கு வரும்...??

**வியாபாரி** : நீங்க மட்டும் ஒரே கரண்ட், ஒரே சிஸ்டம் வைச்சுக் கொண்டு வீட்டுக்குத் தனி, கடைக்குத் தனி என்று தனியாக பில் போடுறீங்க....


**மின்சார நிலைய அலுவலர்**: .......





அந்தம்மா 234 தொகுதியிலும் பரப்புரைக்கு கிளம்பிட்டாங்க

நீ இன்னும் அடுத்தவன் கட்சிக்குள்ள சண்டை மூட்டி விளையாடிகிட்டு இருக்கிறாய்





சீரற்ற வெப்ப நிலை சீராக்க எத்தணிக்கும் மக்கள்



எதிர்காலத்திலை இப்படியும் திருமண அட்டைகள் வரலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொடிகாமம் | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 700 | 600 | 700 | 700 | – | 600 |
| நண்டு | 250 | 600 | 300 | 400 | 300 | 200 | – |
| கணவாய் | 600 | 600 | 500 | 400 | 600 | – | – |
| பாரை | 550 | 600 | 500 | 500 | 500 | – | 400 |
| சுறா | 500 | 600 | 600 | 700 | 700 | – | 800 |
| சீலா | 300 | 500 | 400 | 400 | 400 | 400 | – |
| விளை | 650 | 500 | 400 | 500 | 500 | 400 | 350 |
| முரல் | 300 | 400 | 350 | 400 | 350 | – | – |
| கும்பிளா | 400 | 350 | 300 | 400 | 400 | – | 200 |
| கிளாக்கன் | 800 | 800 | – | – | 500 | 400 | – |
| ஓரா | 400 | 400 | – | – | 450 | – | – |
| திரளி | 300 | 300 | 200 | 150 | 350 | – | 250 |
| நகரை | 250 | 250 | – | 200 | 350 | – | 300 |
| சூடை | 150 | 150 | 100 | 180 | 120 | 100 | – |
| ஓட்டி | 300 | 250 | 150 | 200 | 300 | – | – |
| திருக்கை | 150 | 350 | 200 | 300 | 400 | 100 | 150 |
| மதனம் | 150 | 250 | 180 | 300 | 350 | 300 | 200 |
| கொய் | 100 | 200 | 60 | 80 | 100 | – | – |
| பாலை | 400 | 150 | 250 | 300 | 500 | 300 | – |
| வாழை | 100 | 200 | 200 | 350 | 400 | – | 200 |

# நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 60 | 40 | 70 | 60 | 60 | 20 | 30 |
| கத்தரி | 80 | 60 | 70 | 100 | 60 | 40 | 40 | 50 |
| கரட் | 100 | 100 | 80–200 | 100 | 120 | 120 | 80 | 140 |
| மரவள்ளி | 50 | 50 | 40 | 50 | 50 | 60 | 40 | 40 |
| பயிற்றை | 80 | 80 | 80 | 140 | 80 | 40 | 60 | 60 |
| பாகல் | 120 | 100 | 140 | 120 | 100 | 100 | 100 | 80 |
| கருணைக்கிழங்கு | 100 | 100 | 80 | – | 60 | – | 60 | 50 |
| பெ.வெங்காயம் | 80 | 70 | 80 | 90 | 80 | 100 | 75 | 60 |
| சி.வெங்காயம் | 60 | 80 | 80 | 90 | 80 | 120 | 80 | 65 |
| பூசணி | 50 | 40 | 40 | 40 | 20 | 50 | 15 | 35 |
| தக்காளி | 150 | 100 | 40 | 120 | 120 | 80 | 100 | 160 |
| வாழைக்காய் | 40 | 40 | 50 | 40 | 30 | 40 | 40 | 30 |
| கீரை | 30 | 50 | 40 | 15 | 20 | 20 | 20 | 30 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 30 | 35 | 30 | 30 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 100 | 100 | 100 | 100 | 100 | 120 | 100 | 120 |
| புடோல் | 40 | 60 | 50 | 60 | 50 | 40 | 20 | 160 |
| கோவா | 50 | 70 | 80 | 80 | 50 | 100 | 70 | 40 |
| வெண்டி | 120 | 60 | 80 | 80 | 80 | 60 | 50 | 60 |
| போஞ்சி | 140 | 120 | 120 | 120 | 120 | 120 | 110 | 120 |
| லீக்ஸ் | 140 | 120 | 120 | 140 | 120 | 120 | 100 | 90 |
| தேங்காய் | 40 | 40 | 50 | 40 | 40 | 40 | 40 | 30 |
| உருளைக்கிழங்கு | 80 | 90 | 80 | 90 | 80 | 100 | 75 | 100 |
| தேசிக்காய் | 200 | 300 | 200 | 200 | 160 | 200 | 250 | 200 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 20 | 20 | 10 | 12 |
| கறிமிளகாய் | 80 | 120 | 200 | 120 | 120 | 120 | 80 | 80 |
| இராசவள்ளி | 140 | 140 | 140 | 160 | 160 | – | 110 | 80 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 400 | 300 | 350 | 300 | 250 | 300 |
| பனங்கிழங்கு | – | 04 | – | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |



# கடலைப் பருப்பு சுசியம்

**தேவையான பொருள்கள்:**

கடலைப் பருப்பு கால் கிலோ
தேங்காய் துருவல் – 1 கப்
வெல்லம் சுவைக்கேற்ப
மைதா மா தேவைக் கேற்ப
ஏலப்பொடி, உப்பு

**செய்முறை:**

முதலில் கடலைப் பருப்பை நீர் ஊற்றி பதமாக வேக வைக்கவும்.

பிறகு நீரை வடிகட்டி மிக்ஸியில் போட்டு லேசாக அரைத்து எடுக்கவும்.

பின்னர் அதில் தேங்காய் துருவல், வெல்லம், ஏலப்பொடி, உப்பு முதலியவற்றை போட்டு கையால் கலக்கவும்.

அதன்பின்னர் இக் கலவையை ஒரு சட்டியில் இட்டு சூடுபடுத்த வேண்டும்.

கலவை கெட்டியாக வரும்போது இறக்கி சிறு சிறு உருண்டைகளாகப் பிடித்து வைத்துக்கொள்ளவும்.

பிறகு ஒரு பாத்திரத்தில் மைதாவைத் தண்ணீர் விட்டுக் கரைத்து, அதில் பிடித்து வைத்துள்ள கடலைப்பருப்புக் கலவை உருண்டைகளை பஜ்ஜி போடுவது போல் தோய்த்து எடுத்து எண்ணெயில் பொரித்து எடுக்கவும்.

# பயன்தரும் வீட்டுக் குறிப்புகள்!

- கிழங்கு வகைகளைக் கறி செய்யும் போது அதிகமாக எண்ணெய் விட்டு வதக்கக் கூடாது. எளிதில் ஜீரண மாகாது.
- மின்சாரம் தடைப்பட்டிருக்கும் போது மெழுகுவர்த்தியை ஏற்று வோம். மெழுகுவர்த்தியின் வெளிச் சத்தை அதிகரிக்க மெழுகுவர்த் திக்கு பின்புறம் முகம் பார்க்கும் கண்ணாடியை வைக்கவும். இரு மடங்கு வெளிச்சம் கிடைக்கும்.
- வெல்லம் சேர்த்துச் செய்யும் பொருள் களுக்கு நெய் ஊற்றுவதால் சுவையும் மணமும் கூடும்.
- கரட், பீட்ரூட் வாடி போனால் அதை நறுக்குவது கடினம். உப்புக் கலந்த நீரில் சிறிது நேரம் போட்டு வைத் தால் புதியது ஆகி விடும். வெட்டவும் எளிதாகிவிடும்.
- சிறிது வெதுவெதுப்பான நீரில் அழுக்குத் துணிகளை ஊற வைத்துப் பிறகு, சோப் போட்டு துவைத்தால் சுலபமாக அழுக்கு போகும்.
- ஒரு டப்பாவில் சிறிதளவு சீனியைத் தூவி அதனுள் பிஸ்கட்டை வையுங் கள். பிஸ்கட் நீண்ட நாள்கள் கெடாமல் இருக்கும்.
- அரிசி மற்றும் காய்கறிகள் கழுவிய தண்ணீரை வீணாக்காமல் அதனைச் செடிகளுக்கு கொட்டி னால் செடிகள் செழிப்பாய் வளரும்.
- பச்சை மிளகாய் நீண்ட நாள்கள் இருக்க வேண்டுமானால் அதன் காம்பை எடுத்துவிட்டு பேப்பரில் சுற்றி குளிர்சாதனப் பெட்டியில் வையுங் கள். நீண்ட நாள்கள் கெடாமல் இருக்கும்.
- உருளைக்கிழங்கு வேக வைத்த தண்ணீரில் பாத்திரங்களைக் கழு வினால் பாத்திரங்கள் ஜொலிக்கும்.




## சிறுவர் நாகரிக ஆடை

சிறுவர்களுக்கான நாகரிக ஆடைகள் அறி முகமாகியுள்ளன. நவீன வடிவமைப்புடன் கண்கவர் வர்ணங்களில் இவை வடிவமைக்கப்பட்டுள்ளன. இவற்றின் விலை 3,500 ரூபாவில் இருந்து 4,000 ரூபா ஆகும்.

## நாளை

**பங்குனி -31**

புதன்கிழமை 13.04.2016
திதி: ஸப்தமி பி.இ.03.50 வரை
நட்சத்திரம்: திருவாதிரை மு.இ.08.08 வரை
ராகுகாலம்: 12.06-01.36 வரை
சுபநேரம்: 04.36-06.06 வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நுட்பம்




### ஸ்மார்ட் கடவுச்சீட்டு

தற்காலத்தில் தொடுதிரைக் கைத்தொலை பேசிகளின் பாவனை அனைத்துத் துறைகளிலும் அனைவரையும் ஆக்கிரமித்துள்ளது. காலை எழுந்தது முதல் இரவு நித்திரைக்கு செல்லும் போது மற்றும் நித்திரையில் நடக்கும் விடயங்களில்கூட தொடுதிரைக் கைத்தொலை பேசிகளின் பாவனை இருக்கின்றது.

இந்நிலையில் தற்பொழுது கடவுச்சீட்டு முறையிலும் தொடுதிரைக் கைத்தொலைபேசிகளின் பயன்பாடு வந்துள்ளது. இவ்வளவு காலமாக உள்ள காகிதங்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட கடவுச்சீட்டை மாற்றி தொடுதிரைக் கைத்தொலைபேசிகளை அடிப்படையாகக் கொண்ட கடவுச் சீட்டுகளை உருவாக்குவதற்கு இங்கிலாந்து அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

இந்த முயற்சியின் முதல் கட்டமாக இதன் தயாரிப்பை மேற்கொள்ளும் பொறுப்பை தனியார் நிறுவனம் ஒன்றிடம் அந்நாட்டு அரசு கையளித்துள்ளது. அந்நிறுவனம் தனது பணிகளை தற்பொழுது ஆரம்பித்துள்ளன.

தொடுதிரைக் கைத்தொலைபேசி கடவுச் சீட்டு (Smart phone passport) என்று அழைக்கப்படும் இந்த புதிய வசதியில் சாதாரண கடவுச் சீட்டில் காணப்படும் அனைத்து தரவுகளும் பாதுகாப்பான முறையில் உள்ளடக்கப்பட்டிருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.



### சாம்சுங் நிறுவனத்தின் கென்டாக்ட் வில்லை

தற்போதை காலகட்டத்தில் பார்வைக் கோளாறு உடையவர்கள் கண்ணாடி அணிவதைக் காட்டிலும், கென்டாக்ட் வில்லைகளை அணிவதிலேயே ஆர்வம் காட்டுகின்றனர்.

அதன் அடிப்படையில் பல்வேறு நிறுவனங்களின் தயாரிப்பில் உருவான கென்டாக்ட் வில்லைகள் காணப்படுகின்றன.

எனினும் முதன் முறையாக இலத்திரனியல் தொழில்நுட்பத்தைக் கொண்ட கென்டாக்ட் வில்லையை சம்சுங் நிறுவனம் வடிவமைத்துள்ளது.

இதில் சிறிய ரக கமரா மற்றும் சென்சர்கள் பொருத்தப்பட்டுள்ளதுடன், கண்களை சிமிட்டுவதன் ஊடாக அவற்றைக் கட்டுப்படுத்தக்கூடியதாகவும் இருக்கின்றது.

இதற்கும் மேலாக தொடுதிரைக் கைப்பேசிகளின் உதவியுடனும் இந்த வில்லையைக் கட்டுப்படுத்தக்கூடியதாக இருத்தல் விசேட அம்சமாகும்.

# வெகுமதிகளை வழங்கி புத்தாண்டு பொருள் கொள்வனவை ஊக்குவிக்கவுள்ள ஆர்பிக்கோ

சில்லறை வர்த்தக ஜாம்பவான்களான ஆர்பிக்கோ நிறுவனம் தமிழ், சிங்கள புத்தாண்டு களைகட்டத் தொடங்கும் இந்தத் தருணத்தில் தனது வாடிக்கையாளர்களுக்கு மில்லியன் கணக்கில் பொருள் கொள்வனவு வவுச்சர்களை பரிசாக வழங்கவுள்ளதாக அறிவித்துள்ளது. ஆர்பிக்கோ சுப்பர் சென்டர்கள், சுப்பர் ஸ்டோர்கள், காட்சி அறைகள், தினசரி நிலையங்கள் என சகல இடங்களிலும் இதற்கென லக்கி டிப் ஊக்குவிப்புத் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இந்த அதிர்ஷ்டத் திட்டத்தின் மூலம் ஒவ்வொன்றும் ஆயிரம் ரூபா பெறுமதியான 30,000 வவுச்சர்கள் பகிர்ந்தளிக்கப்படவுள்ளதாக சில்லறை விற்பனை ஜாம்பவான்கள் அறிவித்துள்ளனர்.

ஐந்து வகையான வர்த்தக முத்திரைகள் உள்ளடங்களாக மூவாயிரம் ரூபாவுக்கும் ஐயாயிரம் ரூபாவுக்கும் இடைப்பட்ட தொகைக்கு பொருள்களை வாங்கும் குடும்பம் லக்கி டிப்பில் ஒரு தடவை இணையும் வாய்ப்பை பெறுவர். அதே போல் ஐந்து வர்த்தக முத்திரைகளை உள்ளடக்கி ஐயாயிரம் ரூபாவுக்கும் பத்தாயிரம் ரூபாவுக்கும் இடைப்பட்ட தொகைக்கு பொருள்களை வாங்குவோர் இரண்டு வாய்ப்பை பெறுவர். பத்தாயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட தொகைக்கு பொருள்களைக் கொள்வனவு செய்பவர்களுக்கு மூன்று லக்கி டிப் வாய்ப்புக்கள் வழங்கப்படும். இந்த அடிப்படையில் ஒருவர் ஒரு முறை வருகை தருவதன் மூலம் ஆகக் கூடுதலாக மூவாயிரம் ரூபா பெறுமதியான வவுச்சரை வெல்லும் வாய்ப்பு உள்ளது.



எமது நிறுவனத்தில் பொருள்களைக் கொள்வனவு செய்கின்றவர்களுக்கு, கூடுதலாக வாய்ப்புக்களை வழங்கி, ஆகக் கூடுதலான வெகுமதிகளையும் வழங்க வேண்டும் என்பதே எமது எண்ணமாகும் என்று கூறினார் றிச்சர்ட் பீரிஸ், விநியோக தனியார் வரையறுக்கப்பட்ட நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் பிரிவு தலைவர் மினோத் டி சில்வா. இம்முறை எமது வாடிக்கையாளர்கள் உடனடி வெற்றி வாய்ப்பை வெல்வர். அதை அவர்கள் அடுத்த முறை வரும்போது பயன்படுத்தக்கூடியதாக இருக்கும் என்று அவர் மேலும் கூறினார்.

பிரிமா ட்ரீட்ஸ், பிரிமா ஸ்டெல்லா, மன்ச்சீ ரெவல்லோ, டியாரா, லங்கா சோய், செரா, லைப்போய், விம், கொம்பர்ட், மைலோ, கலர் மீ, இம்பல்ஸ், டொட்லோ பேபி, சென்சொர்டைன், ஹார்பிக், அங்கர், நிவ்டேல், அன்லின், ஸ்டெலா, எயர், மரி னா, புளோரா டிஷு, டிவ் மற்றும் சென்ட் கிளயர் டீ என சுமார் 25 வர்த்தக முத்திரைகள் இம்முறை ஆர்பிக்கோவுடன் இந்த ஊக்குவிப்பில் இணைந்துள்ளன.

## வணிகம்

இந்தப் பண்டிகை காலத்தை முன்னிட்டு ஆர்பிக்கோ சுப்பர் சென்டர்கள் அனைத்தும் பாரம்பரியம் கமழும் வர்ணமயமான வரவேற்பு பந்தல்களால் அலங்காரம் செய்யப்பட்டுள்ளன. புத்தாண்டை முன்னிட்டு இனிப்புக்கள் தயாரிக்கும் செய்முறை, பாரம்பரிய றபான் இசைத்தல் என பல்வேறு அம்சங்களும் கொண்டாட்டங்களில் சேர்க்கப்பட்டுள்ளன.

சிறுவர்களுக்கு பண்டிகை பாரம்பரியம் பற்றிய தகவல்கள் அடங்கிய கைநூல்களும் இலவசமாக வழங்கப்படவுள்ளன. ஆர்பிக்கோ காட்சியறைகளில் இவ்வாண்டு பண்டிகை பருவ காலத்தின் போது 800 வகைக்கும் மேற்பட்ட நிபந்தனையற்ற உற்பத்திகள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. தெரிவு செய்யப்பட்ட தினசரி அத்தியாவசிய மற்றும் இலத்திரனியல் உற்பத்திகளுக்கு 25 வீத கழிவுகள் வழங்கப்படுகின்றன. தெரிவு செய்யப்பட்ட தளபாடங்களுக்கு 30 வீத கழிவும், வீட்டுப் பாவனைப் பொருள்களுக்கு 40 வீத கழிவுகளும் வழங்கப்படுகின்றன.

இவற்றுக்கு மேலதிகமாக அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் கார்ட் வைத்திருப்பவர்களுக்கு ஏப்ரல் மாதம் 30ஆம் திகதி வரை வெள்ளி முதல் ஞாயிறு வரையான தினங்களில் புதிய இறைச்சி வகைகளைக் கொள்வனவு செய்கின்றபோது, 25 வீத கழிவு வழங்கப்படும். ஸ்ட்ரேண்டட் சார்டட் வங்கியின் கடன் அட்டை வைத்திருப்பவர்களுக்கு முழு அளவிலான கட்டண விலக்கு சந்தர்ப்பமும் இந்த பருவ காலத்தில வழங்கப்படவுள்ளது.

ஆர்பிக்கோ சங்கிலித் தொடர் வர்த்தக நிலையமானது தற்போது 19 சுபர் சென்டர்கள் மற்றும் சுபர் ஸ்டோர்கள், 18 காட்சியறைகள் மற்றும் 23 தினசரி மினி சுபர் மார்க்கெட்கள் என்பனவற்றைக் கொண்டதாகும். போதிய வாகன தரிப்பிட வசதி, பட்டியல்கள் கொடுப்பனவு, வங்கி வசதிகள், வாழ்வியல் தேவைகள், வீட்டு பாவனைப் பொருள்கள், இலத்திரனியல் உபகரணங்கள், சமையலறை பொருள்கள், தளபாடங்கள், என்பன உட்பட விரிவான பல்வேறு வகை உற்பத்திகளை ஆர்பிக்கோ நிலையங்களில் மிகவும் சௌகரியமான முறையில் பெற்றுக் கொள் ளலாம். நாட்டில் மிகவும் வசதியான பொருள் கொள்வனவு நிலையங்கள் இவை தான் என்ற உத்தரவாதத்தையும் வாடிக்கையாளர்களுக்கு இவை வழங்குகின்றன.

பெறுமான சேர் சேவைகள் வரிசையில் இந்தசில்லறைவிற்பனைஜாம்பவான்கள் புதிய சாதனை ஒன்றையும் இவ்வாண்டு முற்பகுதி முதல் ஏற்படுத்தி உள்ளனர். தமது நிலையங்களில் பொருள்களைக் கொள்வனவு செய்கின்றவர்களுக்கான பிரத்தியேக மான வாடகை வாகன வசதியே அதுவாகும். இலங்கையில் சுபர் மார்க் கெட் நிறுவனம் ஒன்று இத்தகைய சேவையை தொடங்கியுள்ளமை இதுவே முதற் தடவை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். (த)

# எலிபன்ட் ஹவுஸ் நெக்டோவுக்கு விருது

எலிபன்ட் ஹவுஸ் நெக்டோ இளைஞர் பான வர்த்தக நாமம் இணை விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது. மக்கள் விருதுகள் 2016 வழங்கலின் போது இந்த விருது எலிபன்ட் ஹவுஸ் நெக்டோ வர்த்தக நாமத்துக்கு வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. அதிகளவு விரும்பப்படும் வர்த்தக நாமத்துக்கு, அண்மையில் புதிய போத்தலில் புதிய சந்தைப்படுத்தல் செயற்பாடுகளுடன் மீள அறிமுகம் செய்யப்பட்டிருந்ததைத் தொடர்ந்து இந்த விருது கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை சந்தைப்படுத்தல் கல்வியகம் மற்றும் நீல்சன் கம்பனி ஆகியவற்றின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மக்கள் விருதுகள் என்பதன் மூலமாக, நுகர்வோரின் தெரிவுகள் பதிவு செய்யப்பட்டு, அதிகளவு தெரிவைப் பெற்ற நாமங்களுக்கு விருதுகள் வழங்கப்படுகின்றன. பொது மக்கள் இந்த வெற்றியாளர்களை தெரிவு செய்கின்றமையால், தமக்கு விருப்பமான வர்த்தக நாமங்கள், நபர்கள், விளம்பரங்கள், திரைப்படங்கள், தொலைக்காட்சி நாடகங்கள் போன்றவற்றை தெரிவு செய்திருந்தனர். வெற்றியாளர்கள் நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்டிருந்த நேருக்கு நேர் கருத்துக்கணிப்புகளை நீல்சன் மேற்கொண்டிருந்தது. இதில் 15 - 60 வயதுக்குட்பட்ட ஆண் மற்றும் பெண் இருபாலாரும் நாட்டின் சகல மாவட்டங்களிலிருந்தும் ஐந்து மாதங்களுக்கு இவ்வாறு நேர்காணல்களுக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர்.

எலிபன்ட் ஹவுஸின் வர்த்தக நாமம் இந்த உயர் விருதை பெற்றுக்கொண்டமை தொடர்பில் சிலோன் கோல்ட் ஸ்ரோர்ஸ் பிஎல்சியின் பானங்கள் பிரிவின் தலைமை அதிகாரியும், ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பதில் தலைவருமான தமிந்த கம்லத் கருத்து தெரிவிக்கையில்,



எலிபன்ட் ஹவுஸ் நெக்டோ என்பது அதிகளவு களிப்பை விரும்புவோரின் தெரிவுக்குரிய நாமமாக அமைந்துள்ளது. ஒவ்வொரு வருடமும் எமது கடுமையான உழைப்புகளுக்கு இறுதியாக மக்கள் விருதுகளில் கவனிப்புக் கிடைத்துள்ளது. மேலும், எமது வாடிக்கையாளர்களுக்கு நாம் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம், ஆண்டின் சிறந்த வர்த்தக நாமம் விருது எமக்குக் கிடைத்துள்ளமை மூலமாக, எமது வர்த்தக நாமத்தில் வாடிக்கையாளர்கள் கொண்டுள்ள அதிகளவு நம்பிக்கை உறுதி செய்யப்பட்டுள்ளது - என்றார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடையை நீக்கவுள்ளது ஐரோப்பிய ஒன்றியம்

கொழும்பு, ஏப். 12
இலங்கையிலிருந்து ஐரோப்பிய சந்தைக்கு மீன்களை ஏற்றுமதி செய்வதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்குவதற்கான முதற் கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அரசு தெரிவித்துள்ளது. இதற்கான அனுமதியை ஐரோப்பிய ஒன்றியம் வழங்கியுள்ளதாக மீன்பிடித்துறை அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.
இந்தத் தடை நீக்கத்திற்கான முதற் கட்ட பரிந்துரைகள் பெல்ஜியத் தலைநகர் பிரஸல்ஸில் முன் வைக்கப்பட்டுள்ள நிலையில், ஐரோப்பிய நாடாளுமன்றம் அதற்கு அனுமதி வழங்கியதன் பின்னர் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (வ)

## காணாமற்போனோர்

உறவினர்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். மூதூர் பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில் இந்த கவன வீர்ப்புப் போராட்டம் நடைபெற்றது.
இதன்போது மூதூர் பிரதேச செயலாளர் வீ.யூசுப்பிடம், மூதூரில் காணாமற்போனோர் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களைச் சேர்ந்தவர்களின் சார்பில் மனுக் கையளிக்கப்பட்டது. குழுவின் தலைவர் சிவஸ்ரீ இ.பாஸ்கரன் குருக்கள் பிரதேச செயலாளரிடம் மனுவை வழங்கி வைத்ததுடன், அதனைக் கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ்ரின் பெர்னாண்டோ ஊடாக ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்குமாறும் அவர் கோரிக்கை விடுத்தார்.
அந்த மனுவில், கடந்த 30 வருடகாலமாக இலங்கையில் ஏற்பட்ட போர் இடரால் வடக்கு - கிழக்கு மாகாணங்களிலுள்ள பல்லாயிரக்கணக்கானோர் படுகொலை செய்யப்பட்டும், ஆயிரக் கணக்கானோர் காணாமலும் ஆக்கப்பட்டிருந்தனர்.
இந்தக் காலப்பகுதியில் அரசியல் காரணங்களுக்காக, நாட்டின் ஏனைய பகுதியில் வாழ்ந்தவர்களும் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். போரின் முடிவில் பலர் தமது உறவுகளை இராணுவத்திடம் ஒப்படைத்துள்ளனர். தமது உறவுகள் திரும்பி வருவார்கள் என்று காத்திருக்கும் மக்களுக்கு அரசு பதில் கூறவேண்டும்.
இடைக்கால நீதி தொடர்பான நடவடிக்கைகளை இலங்கை அரசு முன்னெடுக்க வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களின் கருத்துகளைக் கட்டாயம் கேட்க வேண்டும்.
இது இவ்வாறு இருக்க, மேற்படி வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட மற்றும் படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பது தொடர்பான விசாரணைகள் சர்வதேச நிபுணர்கள் முன்னிலையிலும், அவர்களின் பூரண பங்கேற்புடனும் நடத்தப்பட்டு, அவர்களுக்கு என்ன நடந்தது என்ற உண்மை தெரியப்படுத்தப்பட வேண்டும்.
பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதி கிடைக்கவேண்டும்.
தவறு செய்தவர்களுக்கு உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும். மேற்படி இரண்டும் சரியாகவும், முறையாகவும், உண்மைத் தன்மையாகவும் அமையும் பட்சத்தில், சர்வதேச தரத்திலான அல்லது சர்வதேச சட்ட திட்டங்களுக்கு அமைய பாதிக்கப்பட்டவர்களுக்கான இழப்பீடு வழங்கப்பட வேண்டும்.
அத்துடன் மேற்படி கொடூரமான சம்பவங்கள் இலங்கையில் மீள நிகழக் கூடாது என்ற உத்தரவாதம் இலங்கை அரசினால் வழங்கப்பட வேண்டும் என்று இந்த மனுவில் கோரியுள்ளனர். (த-வ-5)

## வித்தியா

இந்த வழக்கில் வழக்குத் தொடுநர் தரப்பில் முன்னிலையாகியிருந்த குற்றப்புலனாய்வுப் பிரிவு அதிகாரி, வழக் குத் தொடர்பில் மேலும் ஒருவரைக் கைதுசெய்யவுள்ளதாகக் குறிப்பிட்டார்.
இந்த வழக்கில் ஏற்கனவே 12 பேர் கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில் தற்போது 13 ஆவது சந்தேக நபராக ஒருவரைக் கைதுசெய்யவுள்ளதாகப் புலனாய்வு அதிகாரி நீதிமன்றில் அறிவித்தார்.
தவிர, வழக்கு விசாரணையின்போது சந்தேக நபர்களுக்கும் நீதிவான் எச்சரிக்கையாக அறிவுறுத்தல் விடுத்தார். அதாவது குறித்த வழக்கு விசாரணையில் இருக்கையில், அதுபற்றி வெளியே கருத்துக்கள் கூறுவது வழக்கு விசாரணை நடவடிக்கையைப் பாதிக்குமாக இருந்தால், அதற்குச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுட்டிக் காட்டினார்.
குறித்த வழக்கில் முதலில் பூபாலசிங்கம் இந்திரகுமார், பூபாலசிங்கம் ஜெயக்குமார், பூபாலசிங்கம் தவக்குமார் ஆகிய 3 பேர் கைதுசெய்யப்பட்டு, அவர்களிடம் விசாரணை மேற்கொண்டதிலிருந்து பின்னர் 6 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்கள் 9 பேரும் விளக்கமறியலில் இருந்து வருகின்றனர். பின்னர் 10 ஆவது சந் தேகநபராக பியவர்த்தன ராஜ்குமார் கைது செய்யப்பட்டார்.
இதன்பின்னர் கடந்த மாதம் 2 பேர் கைது செய்யப்பட்டனர். உதயசூரியன் சுரேஸ்குமார், தர்மலிங்கம் ரவீந்திரன் ஆகியோரே இறுதியாகக் கைது செய்யப்பட்டனர். முதல் கைதான 10 பேர் ஒரு தவணையிலும், பின்னர் கைதான 2 பேர் பிறிதொரு தவணையிலுமாக நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டு வருகின்றனர். குறித்த 2 சந்தேக நபர்களில் ஒருவரே கண்கண்ட சாட்சி என்று குற்றப் புலனாய்வுப் பிரிவு தெரிவிக்கிறது. அவர்கள் இன்று நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர்.
இந்த நிலையில் 13 ஆவது சந்தேக நபராக ஒருவர் உள்ளார் என்றும், அவரைக்கைது செய்யவுள்ளதாகவும் குற்றப் புலனாய்வுப் பிரிவு தெரிவித்தது. ஆனாலும் அவர் பற்றிய தகவல் எதனையும் புலனாய்வுப் பிரிவு வெளியிடவில்லை.
கடந்த வருடம் மே மாதம் 13 ஆம் திகதி வித்தியா கூட்டு வன்புணர்வின் பின்னர் படுகொலை செய்யப்பட்டார். ஒரு வருடமாகவுள்ள நிலையிலும் ஆரம்ப விசாரணைகள் முடிவடையவில்லை. இவ்வாறானதொரு நிலையிலேயே 13 ஆவது சந்தேக நபராக ஒருவரைக் கைது செய்யவுள்ளதாகத் தெரிவித்துள்ளனர். (த-வ-4)

## வெள்ளியன்றும்

முன்னிட்டு நாளை 13 ஆம் திகதி புதன் கிழமையும், மறு நாள் 14 ஆம் திகதி வியாழக்கிழமையும் விடுமுறை நாள்களாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தன.
இந்த நிலையிலேயே, புத் தாண்டுக்கு மறுநாளான, 15 ஆம் திகதி வெள்ளிக் கிழமையும் சிறப்பு அரச விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டுள்ளது.
இதையடுத்து, இன்றுடன் புத்தாண்டு விடுமுறைக்காக மூடப்படும், அரச மற்றும் தனியார்துறை நிறுவனங்கள், எதிர்வரும், 18 ஆம் திகதி திங்கட்கிழமையே மீள ஆரம்பிக்கப்படும் என்பதுகுறிப்பிடத்தக்கது. (த-வ-5)

## மரண அறிவித்தல்

### முருகேசு தங்கவேல்



வதிரி, கண்ணிவளவைப் பிறப்பிடமாகவும், வதிரி ஐமூலை ஸ்ரீமகாலை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு தங்கவேல் நேற்று (11.04.2016) திங்கட் கிழமை சிவபதமடைந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - பறுவதம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - ஆசைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், பூமணியின் அன்புக் கணவரும், பாக்கியமலர் (கனடா), பார்த்திபன் (ஆசிரியர் - ஹாட்லிக் கல்லூரி), சித்திரா ஆகியோரின் பாசமிகு தந்தையும், திருச்செல்வம் (கனடா), மாலதி ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற லீலாவதி மற்றும் கெங்காதரன், பாலேந்திரன் (ஓய்வுநிலை ஆசிரியர்), சிறிஸ்கந்தராஜா (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் எழிலினி, ஜவகர், ஜனாத், சப்தகி, புருசோத்தமன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.04.2016) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆலங்கட்டை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"சிறிமகால்"
வதிரி, கரவெட்டி.

(என்/12)
(11,18)


தகவல்:
த.பார்த்திபன்
(மகன்)

077 438 9451

## மரண அறிவித்தல்

### ஜெயரட்ணம் பாலேந்திரன்

(சுகாதாரத் திணைக்கள ஓய்வுபெற்ற உத்தியோகத்தரும் தற்போதைய சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய நிர்வாக பொறுப்பாளரும்)




தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் சுதுமலை வடக்கு, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட ஜெயரட்ணம் பாலேந்திரன் 10.04.2016 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான ஜெயரட்ணம் - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நடேசர் - சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும், சிவகாம்பிகையின் அன்புக் கணவரும், குமரன் (லண்டன்), நந்தன் (லண்டன்), பா.பிரணவன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சரோஜா, தபேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவஞானசுந்தரம் (கனடா), சிவயோகசுந்தரம், கமலாம்பிகை, பவானி, சிவராஜசுந்தரம் (அபுதாபி) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.04.2016) செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

தகவல்:
மனைவி

021 225 5336

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையில் நீண்ட காலமாக ஆசிரியராகவும் அதிபராகவும் கடமையாற்றி பாடசாலையின் வளர்ச்சிக்கு அயராது பாடுபட்ட ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர்

### அருணாசலம் கமலாகரன்

அவர்களின் திடீர் மரணச் செய்தி கேட்டு அதிர்ச்சி அடைவதுடன் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய மருதடி வீரகத்தி விநாயகப் பெருமானை வேண்டுகின்றோம்.

பாடசாலைச் சமூகம்
வலந்தலை தெற்கு.அ.மி.த.க.பாடசாலை, காரைநகர்.

## நெஞ்சில் நிழலாடும் நினைவுகளோடு இருபத்தைந்தாம் ஆண்டு

மலர்வு
01 . 01 . 1939



உதிர்வு
12 . 04 . 1991

### அமரர் திருமதி கோணேஸ்வரி துரைராஜா

திதி: திரயோதசி

ஆண்டுகள் பல ஆனாலும்
பறந்து சென்ற உங்கள் திருமுகத்தை
மறக்கமுடியவில்லை அம்மா! அம்மா
எங்கள் வாழ்க்கையை அருகிருந்து
பார்க்காமல் இடைநடுவில் தவிக்க
விட்டு ஓடி மறைந்தாய் - அம்மா!
நித்தம் நித்தம் கண்ணீரில்
மூழ்குகின்றோம் - அம்மா!

இல.95, சிவன்பண்ணை வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

கண்ணீருடன்...
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு

கட்சி உறுப்பினர்கள் குறிப்பிட்டனர்.

வடக்கு மாகாண சபையின் அமைச்சரவையை மாற்றம் செய்ய வேண்டும் எனக் கோரி, கடந்த மாதம் 24 ஆம் திகதி ஆளும் கட்சி உறுப்பினர்களினால் கையெழுத்து சேகரிக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பான கோரிக்கைக் கடிதத்தில், நான்கு அமைச்சர்களும் எஞ்சியுள்ள இரண்டரை வருடங்களுக்கு மாற்றப்பட்டு, புதிய தகைமையானவர்களுக்கு அமைச்சுப் பதவி வழங்கப்படவேண்டும். ஐந்து மாவட்டங்களிலிருந்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலுள்ள நான்கு கட்சிகளுக்கும் சந்தர்ப்பம் வழங்க வேண்டும். மேற்படி விடயங்களை இலகுவாக்குவதற்குத் தேவையெனின் அவைத் தலைவர், பிரதி அவைத் தலைவர் பதவிகளையும் மாற்றித் தகுதியானவர்களுக்கு வழங்கலாம்.

அமைச்சரவை மாற்றத்தின்போது, முல்லைத்தீவு மாவட்டத்துக்கு அமைச்சுப் பதவி வழங்கப்படவேண்டும். வடக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கு 'பொறுப்புக் கூறுபவர்கள்' என்ற துறைகள் ஒதுக்கிக் கொடுக்கப்பட்டிருந்தன. இவற்றைச் சிறப்பாகச் செய்வதற்கு ஏற்ற ஒழுங்குகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கவில்லை.

இந்தத்துறைகளை நீக்குமாறு கோரியபோதும், புதிய பட்டியல் அனுப்பப்பட்டதே தவிர, அவற்றைப் பொறுப்புடன் செய்வதற்குத் திரும்பவும் ஏற்ற ஒழுங்குகள் செய்யப்படவில்லை. அதற்குரிய திணைக்களத் தலைவர்கள் சந்திப்பை ஏற்பாடு செய்யவேண்டும், என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்தக் கோரிக்கைக் கடிதத்தில் ஆளும் கட்சியின் 16 உறுப்பினர்கள் கையெழுத்திட்டிருந்தனர். அவைத் தலைவர் உள்ளிட்ட தற்போதைய அமைச்சரவையினர் கையெழுத்திடவில்லை. அதனைத் தவிர 8 ஆளும் கட்சி உறுப்பினர்கள் இதில் கையெழுத்திடவில்லை.

இந்த நிலையில் நேற்று மாலை வடக்கு மாகாண முதலமைச்சரை, அவரது இல்லத்தில் 6 பேர் கொண்ட ஆளும் கட்சி உறுப்பினர்கள் சந்தித்தனர். ம.அன்ரனி ஜெகநாதன், திருமதி அனந்தி சசிதரன், பிறிமுஸ் சிராய்வா, க.விந்தன், ஞா.குணசீலன், க.சர்வேஸ்வரன் ஆகியோரே முதலமைச்சரை, சுமார் ஒன்றரை மணி நேரம் சந்தித்துக் கலந்துரையாடி மேற்படி கோரிக்கைக் கடிதத்தைக் கையளித்துள்ளனர்.

இந்தச் சந்திப்பின் போது, அமைச்சர்கள் தொடர்பிலான பல்வேறு குற்றச்சாட்டுக்களையும் அவர்கள் கலந்துரையாடியுள்ளனர். இறுதியில் முதலமைச்சர், இந்தக் கோரிக்கையை பரிசீலிக்க மாட்டேன் என்றோ, நிராகரிக்கின்றேன் என்றோ கூறவில்லை. ஆனால் கட்சித் தலைவர்களுடன் பேசியே நடவடிக்கை எடுக்க முடியும் என்று குறிப்பிட்டதாக, சந்திப்பில் கலந்து கொண்ட ஆளும் கட்சி உறுப்பினர்கள் தெரிவித்தனர். (த-வ-5)

## தாயை

மகளுடனும், மூன்று வயது மகனுடனும் மரங்கல பிரதேசத்தில் நடந்த புதுவருட வைபவமொன்றுக்குச் சென்றிருந்தார். வைபவம் முடிந்து மாலை ஆறு மணியளவில் காட்டுப்பாதை வழியாக அவர்கள் வீடு திரும்பிக்கொண்டிருந்தபோது, அவர்களைப் பின்தொடர்ந்து வந்த நபரொருவர் தாயைத் தள்ளி விழுத்தியிருக்கிறார்.

அவரது கையில் இருந்த மூன்று வயதுக் குழந்தை வீசப்பட்டு அருகிலிருந்த பற்றையொன்றில் போய் விழுந்தது. அதனைத் தொடர்ந்து அந்த நபர் அந்தப் பெண்ணை வன்புணர்வுக்குட்படுத்த முயன்றிருக் கிறார். இதைக் கண்ட பத்து வயது மகள் பயந்து ஓடிவிட பற்றைக்குள் விழுந்து கிடந்த மூன்று வயது மகன் எழுந்துவந்து, அந்தக் காமுகனின் முதுகில் ஏறிப் பலமாகக் கடித்திருக்கிறார். வலி தாங்க முடியாத நபர் தப்பியோடியிருக்கிறார். அந்த நபர் தனது முகத்தை ஒரு துணியால் கட்டி மறைத்திருந்ததால், அவரைத் தாயால் அடையாளம் கண்டு கொள்ளமுடியவில்லை இந்தச் சமயத்தில் தாயிடம் அந்த மனிதனின் முதுகில் தான் கடித்ததை அந்தச் சிறுவன் மழலைக் குரலில் சொன்னதைப் பதியத்தலாவபொலிஸ் நிலையத்தில் தாய் தெரிவித்ததையடுத்து, அன்றைய தினமே சந்தேகநபர் தேடிப் பிடிக்கப்பட்டார்.

அவரது முதுகிலிருந்த காயம் குழந்தையின் பற்களால் ஏற்பட்டதென மருத்துவர்கள் உறுதி செய்துள்ளனர்.

இந்தப் பெண் பதியத்தலாவ மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருப்பதாகவும், சந்தேகநபரை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் பதியத்தலாவ பொலிஸார் தெரிவித்தனர். (த-5)


### 31 ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 31 . 12 . 1935 — மறைவு 15 . 03 . 2016

**அமரர் வீரகத்தியார் பாலசிங்கம்**

கடந்த (15.03.2016) செவ்வாய்க்கிழமை அன்று இறைபதமடைந்த எமது அன்புத் தெய்வம் அமரர் வீரகத்தியார் பாலசிங்கம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகளும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளும் நாளை (13.04.2016) புதன்கிழமை அதிகாலை 6.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்துடன் 16.04.2016 சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் தாங்களும் தாங்கள் குடும்ப சகிதம் கலந்த கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் எமது அன்புத் தெய்வத்தை இழந்து துயருற்றிருந்த வேளையிலே எம் துயர் பகிர நேரில் கலந்த கொண்ட உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்கள், பல்கலைக்கழக சமூகம்,விரிவுரையாளர் சமூகம், பாடசாலைச் சமூகம், உத்தியோகத்தர்கள் மற்றும் அனுதாபச் செய்திகளை தொலைபேசி,மின்னஞ்சல், முகப்புத்தகம்,பத்திரிகை, அஞ்சலிப் பிரசுரங்கள், பதாகைகள், மலர் வளையங்கள் மூலம் தங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும் இரங்கல் உரை நிகழ்த்தியோருக்கும் மேலும் பல்வேறு வழிகளில் உதவிகள் புரிந்தவர்களுக்கும் கிரியைகளைச் செய்த அந்தணப் பெருமக்களுக்கும் நெஞ்சச் சிமிழ் திறந்து நினைவு மலருக்கு ஆக்கங்கள் தந்தவர்களுக்கும் இம் மலரினை அச்சிட உதவிய கிங்ஸ் பதிப்பகத்தினருக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வரணி வடக்கு,
வரணி.
குடும்பத்தினர்.

### 16 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 09 . 07 . 1968 — இறப்பு 12 . 04 . 2000

அமரர்
**நமசிவாயம் ஞானலிங்கம்**

எனது அன்பு மகனே! செல்வமே! உனது செல்லப் பெயராகிய கண்ணன் என்பதை இன்றும் எனது வாய் சொல்லி அழுகிறது. உன்னை நினைக்காத நாளே இல்லை. ஆசையாக ஒரே ஒரு மகனாக வந்து பிறந்தாய். உனது சகோதரிகள், மருமக்கள் இன்றும் உன்னை நினைத்து அழுது புலம்புகின்றனர். உனது ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை வேண்டுகிறோம்.

இல. 383 A9 வீதி,
கிளிநொச்சி.
அம்மா, சகோதரிகள்,
மருமக்கள்.

### கண்ணீர் அஞ்சலி



சுதுமலை ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தான தர்ம கர்த்தா சபை உறுப்பினரும், தனாதிகாரியுமான

**ஜெயரட்ணம் பாலேந்திரா**

அவர்களின் திடீர் மறைவு எமக்கு பெரும் துயரையும் இழப் பையும் ஏற்படுத்தியுள்ளது. அன்னாரின் இழப்பால் தவிக்கும்குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

பிரதம குருக்களும், தர்மகர்த்தா சபையினரும்,
சுதுமலை ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம்,
மானிப்பாய்.

### 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அன்னையின் அரவணைப்பில் (வல்வெட்டித்துறை இலங்கை) 02 . 10 . 1954



ஆண்டவன் அரவணைப்பில் (PRAIRIEVILLE, LOUISIANA, U.S.A) 14 . 03 . 2016

**அமரர் கலாநிதி கனகராஜா பிரபாகரன் (சிவம்) PhD**
(PROFESSOR OF MATHERMATICS & ACTUARIAL SCIENCE, SOUTHERN UNIVERSITY, BATON ROUGE, LOVISIANA,U.S.A)

கணிதம் தெளிந்தனை, மனிதம் நிறைந்தனை,
புனிதன் தாழ்களில் இனிது நீ அமர்ந்தனை
LOVER OF MATH AND SCIENCE
SELF LESS HUMANITARIAN
MAY HIS SOUL REST IN PEACE
AT THE OF THE ALMIGHTY

கடந்த 14.03.2016 அன்று லூசியானா, அமெரிக்காவில் எம்மை விட்டுப் பிரிந்த எம் சகோதரனின் திடீர் மறைவைக் கேள்வியுற்று எமது துயர்பகிர நேரிலும் மற்றும் தொலைபேசி, மின்னஞ்சல், முகப்புத்தகம் மூலமும் தங்கள் அனுதாபங்களைத் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் வீட்டு சபிண்டிக் கிரியைகள் 12.04.2016 அவரின் மனோகரா இல்லத்தில் நடைபெற்று 13.04.2016 புதன்கிழமை காலை வல்வெட்டித்துறை ஊறணித் தீர்த்தத்தலத்தில் அந்தியேட்டிக் கிரியைகள் நடைபெறும். அதனைத் தொடர்ந்து மனோகரா இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.

மனோகரா
அ.மி.பாடசாலை ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.

புஸ்பராணி கணேசன்:- 0777 881726
ரமணாகரன் :- 077 593 0335
கனகமனோகரன்:- 0014165311650
லங்காநேசன்:- 001 512 731 5761

### மரண அறிவித்தல்

ஜனாதிபதி சட்டத்தரணி

**இரத்தினவடிவேல் சுரேந்திரன்**

(தலைவர் கொழும்பு விவேகானந்த சபை. அறங்காவலர் சபை உறுப்பினர். அகில இலங்கை இந்து மாமன்றம்)



நல்லூரைச் சேர்ந்த காலஞ்சென்ற இரத்தினவடிவேல் (சிந்தி சாய் நிலையம்) தம்பதிகளின் மூத்த புதல்வனும். காலஞ்சென்ற வேலுப்பிள்ளை முருகேசு (சட்டத்தரணி. கொழும்பு) தம்பதியரின் அன்பு மருமகனும். வெள்ளவத்தை AMI MONTESSORI HOUSE OF CHILDREN அதிபரான திருமதி இரேணுகாதேவியின் அன்புக் கணவரும். பிரசாந்தன் (மென்பொருள் பொறியியலாளர். கலிபோர்ணியா. அமெரிக்கா). பவித்திரா (மருத்துவக் கல்லூரி மாணவி). காலஞ்சென்ற பிரதர்சினி ஆகியோரின் பாசமிகு தந்தையும். நரேந்திரன் (கனடா). கதாதரன் (கனடா) ஆகியோரின் பிரியமான சகோதரரும். ஜானகி (கனடா). விநோதினி (கனடா). சசிதேவி நீலகண்டன் (நீலகண்டன் & நீலகண்டன் முன்பு முருகேசு & நீலகண்டன் சட்ட நிறுவனப் பங்காளர்). நித்தி முருகேசு (நித்தி முருகேசு சட்ட நிறுவனத்தின் உரிமையாளர்) ஆகியோரின் அன்பு மைத்துனரும். வெள்ளவத்தை திரு&திருமதி துரைசிங்கம் ஆகியோரின் மருமகனும். சரவணன். ஜனனி. செந்தூரன். பிரணவன் ஆகியோரின் அருமைச் சித்தப்பாவும். வெங்கடேசன் சங்கரி ஆகியோரின் அன்பு மாமனுமான ஜனாதிபதி சட்டத்தரணி ஏ.ஆர். சுரேந்திரன் காலமாகிவிட்டார்.

அமரரின் இல்லமான கொள்ளுப்பிட்டி கார்ள்வில் பிளேஸ் இல. 12 இல் பூதவுடல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு புதன்கிழமை 13.04.2016 நண்பகல் 12.00 மணியளவில் பொரளை கனத்தை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு பிற்பகல் 12.30 மணிக்கு [illegible] பகுதியில் தகனக்கிரியை இடம்பெறும்

மின்னஞ்சல்: surendhran16@yahoo.com.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறீஸ் பூதம் எனக்கு சவாலாக இருந்தது

## ஓய்வுபெறும் பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.12

தனது பதவிக் காலத்தின்போது, மக்களுக்குச் சிறந்த சேவையை வழங்குவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்டார் என்றும், பொலிஸ் சேவையிலிருந்து, தான் திருப்தியுடனேயே ஓய்வு பெறுகிறார் என்றும் பொலிஸ்மா அதிபர் எம்.கே. இலங்கக்கோன் தெரிவித்தார்.

1982ஆம் ஆண்டு ஜனவரி 28 ஆம் திகதி இலங்கை பொலிஸ் சேவையில் இணைந்த என்.கே.இலங்கக்கோன், அந்தத்துறையில் 34 வருடங்கள் சேவையாற்றிய பின்னர், நேற்று ஓய்வுபெற்றார். இவர் 2011 ஆம் ஆண்டு பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டார். ஓய்வுபெறுவதற்கு முன்னர் பொலிஸ் தலைமையகத்தில் அவர் நேற்று விசேட செய்தியாளர் மாநாடொன்றையும் நடத்தினார். இதன்போது தனது சேவையின் போது எதிர்கொண்ட சவால்களையும் எடுத்துரைத்தார். பொலிஸ் சேவை என்பது சவால்மிக்க துறையாகும். எனவே, அந்தத்துறையில் இருந்துகொண்டு சிறந்த சேவையை வழங்குவதே காக்கிச்சட்டைக்கு வழங்கும் கௌரவமாகும். கடந்த ஐந்து வருடங்களாக நான் பொலிஸ்மா அதிபராகவும் கடமையாற்றியுள்ளேன்.

2011ஆம் ஆண்டு பொலிஸ்மா அதிபராக பதவியேற்ற போது, 'கிறீஸ் யக்கா' ( கிறீஸ் பூதம்) சவாலை எதிர்கொண்டேன். இறுதியாக எம்பிலிப்பிட்டிய சம்பவம். இப்படி பல சவால்களை எதிர்கொள்ள வேண்டியேற்பட்டது. எனினும், மக்கள் சேவைக்காக இந்தக்காலப்பகுதியில் நான் அர்ப்பணிப்புடன் செயற்பட்டேன்.

11 தேர்தல்களை ஜனநாயகமுறைப்படி நடத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கினேன். 2014ஆம் ஆண்டுடன் குற்றச்செயல்கள் குறைவடைந்தன. விசேட சுற்றிவளைப்புகள் இடம்பெற்றன. எனவே, திருப்தியுடனேயே இந்தத்துறையிலிருந்து நான் ஓய்வுபெறுகிறேன் - என்றார்.

(து-வ-5)

# திருட்டுப் பேர்வழிகள் இருவருக்கு மறியல்

யாழ்ப்பாணம், ஏப்.12

ஆள்களில்லாத வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்து 40 ஆயிரம் ரூபா பணத்தையும், 8 ஆயிரம் ரூபா பெறுமதியான ஒலி பெருக்கிச் சாதனத்தையும் திருடிய குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதி மன்று உத்தரவிட்டுள்ளது.

கொடிகாமம் மந்துவில் வடக்குப் பகுதியில் உள்ள வீட்டின் உரிமையாளர் கடந்த வெள்ளிக்கிழமை சாவகச்சேரி வைத்தியசாலைக்குச் சென்று விட்டு நண்பகல் வேளையில் வீட்டுக்குச் சென்றபோது வீட்டின் ஜன்னலில் பொருத்தப்பட்டிருந்த காட் போட் மட்டை நீக்கப்பட்டிருந்ததை அவதானித்து உள்ளே சென்று பார்த்தபோது அங்கிருந்த 40 ஆயிரம் ரூபாவும், ஒலிபெருக்கிச் சாதனமான அம்பிளிபயரும் திருடப்பட்டுள்ளதைக் கண்டுள்ளார்.

இது தொடர்பாக அயல் பகுதியில் விசாரித்தபோது சந்தேகத்துக்கிடமான முறையில் இருவர் நடமாடினர் என்று தகவல் வழங்கப்பட்டுள்ளது. அந்தத் தகவலையடுத்து மறுநாள் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். தகவல் வழங்கியவரைப் பொலிஸ் நிலையம் அழைத்துத் தகவல் பெற்ற பொலிஸார் அதன் பிரகாரம் மந்துவில் மேற்கைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டனர் என்றும் ஒலிபெருக்கிச் சாதனமும் மீட்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

அதன்பின்னர் சந்தேக நபர்கள் இருவரையும் நேற்று நீதிமன் றில் முற்படுத்தியபோது அவர்களை எதிர்வரும் 22 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

(ற-ஜ-4,9)

## வடக்கின்

இடம்பெற்றிருந்தன.

இன்றைய தினம் இடம்பெறும் விசேட அமர்வில், வரைவு மீதான முழுமையான விவாதம் இடம்பெற்று, இறுதிப் படுத்தப்பட்ட தீர்வுத் திட்டம் வெளியிடப்படும் என அறிவிக்கப் பட்டுள்ளது. (து-வ-5)



## மரண அறிவித்தல்கள்

### அருணாசலம் கமலாகரன்

(ஓய்வு பெற்றதிட்டமிடல் உதவிக் கல்விப் பணிப்பாளர்- தீவகம்)



மலேசியாவைப் பிறப்பிடமாகவும் காரைநகர் S.M.கேணியடி, மல்லிகையை வசிப்பிடமாகவும் கொண்ட அருணாசலம் கமலாகரன் நேற்று (11.04.2016) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருணாசலம்-இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நடராசா-அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் சரோஜினி தேவியின் அன்புக் கணவரும் சுபாகரன் (அவுஸ்திரேலியா), துஷ்யந்தினி (கனடா), ரஜீவ்காந் (ஆசிரியர்-பதுளை சரஸ்வதி மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் சுகந்தா (அவுஸ்ரேலியா), விஜயலிங்கம்(கனடா), காயத்திரி(பதுளை) ஆகியோ ரின் மாமனாரும் கீரன்,நந்தனா, பிரணவன், சாதனா, கிருத் திகன், பானுஜன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

S.M.கேணியடி,
காரைநகர்.

தகவல்:
குடும்பத்தினர்

### சுப்பிரமணியம் சற்குணம்



யாழ்ப்பாணம் ஈச்ச மோட்டையைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலி அரசடி ஒழுங்கையை (கேணியடி)வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சற்குணம் நேற்று (11.04.2016) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அரசடி ஒழுங்கை,
திருநெல்வேலி.
021 221 5458

தகவல்:
குடும்பத்தினர்.

### அரியகுட்டி திரவியம்

(முன்னாள் தலைவர் ஞானவைரவர் கோயில் கட்டப்பிராய்)



பிறப்பு
17.07.1944

இறப்பு
11.04.2016

நாவற்காடு அச்சுவேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வட்டக்குளத் தடி, கட்டப்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட அரிய குட்டி திரவியம் நேற்று (11.04. 2016) திங்கட் கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்ற அரியகுட்டி-முத்துப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற சுந்தரம்-பாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும் செல்வ நாயகியின் அன்புக் கணவரும் சிவநேசன்,கீதா, முகுந்தினி, குமுதினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெயராசாவின் அன்பு மாமனும் விக்கினேஸ்வரன், யோகநாயகி, இராசநாயகி ஆகியோரின் அன்பு மைத்துனரும், தர்மசேகரம், இராசலிங்கம், வன சேகரி ஆகியோரின் சகலனும்,தர்ஷனா(சிற்றி மெடி கெயார்), கீர்த்தனா, யாதுஷன், தசாங்கன், வேணுஜன்,சாஜிதா ஆகி யோரின் அன்புப் பெரியப்பாவும் சஞ்சீவ்,கிசோக் ஆகியோ ரின் மாமனாரும் சந்தோஷின் பாசமிகு பேரனும் ரஞ்சினிதேவி-யோக நாதனின் மாமனாரும் கபிலன் (பிரான்ஸ்),பிரசாந், பிரி யங்கா, சாரங்கா ஆகியோரின் பாசமிகு தாத்தாவுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.04.2016) செவ்வாய்க்கிழமை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக முற்பகல் 10.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வட்டக்குளத்தடி,
கட்டப்பிராய்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கமலேஸ்வரி சின்னத்துரை



கலைமகள் வீதி, நல்லூர் வடக்கு, கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலேஸ்வரி சின்னத்துரை நேற்று (11.04. 2016) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரையின் அன்பு மனைவியும் யசோதரன் (பம்பலபிட்டி இந்துக்கல்லூரி கொழும்பு), கஜேந்தினி ஆகியோரின் பாசமிகு தாயாரும் மஞ்சுளா தேவி, இராஜேஸ் வரன் ஆகியோரின் மாமியாரும் துஷாந்த், டிலோஜன், கஜிந், கருணி, சஜிந், கர்சினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.04.2016) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கலைமகள்வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்
077 323 8016

### விநாசித்தம்பி இராசலிங்கம்

பிறப்பு 06.06.1933
இறப்பு 11.04.2016



தும்பளையைப் பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட விநாசித்தம்பி இரா சலிங்கம் நேற்று(11.04. 2016) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் விநாசித்தம்பி -அன்னபாக்கியம் தம்பதிக்ளின் சிரேஷ்ர புத்திரனும் ஜெயதாவின்(லலிதா) பாசமிகு கணவரும் ஜெயராஜ், சிவராஜ், நிர்மலா ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற இராஜரட்ணம் மற்றும் குலராஜசிங்கம் காலஞ்சென்ற இராசதுரை ஆகியோரின் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.04.2016) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 3.00 மணிக்கு கோரியடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

### சில்வெஸ்ரர் மருசலீன்



கிளாலியைப் பிறப்பிடமாகவும் நாவாந்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட சில்வெஸ்ரர் மருசலீன் நேற்று (11.04.2016) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார்லூர்த்தம்மா-சொர்ணக்கிளி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சில்வெஸ்ரர் -அடைக்கலம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான புர்னாந்து -அக்கினேஸ் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான நீக்கிலாப் பிள்ளை, அந்தோனிப்பிள்ளை, சூசைப்பிள்ளை, அக்கினேஸ் ஆகியோரின் உடன் பிறப்பும், பிறான்சிஸ், மரியநாயகம் ஆகியோரின் மைத்துனரும், கீதபொன்கலன் (பிரான்ஸ்), அரியமணி, நேசமணி, சந்திரா (பிரான்ஸ்), கிறேஸ், அருள்மணி, காலஞ்சென்ற சில்வெஸ்ரர் (ராசா) மற்றும் செல்லா ஆகியோரின் பாசமிகு தந்தையும், மொறின் (பிரான்ஸ்), செபனேசன், சூட்டி, காலஞ்சென்ற றோமன் மற்றும் நவம், காலஞ்சென்ற அன்ரன் மற்றும் மெலானி ஆகியோரின் அன்பு மாமனும், செபறெக்சன், தங்கா, சிந்து, தீபன், வவா, ஜெறோம், அன்ரனிகிருஸ்ரி, ஜெறோமி, ஜெறோன் (பிரான்ஸ்), ஜெனி, றாஜ், வினி, சர்மினி, மரிஸ்ரெலா, ஜெசி, டனு, சதீஸ், சுசீலா, பிறேமன், பிறின்சன், ஸ்ரெபான், ஸ்ரெலான் ஆகியோரின் பாசமிகு பேரனும், றொகான், றெனுசன் ஆகியோரின் பூட்டனாரும் ஆவார்

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை இன்று (12.04.2016) செவ்வாய்க்கிழமை காலை 9மணிக்கு நாவாந்துறையில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு கிளாலி இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு கிளாலி புனித தோமையார் ஆலயத்தில் பி.ப. 3.30 மணிக்கு திருப்பலியுடன் நல்லடக்கம் செய்யப்படும் .இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

348, பீச்றோட்,
நாவாந்துறை.

தகவல்:
மனைவி.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பந்து வீச்சே வெற்றிக்குக் காரணம் -டோனி

ஐ.பி.எல். தொடரில் மும்பை அணிக்கு எதிரான லீக் ஆட்டத்தில் சிறப்பாகச் செயற்பட்ட பந்து வீச்சாளர்களுக்கு புனே அணித்தலைவர் டோனி பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

மும்பை வான்கடே மைதானத்தில் நடந்த இந்தஆட்டத்தில் புனே அணி 9 இலக்குகளால் மும்பையை வீழ்த்தி முதல் வெற்றியைப் பதிவு செய்தது. இந்த நிலையில் மும்பை அணிக்கு எதிராக அபாரமாக பந்துவீசி விரைவில் இலக்குகளை எடுத்த பந்துவீச்சாளர்களை டோனி பாராட்டியுள்ளார்.


முதல் ஆட்டத்திலேயே வெற்றிபெற்றிருந்தாலும் எங்களது தொடக்கம் மிகவும் நல்லதாக அமைந்துள்ளது என்று நான் நினைக்கவில்லை எனத் தெரிவித்த டோனி, பந்துவீச்சாளர்களே வெற்றிக்கு முக்கிய காரணம் என்றும் தெரிவித்துள்ளார். மேலும், 66 ஓட்டங்களைக் குவித்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய தொடக்க வீரர் ரகானேயையும் அவர் பாராட்டியுள்ளார். தற்போது ரகானேயுடன் நெருங்கிப் பழக நல்ல வாய்ப்புக் கிடைத்திருப்பதாகவும் டோனி குறிப்பிட்டுள்ளார். (ம)


புனேயின் பந்து வீச்சாளர் மிச்செல் மார்ஷ்.

## கூடைப்பந்தாட்டத் தொடர்

யாழ்ப்பாணம், ஏப். 12
சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு யாழ். இந்துக் கல்லூரியின் பழைய மாணவர்களின் யுத் விங் அமைப்பு கூடைப்பந்தாட்டத் தொடர் ஒன்றை நடத்த திட்டமிட்டுள்ளது.

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான இந்தத் தொடரின் ஆட்டங்கள் யாழ். இந்துக்கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இன்றும் நாளையும் இடம்பெறவுள்ளன. (ம-23)



# இலங்கைத் தெரிவுக்குழுவின் தலைவராகிறார் ஜெயசூரியா?

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் சனத் ஜெயசூரியா மீண்டும் இலங்கை அணிக்கான தெரிவுக் குழுவின் தலைவராக தெரிவு செய்யப்படவுள்ளதாக அறியவருகிறது. அரவிந்த டி சில்வா தலைமையிலான தெரிவுக்குழு ரி-20 உலகக்கிண்ண அணியை தெரிவு செய்தது. ஆனால் மோசமான பெறுபேற்றை வெளிப்படுத்தி இலங்கை லீக் சுற்றுடன் தொடரில் இருந்து வெளியேறியது. இந்த நிலையில் இலங்கை அணியின் தோல்விக்கு பொறுப்பேற்றுக் கொண்ட அரவிந்த டி சில்வா மேற்கொண்டு தனது ஒப்பந்தத்தை நீடித்துக் கொள்ள விரும்பவில்லை. இதனால் புதிய தெரிவுக் குழு தலைவரை தெரிவு செய்யும் நடவடிக்கையில் இறங்கியுள்ளது கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை. இந்த நிலையில் மீண்டும் சனத் ஜெயசூரியா தெரிவுக் குழுவின் தலைவராகத் தெரிவு செய்யப்படவுள்ளதாக இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையில் இருந்து வெளிவந்த தகவல்கள் தெரிவிக்கின்றன. 2014ஆம் ஆண்டு இலங்கை ரி-20 உலகக்கிண்ணத்தை வென்றபோது சனத் ஜெயசூரியாதான் தெரிவுக் குழுவின் தலைவராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# தெ.ஆபிரிக்காவுக்காக களமிறங்க விருப்பப்படும் கெவின் பீற்றர்சன்

இங்கிலாந்து அணியில் இருந்து ஓரங்கட்டப்பட்ட நட்சத்திர வீரரான கெவின் பீற்றர்சன் தனது பிறந்த நாடான தென்னாபிரிக்காவுக்காக விளையாட விருப்பம் தெரிவித்துள்ளார். அடிக்கடி சர்ச்சையில் சிக்கிய பீற்றர்சன், 2014ஆம் ஆண்டுக்குப் பிறகு இங்கிலாந்து அணியில் இருந்து நிரந்தரமாக ஓரங்கட்டப்பட்டார். ஆனாலும் அவர் கழகங்களுக்கு இடையிலான ஆட்டங்களில் தொடர்ந்து விளையாடுகிறார். நடைபெற்றுவரும் ஐ.பி.எல். தொடரில் புனே அணிக்காக விளையாடுகிறார். இதனால் அவர் இனியும் சர்வதேச கிரிக்கெட்டுக்கு திரும்ப முடியும் என்று நம்புகிறார். ஆனால் இங்கிலாந்து அணிக்காக அல்ல, தென்னாபிரிக்கா அணிக்காக. பீற்றர்சன் பிறந்த நாடு தென்னாபிரிக்கா. அங்கு இடம் கிடைக்காமல்தான் இங்கிலாந்துக்கு இடம் பெயர்ந்தார்.

ஒரு அணிக்காக விளையாடிய வீரர் இன்னொரு அணிக்கு தாவ வேண்டும் என்றால் அதற்கு 4 ஆண்டுகள் காத்திருக்க வேண்டும். எனவே 2018ஆம் ஆண்டில்தான் அதற்குரிய தகுதியை பீற்றர்சன் எட்ட முடியும். அப்போது அவரது வயது 37 ஆக இருக்கும். இது தொடர்பாக பீற்றர்சன் தெரிவிக்கையில் - நிச்சயம் இதை ஒரு வாய்ப்பாகப் பார்க்கிறேன். ஆனால் அதற்கு இன்னும் ஓராண்டுக்கு மேல் இருக்கிறது. எனவே என்ன நடக்கிறது என்பதை பொறுத்திருந்து பார்ப்போம். சர்வதேச கிரிக்கெட்டை தவற விடுவது மிகவும் வருத்தம் தருகிறது- என்றார். (ம)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஏப். 12

**வளர்மதி வி.க.தொடர்**

சித்திரை புத்தாண்டை முன்னிட்டு கரவெட்டி கிழக்கு வளர்மதி விளையாட்டுக்கழகம் மின்னொளியில் நடத்திவரும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கரவெட்டி கிழக்கு வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வாலிபர் வட்ட அணியை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் அணி மோதவுள்ளது. இரவு 8மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆனைக்கோட்டை பிரதீப் அணியை எதிர்த்து ஸ்ரார் அணி மோதவுள்ளது. இரவு 9 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புத்தூர் கலைமதி அணியை எதிர்த்து நவஜீவன் அணி மோதவுள்ளது. 10 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இளவாலை மத்திய அணியை எதிர்த்து மட்டுவில் மோகனதாஸ் அணி மோதவுள்ளது.

**கலைமகள் சனசமூக நிலைய கரப்பந்தாட்டத் தொடர்**

தொண்டமானாறு கலைமகள் சனசமூக நிலையத்தினால் குறித்த சனசமூக நிலையத்தின் மைதானத்தில் நடத்தப்பட்டுவரும் கரப்பந்தாட்டத் தொடரில் இன்று இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அச்சுவேலி தோப்பு வாலிபர் அணியைஎதிர்த்து அச்சுவேலி கலைமகள் அணி மோதவுள்ளது. தொடர்ந்து இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆவரங்கால் மத்திய அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் வசந்த சிறி அணி மோதவுள்ளது.

**அல்ஹிஜிரா வி.கழக தொடர்**

வவுனியா அல்ஹிஜிரா விளையாட்டுக்கழகம் வவுனியா கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையில் நடத்திவரும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலய அஷ்ரப் ஞாபகார்த்த மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வடதாரகை அணியை எதிர்த்து யங்ஸ்ரார் அணி மோதவுள்ளது. (ம-23)

# சென்.பீற்றர்ஸ், நியூட்டன் அணிகள் முன்னேறின இளைஞரின் தொடரில்

கரணவாய், ஏப். 12
திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம் நடத்திவரும் கால்பந்தாட்டத் தொடரில் நவாலி சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகமும் சமரபாகு நியூட்டன் விளை யாட்டுக் கழகமும் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளன.

**நவஜீவன்ஸ் - சென்.பீற்றர்ஸ்**

ஆட்டங்கள் திக்கம் இளைஞர் வி.கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகமும்,நவாலி சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகமும் பலப் பரீட்சை நடத்தின. ஆரம்பம் முதல் இரு அணிகளுக்கும் வாய்ப்புக்கள் கிடைத்த போதிலும்,எவையும் கோலாக மாற்றம் பெறவில்லை. ஆனாலும் 17 ஆவது நிமிடத்தில் கிடைத்த சந்தர்ப்பத்தைக் கச்சிதமாகப் பயன்படுத்தி தமது அணிக்கான முதல் கோலைப் பெற்றுக் கொடுத்தார் சென். பீற்றர்ஸ் அணியின் முன்கள வீரர் நீதன். இதுவே முதல் பாதியில் பெறப்பட்ட ஒரே கோலுமாக அமைந்தது. இரண்டாம் பாதியின் முதல் 5 நிமிடங்கள் முடிவதற்குள் கிறேசியன் அடுத்தடுத்து இரண்டு கோல்களைப் பதிவு செய்ய சென்.பீற்றர்ஸ் அணியின் வெற்றி உறுதிப் படுத்தப்பட்டது. இருப்பினும் விடாத போராட்டத்தை வெளிப்படுத்தியது நவஜீவன்ஸ். அந்த அணியின் பொபிநாதன், உசானந் முறையே 32ஆவது, 40 ஆவது நிமிடங்களில் கோல்களைப் பதிவுசெய்தனர். நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்கள் முடிவடைய முடிவில் 3:2 என்று வெற்றிபெற்றது நவாலி சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகம்.

**நியூட்டன் - யூனியன்**

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகமும் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழகமும் மோதின. கோல் கணக்கு ஆரம்பிக்கப்படாமல் ஆட்டம் முடிவுக்கு வந்தது. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றி தீர்மானிக்கப்பட வேண்டிய நிலைமை ஏற்பட்டது. சமநிலைத் தவிர்ப்பு உதை யில் 4:3 என்ற கோல் கணக்கில் சமரபாகு நியூட்டன் கழகம் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றது. (ம-108)

## காரைநகர் பிரதேச செயலக வருடாந்த விளையாட்டு விழா

காரைநகர் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான வருடாந்த விளையாட்டு விழா இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பிரதேச செயலக விளையாட்டுமைதானத்தில் இடம்பெறவுள்ளது. பிரதேச செயலாளர் திருமதி தே.பாபு தலைமையில் நடைபெறவுள்ள இந்த விளையாட்டு விழாவுக்கு பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் பா.செந்தில்நந்தனன் கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினராக வட மாகாண விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் இ.குருபரன், கௌரவ விருந்தினராக யாழ். மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் க.விஜிதரன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.(ம)

## சென்.ஜோசப், சென்.லூசியா அணிகள் வெற்றிபெற்றன

மன்னார் கால்பந்தாட்ட லீக்கும் ஜோசவாஸ்நகர் யுனைற்றெட் விளையாட்டுக் கழகமும் இணைந்து மின்னொளியில் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் சென்.ஜோசப், சென்.லூசியா அணிகள் வெற்றிபெற்றுள்ளன.


ஆட்டங்கள் ஜோசவாஸ்நகர் யுனைற்றெட் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இரவு 7மணிக்கு இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் பனங்கட்டுகொட்டு சென். ஜோசப் அணியை எதிர்த்து தேவன்பிட்டி சென்.சேவியர் அணி மோதிக் கொண்டது. இதில் பனங்கட்டுகொட்டு சென்.ஜோசப் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. தொடர்ந்து இரவு 8.30 மணிக்கு இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் பள்ளிமுனை சென்.லூசியா அணி அந்தோனியார்புரம் சென்.அன்ரனிஸை 1:0 என்றகோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புனேயின் பந்து வீச்சாளர்களால் படைக்கப்பட்டது புதிய சாதனை

ஐ.பி.எல். தொடரில் கடந்த சனிக்கிழமை நடந்த மும்பை அணிக்கு எதிரான ஆட்டத்தில் புனே அணியின் பந்துவீச்சாளர்களால் ஓர் சாதனை படைக்கப்பட்டுள்ளது.

இந்த ஆட்டத்தில் புனே அணியின் இசாந்த் சர்மா (ரோகித் சர்மா), மிச்செல் மார்ஷ் (பாண்டியா), ரஜத் பாட்டியா (பொலார்ட்) மற்றும் அஸ்வின் (அம்பதி ராயிடு நால்வரும் தங்களது முதல் பந்துப்பரிமாற்றத்தின் முதல் பந்திலே இலக்கை வீழ்த்தினர். ஐ.பி.எல். வரலாற்றில் இதுபோன்ற ஒரு நிகழ்வு நடப்பது இதுவே முதன்முறையாகும். (ம)



## போக்லே நீக்கம்

நடப்பு வருடத்தின் ஐ.பி.எல். தொடருக்கான வர்ணனையாளர் பொறுப்பில் இருந்து ஹர்சா போக்லே நீக்கப்பட்டுள்ளது கிரிக்கெட் உலகில் சர்ச்சையை கிளப்பியுள்ளது.

சமீபத்தில் முடிவடைந்த ரி–20 உலகக்கிண்ணத் தொடரின் முதல் ஆட்டம் நாக்பூரில் நடை பெற்றது. அந்த ஆட்டத்தின் போது ஹர்சா போக்லே மராட்டிய கிரிக்கெட் வாரிய நிர்வாத்தினருடன் வாக்குவாதத்தில் ஈடுப்பட்டதாக கூறப்படுகிறது. போக்லே நீக்கப்பட்டதற்கு இது முக்கிய காரணமாக இருக்கலாம் என்று நம்பப்படுகின்றபோதிலும் தான் நீக்கப்பட்டதற்கான காரணம் தெரிவிக்கப்படவில்லை என்று அவர் தெரிவித்துள்ளார். (ம)



## சம்பியனானது நவஜீவன்ஸ் வி.கழகம் இலகுவாக வீழ்ந்தது கொம்மாந்தறை

கரணவாய், ஏப். 12

கொம்மாந்தறை இளைஞர் விளையாட்டுக் கழகத்தை 6 இலக்குகளால் வீழ்த்தி சதாசிவம் கிண்ணத்தைக் கைப்பற்றியது உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம்.

அமரர் வைரமுத்து சதாசிவம் ஞாபகார்த்த கிண்ணத்துக்காக கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்திய துடுப்பாட்டத் தொடரின் இறுதியாட்டம் நேற்றுமுன்தினம் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம் பெற்றது. இறுதியாட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகமும் கொம்மாந்தறை இளைஞர் விளையாட்டுக் கழகமும் மோதின. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற நவஜீவன்ஸ் அணி முதலில் களத்தடுப்பைத்தெரிவு செய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய கொம்மாந்தறை அணி 8:2 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 47 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

48 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கிய நவஜீவன்ஸ் அணி 8:3 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்கை மட்டும் இழந்து இலக்கை அடைந்தது. ஆட்டநாயகனாக நவஜீவன்ஸ் அணியின் பிரியந்தனும் தொடராட்ட நாயகனாக கொம்மாந்தறை இளைஞர் கழகத்தின் மயூரனும் தெரிவு செய்யப்பட்டனர். (ம-108)




## சம்பியனானது பொற்பதி அணி

யாழ்ப்பாணம், ஏப். 11

அரியாலையின் சுதேசிய திருநாள்கொண்டாட்த்தை முன்னிட்டு யாழ். மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடத்தப்பட்ட 6 வீரர்கள் பங்குபற்றும் 5 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடரில் பொற்பதி அணி சம்பியனானது.

அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் கார்மேல்போய்ஸ்அணியை எதிர்த்து பொற்பதி அணி மோதிக் கொண்டது. முதலில் துடுப்பெடுத்தாடிய கார் மேல் போய்ஸ் அணி 5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 3 இலக்குகளை இழந்து 59 ஓட்டங்களைப் பெற் றது. அதிகபட்சமாக அனோசன் 23 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் பொற்பதி விளையாட்டுக் கழக அணி சார்பில் சுபாஸ், பிரபு, சத்தியன் மூவரும் தலா ஓர் இலக்கை வீழ்த்தினர்.

60 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பொற்பதி அணி 4:3 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 3 இலக்கை இழந்து இலக்கை அடைந்தது. அதிகபட்சமாக பிரபு 33 ஓட்டங்களையும், ருக்ஸ்மன் 14 ஓட்டங்களையும், சத்தியன் 10 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் கார் மேல் போய்ஸ் விளையாட்டுக்கழக அணியின் சார்பில் துசியந்தன் 2 இலக்குகளை வீழ்த்தினார். (ம-23)

## நல்லூர் தெற்கு சனசமூக நிலைய வி.கழகம் சம்பியனானது அரியாலையின் துடுப்பாட்டத்தில்

யாழ்ப்பாணம், ஏப். 12

அரியாலையின் சுதேசிய திருநாள் கொண்டாட்டத்தை முன்னிட்டு உள்ளூர் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடத்தப்பட்ட 11 வீரர்கள் பங்குபற்றும் 10 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடரில் நல்லூர் தெற்கு சனசமூக நிலைய அணி சம்பியனானது.

அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் நல்லூர் தெற்கு சனசமூகநிலையஅணியை எதிர்த்து திருமகள் சனசமூக நிலைய அணி மோதிக் கொண்டது. முதலில் துடுப்பெடுத்தாடிய திருமகள் சனசமூக நிலைய அணி சகல இலக்குகளையும் இழந்து 49 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக அனோசன் 12 ஓட்டங்களையும் சஞ்ஜீவன் 11 ஓட்டங்களையும் எமக்சின் ஆட்டமிழக்காமல் 10 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் நல்லூர் தெற்கு சன சமூக நிலைய அணியின் சார்பில் கார்திக், சுரேஸ் இருவரும் தலா 3 இலக்குகளையும், நிருபரன், நிதர்சன் இருவரும் தலா ஓர் இலக்குகளையும் வீழ்த்தினர்.



50 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நல்லூர் தெற்கு சனசமூக நிலைய அணி 8.4 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து இலக்கை அடைந்தது. அதிகபட்சமாக சீலன் 17 ஓட்டங்களையும், திருவரன் 9 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் திருமகள் சனசமூக நிலைய அணியின் சார்பில் விதுசன், நிருசன் இருவரும் தலா 2 இலக்குகளை வீழ்த்தினர். (ம-23)

## ரியல் மட்ரிட் அபார வெற்றி

ஸ்பானியக் கால்பந்தாட்ட கழகங்களுக்கிடையே இடம்பெற்று வரும் லா லிகாத் தொடரில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டமொன்றில் ரியல் மட்ரிட் அணி வெற்றிபெற்றுள்ளது.

ரியல் மட்ரிட், ஐபார் ஆகிய அணிகளுக்கிடையில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில், 4:0 என்ற கோல் கணக்கில் ரியல் மட்ரிட் வெற்றி பெற்றது. ரியல் மட்ரிட் சார்பாக ஜேம்ஸ் றொட்ரிகாஸ், லூகாஸ் வாக்கீஸ், கிறிஸ்டியானோ றொனால்டோ, ஜெஸி ஆகியோர் முறையே 5ஆவது, 18ஆவது, 19 ஆவது, 39ஆவது நிமிடங்களில் கோல்களைப் பதிவுசெய்தனர். இந்த வெற்றியுடன் லா லிகா புள்ளிகள் தரவரிசையில், 72 புள்ளிகளுடன் ரியல் மட்ரிட் மூன்றாமிடத்தில் இருக்கின்றது. (ம)

## பார்சிலோனா அதிர்ச்சித் தோல்வி

நடைபெற்றுவரும் லா லிகா தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டமொன்றில் பார்சிலோனாவுக்கு அதிர்ச்சி கொடுத்தது ரியல் சொஸைற்றெட் அணி.

ரியல் சொஸைற்றெட்டை விட பார்சிலோனா பலமான அணி என்பது அனைவரும் அறிந்ததே. இருப்பினும் ரியல் சொஸைற்றெட் கழகத்தின் மைதானத்தில் ஆட்டம் நடைபெற்றதால் இந்த ஆட்டம் பெரிதும் எதிர்பார்க்கப்பட்டது. ஏனெனில் 2007ஆம் ஆண்டுக்கு பின்னர் ரியல் சொஸைற்றெட்டை அந்த அணியின் மைதானத்தில் பார்சிலோனா [illegible] மைதானத்தை நன்கு பயன்படுத்திய ரியல் சொஸைற்றெட் பார்சிலோனாவை 1:0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது. இந்த ஆட்டத்தில் தோல்வியடைந்தாலும் 76 புள்ளிகளுடன் லா லிகா தரவரிசையில் பார்சிலோனா தொடர்ந்தும் முதலிடத்தில் உள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஞானமுருகன் அபாரம்

யாழ்ப்பாணம், ஏப். 12
தெல்லிப்பழை நாமகள் சனசமூக நிலையத்தின் 53ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு,நாமகள் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்டுவரும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் ஞானமுருகன் அணி வெற்றி பெற்றுள்ளது.
நாமகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் மாலை 4.45 மணிக்கு இடம்பெற்ற இந்த ஆட்டத்தில்,மயிலங்காடு ஞானமுருகன் அணியை எதிர்த்து கரணவாய் மத்திய அணி மோதிக் கொண்டது. இதில் ஞானமுருகன் அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

## ஈஸ்வரன் இலகு வெற்றி

யாழ்ப்பாணம், ஏப். 12
வவுனியா அல்ஹிஜிரா விளையாட்டுக் கழகம் வவுனியா கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையில் நடத்திவரும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் ஈஸ்வரன் அணி வெற்றி பெற்றுள்ளது.
விலகல் முறையிலான இந்தத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலய அஷ்ரப் ஞாபகார்த்த மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் அல்ஹிஜிரா அணியை எதிர்த்து ஈஸ்வரன் அணி மோதிக் கொண்டது. இதில் ஈஸ்வரன் அணி 8:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)




**வீடு விற்பனைக்கு**

சாவகச்சேரி Post Office Road பெருங்குளம் சந்தியில் 6 பரப்புக்காணி, 5 அறைகளுடன் 4 குளியல் அறைகளையும் கொண்ட வசிக்கக்கூடிய வீடு விற்பனைக்குண்டு.

077 788 9651, 071 925 9257

**பணியாளர் தேவை**

யாழ்.நகரில் இயங்கும் முதல்தர உல்லாசப் பயணிகள் விடுதிக்கு கீழ்க்காணும் பணி நிலை களிற்கு பணியாளர் தேவை.

* வரவேற்பாளர் : ஆண் /பெண்
கணினி அறிவு மும்மொழிகள் தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது
* உணவு பரிமாறுபவர்
* சமையலாளர்
* சாரதி

*இப்பணிநிலைகளில் முன் அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.
விண்ணப்பங்களை 2016.04.18 ஆம் திகதிக்கு முன்னர் கீழ்க்காணும் முகவரிக்கு (உங்கள் தொலைபேசி இலக்கத்தைக் குறிப்பிட்டு) அனுப்பி வைக்கவும்.

விளம்பர இல - 5097
மே/ பா உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.




## குஜராத் சிங்கங்களின் வேட்டைக்கு இலக்காகினர் பஞ்சாப்பின் அரசர்கள்

ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற கிங்ஸ் லெவின் பஞ்சாப் – குஜராத் லயன்ஸ் அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் 5 இலக்குகளால் வெற்றிபெற்றது குஜராத் லயன்ஸ்.
நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற குஜராத் லயன்ஸ் முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது பஞ்சாப். ஆரம்ப வீரர்களாக முரளி விஜய் மற்றும் வோக்ரா. இணைப்பாட்டம் கச்சிதமாக நிலைபெற்றது. பவர் பிளேய் முடிவதுக்குள் பஞ்சாப் அணிக்கு பலமான அடித்தளம் அமைக்கப்பட்டாயிற்று. ஆறு பந்துப்பரிமாற்றங்களின் நிறைவில் 52 ஓட்டங்களைக் குவித்திருந்தது பஞ்சாப். அணியின் ஓட்ட எண்ணிக்கை 78ஆக இருந்தபொழுது 38 ஓட்டங்களுடன் வீழ்ந்தார் வோக்ரா. முரளி விஜயை போல்ட் செய்தார் ஜடேயா. பஞ்சாப்பின் மத்திய வரிசை அச்சுறுத்தல்களான மில்லர், மக்ஸ்வெல் இருவரையும் முறையே 15 ஓட்டங்களுடனும் 2 ஓட்டங்களுடனும் அனுப்பிவைத்தார் பிராவோ. திடீர் இலக்குச் சரிவால் திக்குமுக்காட ஆரம்பித்தது பஞ்சாப். சகா, ஸ்ரொய்னிஸ் இணை அதிகம் நிதானித்தது. நிதானத்துக்கு ஏற்ப சராசரியும் சடுதியான வீழ்ச்சிகாணவே செய்தது. ஸ்ரொய்னிஸ் அவ்வப்பொழுது சில பவுண்டரிகளை பதிவுசெய்தாலும் சகாவின் இன்னிங்ஸில் அவை இருக்கவேயில்லை. இருவரையும் வெளியேற்றினார் பிராவோ. சகா 20 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். இதற்காக அவர் 25 பந்துகளை எடுத்திருந்தார். இவற்றில் ஒன்றுகூட பவுண்டரியாக மாறவில்லை. முடிவில் பஞ்சாப் 161-6. மொத்தத்தில் அந்த அணியின் ஆரம்பத்துடன் ஒப்பிடுகையில் முடிவு 15 தொடக்கம் 20 ஓட்டங்கள் வரை குறைவாகவே இருந்தது.
பந்துவீச்சில் குஜராத் அணியின் சார்பாக பிராவோ 4 இலக்குகளையும், ஜடேயா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.
பதிலுக்கு களமிறங்கியது குஜராத். ஆரம்ப வீரர்களாக பின்ஞ் மற்றும் மக்கலம். முதல் பந்துப்பரிமாற்றத்தின் இறுதிப்பந்தில் சகாவின் மின்னல் வேக ஸ்டம்பிங் மூலம் வெளியேற்றப்பட்டார் மக்கலம். மறுமுனையில் அடிக்கொருதடவை பந்தை பவுண்டரிக்கு அனுப்பியவண்ணம் நிலைத்து நின்றார் பின்ஞ். ரெய்னாவின் துடுப்பில் இருந்து இரண்டு சிக்சர்கள் சீறிப்பாய்ந்தன. இருநூறுக்கும் அதிகமான சராசரியைப் பேணினாலும் ரெய்னாவால் முடிந்தது 20 ஓட்டங்கள் மட்டுமே. பின்சுக்கு அதிகமான வாய்ப்புக்களை வழங்கி ஒரு முனையில் இலக்குச் சரிவு ஏற்படாமல் காத்துநின்றார் டினேஸ் கார்திக். 32 பந்துகளில் அரைச்சதம் கடந்த பின்ஞ் 74 ஓட்டங்களுடன் பவிலியனுக்குச் சென்றார். ஜடேயாவால் முழுமையாகப் பத்து ஓட்டங்களையேனும் பெறமுடியவில்லை. பின்ஞ் ஆட்டமிழக்க அவரது இடத்தை கச்சிதமாக நிவர்த்தி செய்தார் டினேஸ் கார்திக். அவர் தொடர்ந்தும் நிலைக்க 14 பந்துகள் மீதமிருக்க பஞ்சாப்பை வீழ்த்தியது குஜராத்.
பந்துவீச்சில் பஞ்சாப் சார்பாக சன்டீப் சர்மா, மிச்செல் ஜோன்சன், ஸ்ரொய்னிஸ், சகு நால்வரும் தலா ஓர் இலக்கை வீழ்த்தினர். (ம)

## சென்னையை நினைத்து உணர்ச்சிவசப்பட்டேன் – டோனி

சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் உடையை அணியாமல் களமிறங்கிய போது மிகவும் உணர்ச்சி வசப்பட்டதாக டோனி தெரிவித்துள்ளார்.
சென்னை அணிக்கு விளையாடாமல் போனது குறித்து நிருபர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதில் வழங்குகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.அவர் மேலும் தெரிவிக்கையில் – நான் புனே அணிக்கு விளையாடப் போகிறேன் என்று தெரியும். ஆனால் புதிய அணியின் உடையை அணிந்து கொண்டு வீரர்களின் பட்டியோடே லாடு நாணயச்சுழற்சி செய்வதற்காகச் சென்றபோதுதான் மிகவும் உணர்ச்சிவசப்பட்டேன். ஆனால் சென்னை அணிக்கு விளையாடிது போல் புனே அணிக்கும் விளையாடுவேன். அதில் எந்த மாற்றமும் இல்லை என்றார். (ம)






இந்திய கிரிக்கெட் அணியின் ஜாம்பவானான சச்சினின் வாழ்க்கையை மையமாக வைத்து எடுக்கப்பட்டுவரும் படத்தின் முதலாவது போஸ்டர் வெளியிடப்பட்டுள்ளது. (ம)

## ஹொங்கொங் அணியுடன் நிறுவனங்கள் ஒப்பந்தம்

ரி-20 உலகக்கிண்ணத் தொடருக்குப் பின்னர் ஹொங்கொங் அணி வீரர்களின் மதிப்பு அதிகரித்துள்ளதுடன், விளையாட்டு நிறுவனங்களுடன் ஒப்பந்தமும் செய்யப்பட்டுள்ளனர்.
ரி-20 உலகக்கிண்ணத் தொடரின் தகுதிகாண் ஆட்டங்களில் ஹொங்கொங் அணி சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்தியது. இதையடுத்து அந்த அணியின் தரத்தை மேம்படுத்துவதற்கு நிதியுதவி வழங்க ஹொங்கொங் விளையாட்டு நிறுவனமொன்று முன்வந்துள்ளது. 2018ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ரி-20 உலகக்கிண்ணத் தொடர் மற்றும் ஆசியக்கிண்ணத் தொடர் போன்றனவற்றுக்கு வீரர்கள் தங்களைத் தயார்படுத்தி வரும் நிலையில், விளையாட்டு அமைப்பு அளித்துள்ள ஆதரவு இன்றியமையாததாகும் என கிரிக்கெட் சங்க இயக்குநர் தெரிவித்துள்ளார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.04.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.